
கல்கி

KALKI 21-11-1976 75 காசு





வாழ்க்கையில் ஜயமாக வளம் பெறும் ஆடவர் ஒருவர்...
...அதற்குத் துணை செய்ய அழகான ஆடைகளையும் அணிகிறார்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை சேர்த்தியான துணிமணிகள்தான்!



போடு புதிர்!

கல்கி



படத்தில் கண்டுள்ள ஒன்பது புள்ளிகளையும் கையை எடுக்காமல் நான்கு நேர் கோடுகளால் இணைக்க முடியுமா?

—ஆர். நாராயணன்

நவம்பர் 21, 1976

அநல ௵, கார்த்திகை 6



ஏழு தீக்குச்சிகள் மேற்கண்டவாறு வைக்கப்பட்டுள்ளன. ஏதேனும் ஒரே ஒரு தீக்குச்சியை மாத்திரம் மாற்றி யமைத்து, ஒரு சமன்பாட்டை (equation) உருவாக்க வேண்டும். குச்சியை ஒடிக்கவோ, தூர எறியவோ கூடாது.

—ரமணி

(விடைகள் 34ம் பக்கம்)


பட்டு மலர்
மேனியில்
தொட்டு வரும்
சந்தனம்
VINIBA
SANDAL
TOILET POWDER
VINIBA PRODUCTS
KUMBAKONAM S. INDIA
VINIBA
SANDALIZED
LUXURY TALC
VINIBA PRODUCTS
SANDAL WOOD
VINIBA
சருமத்திற்கு மென்மையும், பொலிவும்,
வேனல் கட்டியிலிருந்து
பாதுகாப்பும் தரத்தக்க
மைசூர் சந்தனம், அபூர்வ
இந்திய மூலிகைகள்,
மேல்நாட்டு வாசனை
திரவியங்கள்,
உயர்ந்த அத்தர் வகைகள்,
தூய புனுகு, ஜவ்வாது,
அரகஜா இவற்றை ஒருங்கே கலந்து
நவீன விஞ்ஞான ரீதியில்
''மைக்ரோஃபைன்''
முறையில் தயாரிக்கப்படுவது.
பாவையர் நித்தம்
விரும்பும் விநிபா
சந்தன டால்க்
விநிபா ப்ராடக்ஸ்
கும்பகோணம்
Criterion VNB 3347 TM

எதிர்க் கட்சிகளின் எதிர்காலம்!

சிலருக்குப் பிடித்திருக்கலாம். பலருக்குப் பிடிக்காமல் போகலாம். பெரும்பாலோருக்குப் புரியாமலே இருக்கலாம்.

எப்படியானாலும் சரி, 42வது மாறுதல் மசோதா நிறைவேறி விட்டதாகவே கொள்ள வேண்டியதுதான்.

இனி எதிர்காலத்தில் என்றோ வேறு கட்சி ஆட்சிக்கு வந்து குறைபாடுகளைத் திருத்த முற்படும் வரை 42வது மாறுதலை உள்ளடக்கியதுதான் நமது சாசனம்.

அதனை மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதுவே ஜனநாயகப் பண்பு என்பதுடன் சாசனம் பிரஜைகளுக்கு விதிக்கும் கடமைகளுள் முதல் கடமை சாசனத்தை மதிப்பது என்பதை மறப்பதற்கில்லை.

சாசன மாறுதலையொட்டி என்னென்ன புதிய சட்டங்களை மத்திய அரசு இயற்றும் அல்லது இயற்றாமல் இருக்கும் என்பது நமக்குத் தெரியாது.

ஏழைகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதுதான் எல்லாக் கட்சிகளுக்கும் அடிப்படைக் கொள்கை. ஆனால் அவர்களின் தரத்தை எப்படி உயர்த்துவது, தேசப் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படச் செய்வது என்பதில் கொள்கை மாறுபாடுகள் இருக்கக் கூடும்.

அதே போல் ஜனநாயக அமைப்பு முறைகளில், இன்னும் அதிகமான சுதந்திரங்கள் மக்களுக்கு வேண்டும் என்றோ, நிர்வாகத்தில் மக்களின் செல்வாக்கு இன்னும் அதிகமாக உணரப்பட வேண்டும் என்றோ வாதித்து அதற்கான வழி வகைகளை ஆராயலாம்.

சமூக வாழ்வு என்னும் போது கல்வி, குடியிருப்பு, சுகாதாரம், குடும்பக்கட்டுப்பாடு போன்ற பல அம்சங்களில் சிறந்த மாற்றுத் திட்டங்களைச் சமர்ப்பிக்கலாம்.

இப்படியெல்லாம் திட்டம் தீட்டிச் சொற்பொழிவாற்றினால் போதாது.

கல்கி மலர் 36 இதழ் 17

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

ஆனால் தேர்தல்கள், கட்சிகள் சம்பந்தப்பட்ட சில பல புதிய சட்டங்கள் நிறைவேறும் என்ற அளவுக்கு நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

இந்தப் புதிய சூழலில் பாரதத்தில் எதிர்க்கட்சிகளின் எதிர்காலம் என்ன?

குறுகிய பிரதேசப் பித்து கொண்ட கட்சிகள், ஜாதி, இன, மத, மொழி அடிப்படைகளில் ஆதரவு தேடும் கட்சிகள், பிரிவினைவாதிகள், வன்முறை சக்திகள், இதயத்தை வேற்று நாட்டுக்கு அடகு வைத்துள்ள கும்பல்கள் ஆகியவற்றுக்கு எதிர்காலம் இருப்பதாகவே தெரியவில்லை.

மாறாக, அகில இந்திய ரீதியில் அமைந்து மாறுபட்ட சிறந்த கொள்கைகளை மக்கள் முன் சமர்ப்பித்து ஆதரவு தேடும் கட்சிகளுக்கே நல்ல எதிர்காலம் இருப்பதாக எண்ணலாம்.

இந்த மாற்றுத் திட்டங்கள் ஜனநாயக அமைப்புக்கள், சமூகப் பணிகள், பொருளாதாரக் கொள்கைகள் என்ற பிரிவுகளில் அடங்கும்.

லட்சக்கணக்கான கிராமங்களில் மக்களுக்கு மத்தியில் தொண்டாற்ற வேண்டும். அவர்களுடைய அபிமானத்தைப் பெறும் வகையில் நிர்மாணப் பணிகளுக்குத் தோள் கொடுத்து உதவ வேண்டும். இவ்விதம் இயங்கக் கூடிய தகுதி வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்று பாரதத்தில் இன்று உள்ளதா?

அகில இந்திய ரீதியில் சக்தி வாய்ந்த அமைப்பாகப் படர்ந்து, குறுகிய நோக்கங்கள் எதற்கும் இடம் தராமல், போதாக்குறைக்குச் சிறந்த தேசியப் பாரம்பரியமும் கொண்ட ஒரே எதிர்க்கட்சி இன்று ஸ்தாபன காங்கிரஸ்தான்.

''பாரதத்தில் ஒரே கட்சி ஆட்சி என்ற நிலை தோன்றுவதை நான் விரும்பவில்லை; இங்கே சிறந்த எதிர்க்கட்சிக்கு அவசியமும் அதற்குச் சிறப்புப் பணியும் உண்டு'' என்று பிரதமர் பன்முறை கூறியுள்ளார்.

இவ் விஷயத்தில் பிரதமர் ஏமாற்றம் அடைய நேர்ந்தால் நஷ்டம் அவருக்கல்ல, பாரத ஜனநாயகத்துக்குத்தான்.

ராஜாஜி சிந்தனை

தவறான மார்க்கம்

நல்ல குடிமகனாக விளங்குவதற்குரிய குண நலன்களைப் பிரஜைகளிடம் உருவாக்குவது ரொம்பக் கஷ்டம். அபூர்வமான ஆற்றலுடைய சில தலைவர்கள் மட்டுமே இதைச் சாதிக்க முடியும்.

ஆனால் தவறான வழிகளில் மக்கள் மனத்தைச் செலுத்தி அவர்கள் குண நலன்களை அழிப்பது ரொம்பச் சுலபம். அத்தகைய வழிகளுள் ஒன்று லாட்டரிச் சீட்டு.

— ராஜாஜி நினைவு மலர்

இணைப்பு முயற்சிகள்

தமிழ் நாட்டில், 'இரு காங்கிரஸ்களையும் இணைக்கப் போகிறேன்' என்று கச்சை கட்டிக் கொண்டு அ. அ. தி. மு. கவை விட்டு வெளியேறிய திரு ஜானகீ புறப்பட்டிருக்கிறார். 'எல்லா எதிர்க் கட்சிகளையும் ஒருங்கிணைத்து இந்திய ஜனநாயக காங்கிரஸ் என்ற புதுக் கட்சி தோற்றுவிக்கப் போகிறேன்' என்று திரு ஜே. பி. கிளம்பியிருக்கிறார். இவை நல்ல முயற்சிகளாக நமக்குத் தோன்றவில்லை.

'உள்ளதும் போச்சே, நொள்ளைக் கண்ணு' என்ற நிலைக்கு எதிர்க்கட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தும் முயற்சிகளே இவை என்று கருதுகிறோம்.

'ஆட்சியைக் கவிழ்க்கப் பார்க்கும் சக்திகள் இன்னும் சுறுசுறுப்பாகவே உள்ளன' என்று வெளிப்படையாகவே மத்திய சட்ட அமைச்சர் கூறியுள்ளார்.

திரு ஜே. பி. மேற்கொள்கிற எந்த முயற்சியும் இனி சந்தேகத்துக்குள்ளாகும் என்று கூறுவது கருணையற்றதாகத் தோன்றலாம். ஆனால் யதார்த்த நோக்கில் தவறாகாது.

மேலும் இணைப்பு முயற்சிக்கு ஸ்தாபன காங்கிரஸுக்குள்ளேயே பல மாநிலங்களில் எதிர்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. மொத்தத்தில் இந்த முயற்சி இருக்கிற ஒரு நல்ல எதிர்க் கட்சியையும் பலவீனப்படுத்துவதாகவே முடியலாம்.

இன்றையச் சூழலில் ஸ்தாபன காங்கிரஸுடன் இணையவோ அல்லது அதற்கு ஆதரவு தரவோ மற்ற எதிர்க்கட்சிகள் முன் வருவது ஒன்றுதான் சிறந்த யோசனையாக இருக்க முடியும். அப்படி இணைய அல்லது ஆதரவு தர முன்வருபவர்கள் தங்கள் பழைய கொள்கைகளைக் கைவிட்டுத் தலை முழுகிவிட்டார்களா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஸ்தாபன காங்கிரஸின் தலைமைக்கு உண்டு. இல்லாத போனால் வருகிற ஆதரவு கடைசியில் துன்பமாகவே முடியலாம்.

பல்வேறு எதிர்க் கட்சிகளில் இருப்பவர்கள் இப்படி கடமை உணர்வுடன் நடந்து கொள்வதன் மூலம்தான் இங்கு உண்மையான ஜனநாயகம் தழைக்கும்.

கிடைக்கிற ஆதரவை ஏற்று, கிட்டாத ஆதரவுக்கு ஏங்காமல், ஆளும் காங்கிரஸில் போய்ச் சேருகிற சுயநலமிகளைப் பற்றிக் கவலைப்படாமல், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற பெருநோக்கோடு தனித்து இயங்குவதுதான் ஸ்தாபன காங்கிரஸ் இன்று செய்யக் கூடியது. நாளடைவில் அதன் மதிப்பு பன்மடங்காகப் பெருகும்.

கும்பகோணம் ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி ஸ்ரீகாமாக்ஷி அம்மன் ஆலயத் திருப்பணி

திருக்குடந்தை ஸ்ரீ நாகேஸ்வரர் ஆலயத்துக்குக் கீழ்வலத்தில் அமைந்துள்ளது ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி — ஸ்ரீ காமாக்ஷி அம்மன் ஆலயம். வடக்கு நோக்கிய சன்னதியைக் கொண்டது. எந்த நோயையும் தீர்த்து வைக்கும் பெருஞ் சிறப்புடையது. பழுதுபட்டுள்ள இவ்வாலயத்தைப் புதுப்பிக்கவும் ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி ஸ்ரீ காமாக்ஷி சமேத ஸ்ரீ ஏகாம்பரநாதர் சன்னதிகளைச் செப்பனிட்டு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் செய்யவும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் அனுக்கிரகத்தினாலும், திருவாவடுதுறை, தருமபுர ஆதீனகர்த்தர்களின் அருளாசியாலும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பொருளுதவி செய்து திருப்பணியைப் பூர்த்தி செய்ய விழையும் அன்பர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திரு கே. ராமச்சந்திரன், செயலாளர், பொருளாளர், திருப்பணிக்குழு, ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவஸ்தானம், நாகேஸ்வரர் கீழ வீதி, கும்பகோணம், (தஞ்சை மாவட்டம்)


குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை!
பிரிட்டனின் பொருளாதாரம்
உப தேர்தல்
கலைஞர்
தலைவரே! வருக!
கௌஹாத்தியில் காங்கிரஸ் மகாநாடு
கோலாகலமாக நடைபெறுகிறது!
இரண்டு பேரும்
ஒன்று சேர வேண்டும்
இல்லையென்றால்...
பச்சை குத்திக்
கொண்டு விடுவேன்!
காங்கிரஸ்
ஸ்தாபன காங்கிரஸ்



மகளிர் பகுதி...

கல்கி பத்திரிகையின் லட்சக்கணக்கான பெண் வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி.

உங்களுக்கென்றே டிசம்பர் ஐந்தாம் தேதி கல்கி இதழ் முதல் இரண்டு பக்கங்களைப் பிரத்தியேகமாக ஒதுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

இந்தப் பக்கங்களில் நீங்கள் சிறுகதை எழுதலாம், கட்டுரை வரையலாம், நகைச்சுவைத் துணுக்குகள், தகவல் குறிப்புக்கள் தரலாம்.

மகளிர் பகுதிக்காக எழுதுகிறீர்கள் என்பதையும் மொத்தத்தில் இரண்டு பக்கங்களே ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும் நினைவில் கொண்டிருந்தால் போதும். கட்டுரைகள், பெண்ணுரிமை, குழந்தை வளர்ப்பு, சமையல் குறிப்பு, அழகுக் குறிப்பு, தையல் கலை, பூ வேலை, தாம்பத்திய உறவு, விவாகரத்து, குடும்பக் கட்டுப்பாடு, விதவா விவாகம் போன்ற எந்த அம்சத்தைப் பற்றி வேணுமானாலும் இருக்கலாம். வாழ்க்கை அனுபவங்களாக விளங்கலாம். படிக்கச் சுவாரஸ்யமாக அமைந்து பிரசுரத்துக்கு ஏற்கப்படும் கதை, கட்டுரை, தகவல் குறிப்பு, நகைச்சுவை துணுக்கு முதலியவற்றுக்கு வழக்கமான சன்மானம் உண்டு. அது தவிர, இரு விசேஷப் பரிசுகளும் உண்டு!

முதல் பரிசு:

ரூ. 500/ பெறுமானமுள்ள பட்டுப் புடவை.

இரண்டாம் பரிசு:

ரூ. 200/ பெறுமானமுள்ள பிரஷர் குக்கர்.

இந்தப் பரிசுகளை அடுத்த ஆறு மாத காலத்தில் வெளியாகும் கதை கட்டுரை முதலியவற்றை மகளிராக அமைந்த குழுவினர் பரிசீலித்து வழங்குவார்கள்.

எங்கே, உங்கள் திறமைகளைக் காட்டுங்கள், பார்க்கலாம்.

முக்கிய குறிப்பு:

- உறையின் மேல் மகளிர் பகுதி எனக் குறிப்பிடவும்.
- பிரசுரத்துக்கு ஏற்காத கதை, கட்டுரை, துணுக்குகளைத் திருப்பி அனுப்ப இயலாது.
- கடிதப் போக்குவரத்து கிடையாது.
- கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- விலாசம்: ஆசிரியர் கல்கி, சென்னை-600 031.

டிசம்பர் 5உ இதழ் முதல்
புதிய பகுதிகள்

அவன் பார்த்துப்பான்

தொடர் நாடகம்

நாடகாசிரியர்:
கோமல் சுவாமிநாதன்



ஜீவகாருண்யம்

30

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி
காமகோடி சங்கராசாரிய
சுவாமிகள்



உயிர் போன பிறகு உடம்புக்குப் பண்ண வேண்டிய காரியத்தைச் சொன்னேன். உயிர் போகிற சமயத்தில் செய்ய வேண்டிய பணி ஒன்றும் இருக்கிறது. இதைவிட ஒரு ஜீவனுக்குச் செய்யக் கூடிய பெரிய பரோபகாரம் எதுவுமில்லை. அது என்ன?

கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனிடம், 'உடம்பு போனாலும் ஆத்மா சாகிறதில்லை. அதனால் ஒரு பெரிய தர்மத்தை உத்தேசித்து நீ யுத்தம் பண்ண வேண்டியது கடமை, ஸ்வதர்மம் இருக்கிறபோது, பந்துமித்திரர்களைக் கொல்ல மாட்டேன் என்று பின்வாங்குவது சரியில்லை' என்று உபதேசம் பண்ணினார். அந்த உபதேசம்தான் பகவத்கீதை. சரி, ஆத்மா செத்துப் போகவில்லை. உடம்பு போன பிறகு அது என்ன ஆகிறது? எல்லா உயிர்களும் உடனே பரமாத்மாவிடம் ஐக்கியமாகிவிடுகிறதா? கிருஷ்ண பரமாத்மா அப்படிச் சொல்லவில்லை. அந்த உயிர் அதன் கர்மத்தைப் பொறுத்து இன்னொர் உடம்பில் புனர் ஜன்மம் எடுக்கிறது என்றுதான் சொல்கிறார். 'மகா புண்ணியசாலிகள் ஸ்வர்கத்துக்குப் போய்ப் புண்ணிய பலனை அநுபவித்துவிட்டு, அது தீர்ந்ததும் மறுபடியும் இந்த பூமியிலேயே மநுஷ்யர்களாகப் பிறக்கிறார்கள்; துவேஷமும், குரூரமும் கொண்ட நர அதமர்களைத் திரும்பத் திரும்ப அசுரப் பிறப்பெடுக்குமாறு நானே தள்ளுகிறேன்' என்றெல்லாம் சொல்கிறார். அப்படியானால் இந்த ஜனன—மரண சக்கரத்திலிருந்து மீட்சியே இல்லையா? — இருக்கிறது.

பக்தி யோகத்தாலோ ஞான யோகத்தாலோ தன்னை உபாஸிப்பவர்களை மறுபடி இந்த லோகத்துக்குத் தள்ளாமல் பரமாத்மாவான தன்னிடமே அடக்கம் பண்ணிக் கொண்டு விடுவதாக பகவான் சொல்கிறார். பக்தன் ஞானியாகி விட்டால் செத்துப்போன அப்புறம்தான் பரமாத்மாவிடம் ஐக்கியமாகவேண்டும் என்றில்லை. அவன் இந்த லோகத்தில் இருக்கிற மாதிரி பிறத்தியாருக்குத் தோன்றும்போதே, மோக்ஷத்தில்தான் இருந்து கொண்டிருப்பான். சகல துக்கங்களிலிருந்தும் விடுபட்ட ஸதானந்த நிலைதான் மோக்ஷம். இப்படி பக்தி யோகம், ஞான யோகம் அப்பியாசம் பண்ணுவதற்கு பகவான் அத்தியாயம் அத்தியாயமாக வழி சொல்லிக் கொடுத்துக் கொண்டே போகிறார். ஆனால் இந்த மாதிரிப் பண்ணி ஜயித்து மீளுகிறவன் எங்கேயாவது கோடியில் ஒருத்தன்தான் இருப்பான். இதையும் அவரே சொல்கிறார். 'மநுஷ்யர்களில் ஆயிரத்தில் ஒருத்தன்தான் ஸித்திக்கு முயற்சியே பண்ணுகிறான். அதிலும் அபூர்வமாக எவனோதான் முயற்சியில் ஜயித்து என்னை வந்தடைகிறான்' என்கிறார்.

இப்படியானால் என்ன பண்ணுவது? எல்லாவற்றுக்கும் ஒரு குறுக்கு வழி இருக்கிறதே. அந்த மாதிரி ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவதற்கு Short-cut இல்லையா ?

ஒன்றே ஒன்று இருக்கிற **மாதிரி** பகவானே சொல்லியிருக்கிறார். 'ஒருத்தன் செத்துப் போகிற சமயத்தில் எதை நினைத்துக் கொண்டு உடலை விடுகிறானோ, அதையே மறு ஜன்மாவில் அடைகிறான். என்னையே ஸ்மரித்துக்கொண்டு எவன் சரீரத்தை விடுகிறானோ அவன் என்னை அடைந்து விடுகிறான்' என்று சொல்லி, ''நாஸ்தி அத்ர ஸம்சய:''— ''இதில் சந்தேகமே இல்லை'' என்று வேறு 'காரண்டி' கொடுத்திருக்கிறார்.

'ரொம்ப ஸுலபமான வழியாக இருக்கே; வாழ்க்கை முழுக்க எப்படிக் குட்டிச்சுவராக நடத்தினாலும் அந்திம சமயத்தில் மட்டும் பகவானை நினைத்துக் கொண்டால் போதுமாமே! அதனாலேயே இந்த ஜனன—மரணச் சக்கரத்திலிருந்து தப்பித்துக் கொண்டு விட முடியுமாமே!' என்று தோன்றுகிறது.

ஆனால் பகவான் இங்கே 'பொடி' வைத்துப் பேசுகிறார். 'கடைசிக் காலத்தில் என்னை நினைத்துக்கொண்டு' என்பதற்கு 'அந்த காலே மாம் ஸ்மரன்' என்று சொன்னால் போதும். ஆனால் பகவான் அப்படிச் சொல்லவில்லை. 'அந்த காலே ச மாம் ஏவ ஸ்மரன்' என்று ஒரு 'ச'வும் 'ஏவ'வும் போட்டு

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

ஸம்ஸார நிவிருத்தி இத்தனை ஸுலபமில்லையப்பா என்று ஆக்கிவிட்டார். இந்த 'ச'வுக்கும் 'ஏவ'வுக்கும் என்ன அர்த்தம்? 'அந்த காலே ச' என்றால் 'சாகிற சமயத்திலும்' என்று அர்த்தம். 'மாம் ஏவ' என்றால் 'என்னை' என்று மட்டும் அர்த்தமில்லை; 'என்னை மட்டுமே' என்று அர்த்தம்.

அவரை மட்டுமே அந்தியத்தில் 'ஸ்டெடி'யாக ஸ்மரிக்க வேண்டும். அப்போதுதான் மோக்ஷம்.

நம் மனஸ் லகான் இல்லாத குதிரையாக ஓடுகிற ஓட்டம் நமக்குத் தெரியும். ஏதோ இந்த க்ஷணம் அது அப்படியே பரமாத்மாவிலேயே தோய்ந்து விட்டாற்போல் இருக்கும். பார்த்தால் அடுத்த க்ஷணமே அது பிய்த்துக் கொண்டு ஏதாவது கண்ட கண்ட குப்பைத் தொட்டிக்குப் போயிருக்கும். நமக்கே ஆச்சரியமாக, தாங்க முடியாத விசனமாக இருக்கும் — 'அவ்வளவு நல்ல சாந்த நிலையில் இருந்தோமே; இது எப்படி அங்கேயிருந்து அறுத்துக் கொண்டு கிளம்பிற்று?' என்று. இங்கிலீஷில் fraction of a second என்கிறார்களே, அது மாதிரி, ஒரு செகண்டில் விச நாழி கூட இந்த மனஸ் ஒன்றில் நிலைத்து நிற்க மாட்டேன் என்கிறது. எனவே 'மாம் ஏவ ஸ்மரன்' என்பது ரொம்பக் கஷ்டம்தான்.

சாகத்தான் போகிறோம் என்று முதலில் தெரிய வேண்டும். அதற்கப்புறம் அதற்காகப் பயந்து நடுங்காமல், புத்தியை நன்றாகத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தெளிவோடு, இந்த க்ஷணம் உயிர் போகிறது என்றால்கூட அந்த ஒரு க்ஷணத்திலாவது ஜாக்ரியத்தோடு (ஒருமுகமான சிந்தனையோடு) பகவானை மட்டுமே நினைக்க வேண்டும். அப்படி ஒரே க்ஷணத்தில் பிராணன் போய்விட்டால் நல்லது. பகவானை விட்டு ஸ்மரணை நகராதபோதே உயிரை விட்டு, அவனிடமே போய்ச் சேரலாம். ஆனால் இப்படி யாரும் போகக் காணோமே! குண்டு போட்டுச் சுட்டால்கூட ஒரு ஐந்து பத்து நிமிஷத்துக்கு அப்புறம்தானே உயிர் போகிறது? அத்தனை நாழி — அந்த ஐந்து, பத்து நிமிஷமும் — பிராணப் பிரயாணத்தின் மகா அவஸ்தைகளை மறந்து பகவானை ஸ்டெடியாக நினைத்துக் கொண்டு அப்படியே பிராணனை அதன் மூலத்தில் கரைக்கிறது சாத்தியமா? 'எலெக்ட்ரிக் ஷாக்' மாதிரி அடித்து உடனே instantaneous சாவு வருகிறது என்றால், அந்த 'இன்ஸ்டண்ட்'டில் பகவான் நினைவு வந்து விட்டால் போதும். ஆனால் வரவேண்டுமே? வராவிட்டால்? பயம் வரக் கூடாதே! அல்லது, அப்படியே உணர்ச்சி மரத்துப்போய்ப் பிரக்ஞை யில்லாமலும் சாகக் கூடாதே!

ஆகவே, உடனே பிராணன் போகாமல் எந்த க்ஷணமும் போகலாம் என்று அது பாட்டுக்கு இழுத்துப் பறித்துக் கொண்டிருந்தாலும், அத்தனை நாழியும் (அது நாள் கணக்கில்கூட இருக்கலாம்) பகவானையே நினைத்தாக வேண்டும்; அல்லது நினைக்கிறதற்குக்கூட அவகாசம் தராத விதத்தில்— அல்லது மகா பீதியையே அந்தத் துளியூண்டு நாழிகைக்குள்ளும் தருகிற விதத்தில்— எலெக்ட்ரிக் ஷாக் மாதிரி அடித்துச் சாவதானாலும், அந்த fraction of a secondலும் பகவத் ஸ்மரணை பூர்ணமாக ரொம்பிக் கொண்டு வந்து நிற்க வேண்டும்.

இது, தானாக, அந்தப் பிராணாவஸ்தை சமயத்தில் கைகூடுகிற விஷயமா? இல்லை. அதனால்தான் 'அந்த காலே ச' என்று ஒரு 'ச' போட்டார். இதைப் பற்றி மேலேயும் சொல்கிறார். (தொடரும்)

மக்கள்!





ஸிக்கிம் மகாராஜா சோகியால் ஏராளமான தூக்க மாத்திரைகள் சாப்பிட்டுவிட்டு மயங்கிய நிலையில் நாட்கணக்கில் இருந்தவர் இப்பொழுது பரிபூரண குணமடைந்து தமது இருப்பிடத்துக்குத் திரும்பி யிருக்கிறார். இப்படி இவர் ஏராளமான தூக்க மாத்திரை சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயன்றதற்குக் காரணம் அவர் குடும்ப விவகாரம்தான் என்கிறார்கள். அவரை மூன்று ஆண்டுகளுக்கு முன் விட்டுப் பிரிந்த அமெரிக்க மனைவி போகும்போது ஏராளமான அரண்மனை நகைகளையும் இரு குழந்தைகளையும், சோகியாலின் மூத்த மனைவியின் பெண்ணையும் அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று விட்டாளாம். இப்பொழுது அமெரிக்க மனைவி, விவாகரத்து கோரிப் பெற்றதோடல்லாமல் தாம் எடுத்துச் சென்ற அரண்மனை நகைகளையோ, மூத்தாளின் பெண்ணையோ திருப்பி அனுப்ப மறுக்கிறாளாம். அத்துடன் மாதம் 10,000 ரூபாய் ஜீவனாம்சம் வேறு கோருகிறாளாம். இந்தக் குடும்பக் கவலைகள், பதவி இழந்த கவலை யெல்லாம் சேர்ந்து அவரைத் தற்கொலை செய்து கொள்ள உந்தியிருக்கிறது. கடவுள் அருளால் அவர் பிழைத்து விட்டார்.

எட்டு ஆண்டுகளாகப் பிரிந்து வாழ்ந்தனர் கேரள நாட்டைச் சேர்ந்த கௌரி — தாமஸ் தம்பதியினர்.

முதல் முதல் கம்யூனிஸ்ட் ஆட்சி (1957–58) நம் நாட்டில் கேரளத்தில் தோன்றிய போது, இருவருமே ஈ. எம். எஸ். மந்திரி சபையில் சேர்ந்தனர். அந்த மந்திரி சபை என்ன சாதித்ததோ சாதிக்கவில்லையோ, ஒன்றினை நிச்சயம் சாதித்தது. இவ்விருவருக்கும் இடையில் காதல் மலரச் செய்து திருமணத்தை முடித்து வைத்தது.

பிறகு கம்யூனிஸ்ட் கட்சி பிரிந்தபோது, இவர்களும் பிரிந்தனர். ஸ்ரீமதி கௌரி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். திரு தாமஸ் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் நின்றார். திரு தாமஸ், கேரள மந்திரி சபையில் — காங்கிரஸ் — கம்யூனிஸ்ட் கூட்டு மந்திரி சபையில் தொழில் மந்திரியாக இருந்து வருகிறார். சமீபத்தில் திரு தாமஸ் மிகுந்த நோய்வாய்ப்பட்டு உடல் நலிவுற்றபோது, இருவருமே ஒருவரை யொருவர் பார்க்க விழைந்தார்கள். கட்சித் தலைமைப் பீட அனுமதி பெற்று ஸ்ரீமதி கௌரி திரு தாமஸைப் பார்க்கச் சென்றாராம். எட்டு வருடங்களுக்குப் பின் ஏற்பட்ட சந்திப்பில் அவர்கள் இருவருமே ஒன்றும் பேசாமல் ஒருவரை யொருவர் பார்த்த வண்ணம் நின்றிருந்தனர். ஸ்ரீமதி கௌரியின் கண்களில் நீர் முட்டி நின்றதாம். பேச நா எழவில்லை. ''சௌக்கியமா?'' என்று திரு தாமஸ் கேட்க அங்கு நிலவிய அந்தக் கனத்த அமைதி குலைந்து சகஜ நிலை ஏற்பட்டதாம்.

அன்பும் காதலும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள்


சமீபத்தில் தமது எண்பதாவது வயதில் காலஞ்சென்ற விசுவநாத சத்யநாராயண தெலுங்கு மொழியின் மாபெரும் இலக்கிய கர்த்தா. அவர் எழுதாத இலக்கியத் துறை கிடையாது. சிறுகதை, கட்டுரை, நாடகம், நாவல், கவிதை ஆகிய எல்லாத் துறைகளிலும் மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார். அவர், ராமாயணத்தை மீண்டும் தமக்கே உரிய கற்பனைச் செறிவோடு பாடியிருக்கிறார். பதினாயிரம் செய்யுட்களுக்கு மேலுள்ள அந்தக் காவ்யத்துக்கு ''ராமாயண கல்ப விருட்சம்'' என்று பெயர். பண்டிதரும் பாமரரும் பெரிதும் போற்றும் காவ்யம். ஆந்திர அரசாங்கம் அவரை ஆஸ்தானக் கவிஞராக்கியும் சட்டசபை அங்கத்தினராக்கியும் பென்ஷன் வழங்கியும் கௌரவித்தது. சாகித்திய அகாடெமி கௌரவித்திருக்கிறது. ஞானபீடப் பரிசும் பெற்றவர்.

அவரை ஐந்து மாதங்களுக்கு முன் சந்தித்தபோது, தமது நூல்களின் உரிமைகளை அவ்வப்போது யார் எந்த விலைக்குக் கேட்டார்களோ அதற்கு விற்று விடுவதாகக் கூறினார். ஏன், ஞானபீடப் பரிசைக் கூட அப்படித்தான் செலவழித்தாராம். நாற்பதினாயிரம் ரூபாய் செலவில் தமது சொந்த ஊரில் ஒரு கோயிலை ஜீரணோத்தாரணம் செய்தாராம். இன்னும் ஒரு கணிசமான தொகையைத் தம்மிடம் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த வியாபார நண்பர் கேட்டார் என்று நம்பிக் கொடுத்தாராம். அவர் மஞ்சள் கடிதாக கொடுத்து விட்டார்! மிச்சமுள்ள தொகையை யார் யாரோ கல்யாணம் கார்த்திகை என்று உதவி கோரி வந்தால் இரண்டாயிரம், நாலாயிரம் என்று கொடுத்துச் செலவழித்து விட்டாராம். தாம் நூற்றி இருபது புத்தகங்களுக்கு மேல் எழுதியும், பல பரிசுகளும், பதவிகளும் பெற்றும் பழைய நிலையிலேயே பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இருப்பதாகச் சொல்லிக் கடகடவென்று சிரித்தார். சரஸ்வதி இருக்குமிடத்தில் லட்சுமி தங்க மாட்டாள் என்பது மீண்டும் நிரூபணமாயிற்று. ஆனாலும் இதை எவ்வளவு லாகவமாக நகைச்சுவையுடன் ஏற்றுக்கொண்டார் என்பதை அவர் சிரிப்பு உணர்த்தியது.


—எஸ். வி. எஸ்.

படங்கள் : சோகியால், கௌரி

அமுல்—உங்கள் பால்க்காரர்




அமுல்—உங்கள் தேநீர்க்காரர்



¼ லிட்டர் டம்ளரில் 2½ டேபிள்ஸ்பூன் அமுல் மில்க் பவுடரை நன்கு குவியச் செய்து போடவும். சிறிதளவு சுடுநீருடன் கலந்து நன்கு கலக்கிப் பசைபோல் ஆக்கிக்கொள்ளவும். பின் அதன் மேல் வரை சுடு நீரை மேலும் சேர்த்து நன்கு கலக்கவும். உங்கள் குழந்தைக்கான க்ளாஸ் அளவு பால் தயார்! (முழுமையான விவரங்களுக்கு டின் மீது பார்க்கவும்.) அமுல் மில்க் பவுடர் தேயிலை பானத்திற்கும் காப்பிக்கும் கூட மிக ஏற்றதாகும்.

அமுல்—உங்கள் தயிர்க்காரர்



கறந்த பாலிற்குச் செய்வது போலவே, மேற்கண்ட முறைப்படி பாலைச்செய்து, சாதாரணமாகச் செய்வது போலத் தயிராகத் தோய்க்கவும்.



அமுல்

மில்க் பவுடர்

வீட்டினுள் இயங்கும் ஒரு பால் பண்ணை

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோவாப்பரேட்டிவ்
மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன்
லிமிடெட், ஆனந்த்

RADEUS/AMP-1

பார்த்திபன் கனவு

அத்தியாயம் 15

கடற் பிரயாணம்

இளவரசன் விக்கிரமனை ஏற்றிக் கொண்டு கிளம்பிய கப்பல் சீக்கிரத்திலேயே வேகம் அடைந்து கிழக்கு நோக்கிச் செல்லத் தொடங்கியது. சிறிது நேரத்துக்கெல்லாம் மாமல்லபுரத்துக் கடற்கரையும், கோவில் கோபுரங்களும் மரங்களின் உச்சிகளும் மறைந்துவிட்டன. கரை ஓரத்தில் வெண்மையான நுரைகளுடனும் இரைச்சலுடனும் எழுந்து விழுந்து கொண்டிருந்த சிற்றலைகள் இப்போது காணப்படவில்லை. கடல் நீர், தூய நீல நிறமாயிருந்தது. அந்த நீல நிறப் பரப்பிலே பெரும் பள்ளங்களும் மேடுகளும் மாறி மாறித் தோன்றும்படியாகப் பேரலைகள் பெருமூச்சு விட்டுக் கொண்டு மேலே எழும்பியும் கீழே விழுந்தும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தன. அதே சமயத்தில் துயரம் நிறைந்த 'ஹோ' என்ற இடைவிடாத புலம்பல் ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தது.

இவ்விதம் விக்கிரமன் வெளியே கண்ட காட்சியானது அவனுடைய உள்ளத்தின் நிலைமையைப் பிரதிபலிப்பதாயிருந்தது. கடலின் ஆழத்தில் குடிகொண்டிருக்கும் எல்லையற்ற மோன அமைதியைப் போல், அவனுடைய இதயத்தின் அடிவாரத்திலும் விவரிக்கவொண்ணாத பரிபூர்ண சாந்திநிலவிற்று. அதே சமயத்தில் அவனுடைய உள்ளத்தின் மேற்பரப்பில் என்னவெல்லாமோ எண்ணங்கள் அலை அலையாக எழுந்து கொந்தளிப்பை உண்டாக்கின.

பார்த்திப மகாராஜா சோழ நாட்டின் மேன்மையைக் குறித்துத் தாம் கண்ட கனவுகளைப் பற்றிச் சொன்னதெல்லாம் ஒவ்வொன்றாக ஞாபகம் வந்தன. கடற் பிரயாணம் செய்ய வேண்டும் என்று இளம் பிராயத்திலிருந்து அவனுடைய மனத்தில் குடிகொண்டிருந்த ஆசையும் நினைவுக்கு வந்தது. அந்த ஆசைதான், அடடா, என்ன விநோதமான முறையில் இன்று நிறைவேறுகிறது? புலிக்கொடி கம்பீரமாகப் பறக்கும் பெரிய பெரிய கப்பல்களில் சோழ நாட்டு வீரர் படைகளுடன் பிரயாணம் செய்து கடல்களுக்கப்பால் உள்ள தேசங்களிலெல்லாம் வெற்றிக் கொடி நாட்ட வேண்டும் என்ற மனோரதத்துக்கும், இன்று பல்லவர்களின் சிங்கக் கொடி பறக்கும் கப்பலில் கையும் காலும் சங்கிலியால் கட்டுண்டு தேசப் பிரஷ்டனாய்ப் பிரயாணம் செய்வதற்கும் எவ்வளவு தூரத்துக்கு எவ்வளவு தூரம்!...

இப்படி விக்கிரமன் சிந்தித்துக் கொண்டிருந்த போதே கப்பலின் தலைவன் சில ஆட்களுடன் அங்கு வந்து விக்கிரமனைப் பிணைத்திருந்த சங்கிலிகளை எடுக்கச் செய்தான். "இது ஏன்?" என்று விக்கிரமன் வினவ, "சக்கரவர்த்தியின் ஆணை" என்றான் கப்பல் தலைவன். "என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்?" என்று விக்கிரமன் கேட்டதற்கு, "இங்கிருந்து பன்னிரண்டு நாள் பிரயாணத்தில் நடுக்கடலிலே ஒரு தீவு இருக்கிறது. அதன் அருகே தங்களை இறக்கி விட்டுவிடவேண்டும் என்று கட்டளை" என்று மறுமொழி வந்தது. "அங்கே வசிப்பவர்கள் யார்?" என்று விக்கிரமன் மேலும் கேட்டான். "அதெல்லாம் எங்களுக்கு ஒன்றும் தெரியாது. தீவுக்குப் போய்ச் சேரும் வரையில், இந்தக் கப்பலுக்குள்ளே தாங்கள் யதேச்சையாக எங்கு வேண்டுமானாலும் போகலாம். ஆனால் தப்பிச் செல்வதற்கு மட்டும் யத்தனம் செய்யக் கூடாது; செய்தால் மறுபடியும் தளையிடும்படி நேரும்" என்றான் கப்பல் தலைவன்.

■ ■ ■

விக்கிரமன் கப்பலுக்குள்ளே அங்குமிங்கும் சிறிது நேரம் அலைந்தான். மாலுமிகளுடன் பேச்சுக் கொடுக்கப் பார்த்ததில் ஒன்றும் பிரயோஜனம் ஏற்படவில்லை. அவர்கள் எல்லோரும் விக்கிரமன் சம்பந்தப்பட்டவரை ஊமைகளாகவே இருந்தனர். பின்னர், கப்பல் மேல்தளத்தின் ஓரமாக அவன் வந்து, வானையும் கடலையும் நோக்கிய வண்ணம் முன் போலவே சிந்தனையில் ஆழ்ந்தான்.

அமரர் கல்கி

அன்னை அருள்மொழியின் நினைவு தான் எல்லாவற்றுக்கும் முன்னால் நின்றது. அவர் இச்சமயம் என்ன செய்து கொண்டிருப்பார்? என்ன எண்ணிக் கொண்டிருப்பார்? தன்னுடைய முயற்சி நிஷ்பலனாய்ப் போனது பற்றி ஏமாற்றம் அடைந்திருப்பாரா? பல்லவ சக்கரவர்த்தியின் முன்னிலையிலே தான் சிறிதும் பணிந்து போகாமல் பேசிய வீர வார்த்தைகளைக் கேள்விப்பட்டுப் பெருமை அடைந்திருப்பாரா? தன்னுடைய பிரிவைக் குறித்து வருத்தப்படுவாரா? எப்படியும் அவருக்கு ஆறுதல் கூறச் சிவனடியார் போயிருப்பார் அல்லவா?

உடனே, சிவனடியாரின் ஞாபகம் வந்தது. கப்பல் கரையை விட்டுக் கிளம்பிய தருணத்தில் அந்தப் பெரியவர் எங்கிருந்தோ வந்து குதித்துத் தமது திருக்கரத்தை நீட்டி ஆசீர்வாதம் செய்தாரே? அவருக்குத்தான் நம்மிடத்தில் எவ்வளவு அன்பு!

சிவனடியாரைப் பற்றி நினைக்கும் போதே மற்றோர் உருவம் விக்கிரமனுடைய மனக் கண் முன் தோன்றியது. அது ஒரு பெண்ணின் உருவம். முதல் நாள் காஞ்சிபுரத்து வீதியில் பார்த்த அந்தப் பெண் மறு நாள் மாமல்லபுரத்துக் கடற்கரைக்கு எப்படி வந்தாள்? அவள் யாராயிருக்கும்? ஆகா! அவளுடைய கண்கள்தான் எவ்வளவு நீண்டு படர்ந்திருந்தன? அந்தக் கண்களிலே கண்ணீர் துளித்து நின்ற காரணம் என்ன? தன்னிடத்தில் உள்ள இரக்கத்தினாலா? முன்பின் தெரியாத அந்தப் பெண்ணுக்குத் தன் மேல் இரக்கம் உண்டாவானேன்? இல்லாவிட்டால் தன்னை எதற்காக அவ்வளவு கனிவுடன் பார்க்க வேண்டும்?

இப்படி வெகு நேரம் அவளைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்த விக்கிரமன், சூரியன் மறைந்து நாலுபுறமும் இருள் சூழ்ந்ததைக்கூடக் கவனிக்கவில்லை. தற்செயலாகக் கீழே கடலை நோக்கிய போது விண்மீன்கள் தண்ணீரில் பிரதிபலிப்பதைக் கண்டு திடுக்கிட்டான். அத்தனை நேரமும் முன்பின் தெரியாத அந்தப் பெண்ணைப் பற்றியே தான் சிந்தித்துக் கொண்டிருந்ததை நினைத்துச் சிறிது வெட்கம் அடைந்தான். பிறகு பொன்னனையும் வள்ளியையும் பற்றி எண்ணினான். அவர்களுக்குத் தன் பேரில் எவ்வளவு பிரியம்? இந்த நேரமெல்லாம் அவர்கள் தன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். அல்லது ஒரு வேளை வள்ளியின் பாட்டனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கலாம். அந்தக் கிழவனுக்குத் தான் என்ன தைரியம்? சோழ நாட்டு ஆண் மக்களெல்லாம் அவனைப் போன்ற வீரர்களாயிருக்கக் கூடாதா?....

இருட்டி ஒரு ஜாமம் ஆனபோது, நீலக் கடலைச் செம்பொற் கடலாகச் செய்து கொண்டு கீழ்வானத்தில் சந்திரன் உதயமானான். பூரண சந்திரனில்லை; முக்கால் சந்திரன்தான். பார்ப்பதற்கு ஒரு பெரிய பொற் கிண்ணம் கடலிலிருந்து வெளிக் கிளம்புவது போலிருந்தது. முன்னம் பாற்கடலைக் கடைந்தபோது இந்தச் சந்திரனாகிய பொற் கிண்ணத்திலே தான் அமுதம் வந்ததோ, என்னவோ? இன்றும் அப்பொற் கிண்ணத்திலிருந்து நிலவாகிய அமுதம் பொங்கிப் புவனமெல்லாம் பரவியதாகத் தோன்றியது.

இந்த மோகனக் காட்சியை விக்கிரமன் பார்த்தான். கடலிலிருந்து எழும்பிய சந்திர பிம்பத்துடனேகூட அவனுடைய மனக் கண்ணின் முன்னால் அந்தப் பெண்ணின் முகமும் மறுபடியும் எழுந்தது. இந்த உதயசந்திரனுடைய



பொன்னிறந்தான் அவளுடைய முகத்தின் நிறமும் !

''ஆகா ! அது என்ன அழகான முகம் ?'' என்ற எண்ணம் அப்போது விக்கிரமனுக்கு முதன் முதலாகத் தோன்றியது. அந்தப் பொன் முகத்தின் அழகை அதைக் கவிந்திருந்த கருங்கூந்தல் எவ்வளவு நன்றாய் எடுத்துக் காட்டிற்று ! ஆம் ; நிகரில்லாத சௌந்தரியம் வாய்ந்தவள் அந்தப் பெண். சித்திரத்திலும், சிலையிலும்கூட அத்தகைய திவ்ய சௌந்தரியத்தைக் காண்பது அரிதுதான். அவள் யாராயிருக்கும் ?

■ ■ ■

பன்னிரண்டு தினங்கள் சென்றன. அடிக்கடி குந்தவியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்த விக்கிரமனுக்கு இந்தப் பன்னிரண்டு தினங்கள் போனதே தெரியவில்லை. பதின்மூன்றாம் நாள் பொழுது விடிந்தபோது சூரியோதயமான திசையில் விக்கிரமன் கண்ட காட்சி அவனை ஆச்சரியக் கடலில் மூழ்கடித்தது. ஏனெனில், வழக்கம்போல் சூரியன் சமுத்திரத்திலிருந்து கிளம்பி ஜோதிப் பிழம்பாய் மேலே வருவதற்குப் பதிலாக, பச்சை மரங்களுக்குப் பின்னால் உதயமாகி மேலே ஒளிக் கிரணங்களைப் பரப்பினான். இந்த அபூர்வக் காட்சியைப் பார்த்துக் கொண்டு விக்கிரமன் நிற்கும்போதே கப்பல் தலைவன் அவனை நெருங்கி, ''இளவரசே ! அதோ தெரிகிறதே, அந்தத் தீவின் அருகில்தான் தங்களை விட்டுவிடும்படி எங்களுக்குக் கட்டளை. தங்களுக்கு நீந்தத் தெரியும் அல்லவா ?'' என்றான்.

''கரைக்கு எவ்வளவு தூரத்தில் விடுவீர்கள் ?''



'' ரொம்ப தூரத்தில் விடமாட்டோம். ஒத்தாசைக்கு ஒரு மரக்கட்டையும் போடுவோம்.''

''நான் இறங்க மாட்டேன் என்றால் என்ன செய்வீர்கள் ?''

''மரக் கட்டையில் கட்டி மிதக்க விட்டுவிடும்படி கட்டளை. தங்களுடைய விருப்பம் என்ன ?''

'' நானே இறங்கி விடுகிறேன் '' என்றான் விக்கிரமன்.

அவ்வாறே கப்பல் இன்னும் சிறிது கரையை நெருங்கியதும், விக்கிரமனைக் கடலில் இறக்கிவிட்டு ஒரு மரக்கட்டையையும் போட்டார்கள். விக்கிரமன் அதைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் நீந்தியும், சிறிது நேரம் அதன் மேல் உட்கார்ந்து மிதந்தும், கரையை நோக்கிச் சென்றான். கரையை நெருங்க நெருங்கத் தூரத்தில் கப்பலிலிருந்து பார்த்த போது எறும்புக்கூட்டம் மாதிரி காணப்பட்டது உண்மையில் மனிதர்கள் கூட்டமே என்று தெரிய வந்தது.

அந்த மனிதர்கள் யார்? எதற்காகக் கடற்கரையில் வந்து கூடியிருக்கிறார்கள்? அவர்கள் என்ன பாஷை பேசுவார்கள்? சக்கரவர்த்தி தன்னை இந்தத் தீவில் விட்டு வரச் சொன்னதின் நோக்கம் என்ன? — இப்படிப் பற்பல எண்ணங்கள் விக்கிரமனுடைய மனத்தில் அலை அலையாக எழுந்தன.

அத்தியாயம் 16

செண்பகத் தீவு

விக்கிரமன் கரையை நெருங்க நெருங்க, கடல் அலைகளின் ஓசையையும் அடக்கிக் கொண்டு பலவித வாத்தியங்களின் ஒலி முழங்குவதைக் கேட்டான். சங்கு, தாரை, எக்காளம் மத்தளம், பேரிகை ஆகியவை ஏககாலத்தில் முழங்கி வான முகடு வரையில் பரவி எதிரொலி செய்தன. இவ்வளவு சத்தங்களுக்கிடையில், மாந்தர்களின் குரலில் கிளம்பிய கோஷம் ஒன்று விக்கிரமனுக்கு மயிர்க் கூச்சம் உண்டாக்கிற்று. ''வீரவேல்! வெற்றிவேல் !'' என்னும் கோஷம்தான் அது.

அந்தத் தீவில் வாழும் மனிதர்கள் என்ன ஜாதியாரோ, எப்படிப்பட்டவர்களோ, என்ன பாஷை பேசுவார்களோ, ஒருவேளை நரமாமிசப் பட்சணிகளாய்க்கூட இருக்கலாம் அல்லவா ? — என்று இவ்விதமெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்த விக்கிரமனுக்கு, அங்கு எழுந்த, '' வீரவேல் ! வெற்றிவேல்!' என்னும் சோழ நாட்டின் வீரத் தமிழ் முழக்கமானது அளவிலாத வியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டிற்று.

''இது என்ன அதிசயத் தீவு? இங்கே சோழநாட்டுத் தமிழரின் முழக்கம் கேட்கும் காரணம் என்ன? எதற்காக இவ்வளவு ஜனக்கூட்டம் இங்கே கூடியிருக்கிறது ?'' — இம்மாதிரி எண்ணங்கள் முன்னைக் காட்டிலும் அதிவிரைவாக விக்கிரமனுடைய உள்ளத்தை அலைத்தன. அவனுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. திடீரென்று உடம்பில் வெலவெலப்பு உண்டாயிற்று. மரக் கட்டை பிடியின்று நழுவிற்று. தலை சுழலத் தொடங்கியது. கண்பார்வை குன்றியது. அதே சமயத்தில் பிரம்மாண்டமான ஒரு அலை வந்து விக்கிரமன் மீது பலமாக மோதியது. விக்கிரமனுக்கு அந்த நிமிஷத்தில் கடலிலுள்ள நீர் அவ்வளவும் புரண்டு வந்து தன் மீது மோதுவதாகத் தோன்றிற்று. ஒரு கணம் மூச்சுத் திணறிற்று. '' நமது வாழ்நாள் முடிந்துவிட்டது'' என்று நினைத்தான் விக்கிரமன். பார்த்திப மகாராஜாவுக்கு அவன் அளித்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. அன்னை அருள்மொழித் தேவியின் கருணை முகமும், சிவனடியாரின் கம்பீரத் தோற்றமும், கடைசியாக விரிந்து படர்ந்த கண்களுடன்கூடிய அந்தப் பெண்ணின் மதிவதனமும் ஒன்றன்பின் ஒன்றாகவும் மின்னலைக் காட்டிலும் விரைவாகவும் தோன்றி மறைந்தன. பிறகு, அவனுடைய அறிவை ஒரு மகா அந்தகாரம் வந்து மூடி விட்டது.

விக்கிரமனுக்கு மறுபடியும் பிரக்ஞை வந்தபோது, தான் மணல் தரையில் கிடப்பதாக அவனுக்கு உணர்ச்சி உண்டாயிற்று. கண்கள் மூடியபடி இருந்தன. கடல் அலைகளின் 'ஓ' என்ற ஓசை காதில் கேட்டுக் கொண்டிருந்தது. நெற்றியில் யாரோ திருநீறு இடுவது போல் தோன்றியது. மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தான். சுற்றிலும் ஜனக் கூட்டம் நெருங்கி நிற்பது தெரிந்தது. ஒரு நொடிப் போதில் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அவன் கரையை நெருங்கிய போது அந்த ஜனக் கூட்டத்திலிருந்து கிளம்பிய வாத்திய

ஒரு கேசச் சாயத்தில் நீங்கள் எதிர்பார்ப்பவை எவை?

குறித்துக் கொள்க:

☐ இயற்கைப் பொலிவு தருதல் ☐ எளிதில் பரவுதல்
☐ நீடித்திருத்தல் ☐ ஷாம்ப்பூவாகவும் பயன்படுதல்
☐ உள்ளடங்கிய கேச கண்டிஷனர் ☐ விரைவில் பூசமுடிதல்
☐ நறுமணம் ☐ அதிகப்படி சாயத்தைக் கழுவுதலில் எளிமை.

புதிய நேச்சுரீன்

உண்மையான ஷாம்ப்பூ-இன் கேசச்சாயம்.

இவையனைத்தும் தரும்— இன்னும் தரும்.

நிகரற்ற நறுமணம்
மிகவும் மிகவும் இனிய மணம்—நெடியுள்ள, செயற்கை மணமல்ல

சிக்கல் இல்லை சிதறல் இல்லை
பூசுதற்கோ மிக எளிது

தனித்த கேச கண்டிஷனர்
நேச்சுரீனில் மட்டுமே இருக்கிறது 'அமைட்'—ஒரு கண்டிஷனர், தனிப்பட்ட முறையில் ஹெலீன் கர்ட்டிஸ் உருவாக்கியது; கேசத்தை மென்மையாகவும் படிந்தும் இருக்கச் செய்கிறது.

உறையிலே அதிக அளவு பொருள்—
உங்கள் பணத்திற்கு 25% அதி மதிப்பு. ஒருமுறை முயல்வீர்—ஏனை ஷாம்பூ-இன் கேசச்சாயம் ஏதும் விரும்பமாட்டீர்!



இயல்பான கருப்பு மற்றும் கரும்பழுப்பு நிறங்களில் கிடைக்கும்—ஆண், பெண் இரு பாலாருக்கும்.

கேச பராமரிப்பில் உலகில் தலைசிறந்த ஹெலீன் கர்ட்டிஸ் உறுதியளிக்கிறது. ஜே. கே. ஹெலீன் கர்ட்டிஸ் லிட். பம்பாய் 400 038.

நேச்சுரீன்—ஜப்பான் மற்றும் அமெரிக்காவில் ... வெற்றிகண்ட கேசச் சாயம்.

இவ்விடம் விசாரிக்கவும் பாரி அண்டு கோ. லிட்., சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சிக்கந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், கோழிக்கோடு, கொச்சி, பங்களூர், மங்களூர்

முழக்கங்களும் வாழ்த்தொலிகளும் இப்போது கேட்கவில்லை. இதற்கு மாறாக அசாதாரணமான நிசப்தம் குடிகொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். கொஞ்ச தூரத்தில் எங்கேயோ மாஞ்சோலையில் குயில் ஒன்று 'குக்கூ', 'குக்கூ' என்று கூவிற்று. அந்தக் குயிலின் இனிய குரல் அங்கே குடிகொண்டிருந்த நிசப்தத்தை அதிகமாய் எடுத்துக்காட்டிற்று. கரையை நெருங்கியபோது தனக்கு நேர்ந்த விபத்தின் காரணமாகவே அங்கே கூடியிருந்த ஜனங்கள் அவ்வளவு கவலையுடன் நிசப்தமாயிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டான். ஒரு பெரும் பிரயத்தனம் செய்து உடம்பை உதறிக் கொண்டு ஒரு குதி குதித்து எழுந்து நின்றான். அவ்வளவுதான்; அந்த ஜனக்கூட்டத்திலிருந்து ஒரு மகத்தான ஆனந்த கோஷம் கிளம்பிற்று. வாத்திய முழக்கங்களுடன் கூட, மனிதர்களின் கண்டங்களிலிருந்து எழுந்த வாழ்த்தொலிகள் போட்டியிட்டு ஆகாயத்தை அளாவின.

இவ்வளவு சத்தங்களுக்கும் மத்தியில் விக்கிரமனுக்கு அருகில் கவலை தோய்ந்த முகத்துடன் நின்ற ஒரு பெரிய மனிதர், ''விலகுங்கள்! விலகுங்கள்! கஜராஜனுக்கு வழிவிடுங்கள்!'' என்று கூவினார். கொஞ்சம் கூர்ந்து கவனித்தோமானால் இந்த மனிதரை நாம் முன்னமே பார்த்திருக்கிறோம் என்பது நினைவு வரும். ஆமாம்; மாமல்லபுரத்தில் நடந்த கலைத் திருநாளின் போது நரசிம்ம சக்கரவர்த்தியின் சமூகத்தில் செண்பகத் தீவு வாசிகளின் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தூதர்தான் இவர்!

''விலகுங்கள்'' என்ற அவருடைய குரலைக் கேட்டுச் சுற்றிலும் நின்ற ஜனங்கள் விரைவாக விலகிக் கொண்டார்கள். சற்றுத் தூரத்தில் பட்டத்து யானையைப் போல் அலங்கரித்த ஒரு யானை நின்றது. அதை யானைப் பாகன் நடத்திக் கொண்டு விக்கிரமன் நின்ற இடத்தை நோக்கி வந்தான். பட்டணப் பிரவேசத்துக்காக அலங்கரிக்கப்பட்டது போலக் காணப்பட்ட அந்தக் கஜராஜனுடைய தூக்கிய துதிக்கையில் ஓர் அழகான புஷ்பஹாரம் இருந்தது. விக்கிரமன் மந்திர சக்தியினால் கட்டுண்டவனைப் போல் யானையைப் பார்த்தபடி கையைக் கட்டிக் கொண்டு அசையாமல் நின்றான். யானை மிகவும் சமீபத்தில் நெருங்கி வந்தபோது விக்கிரமனுடைய சிரம் அவனை அறியாமலே சிறிது வணங்கிற்று. யானை தன் துதிக்கையில் ஏந்தி வந்த மாலையை அவனுடைய கழுத்தில் சூட்டிற்று.

ஹையய்யோ!

சமீபத்தில் கோவையில் தமிழ்நாட்டுக்கும் ஆந்திராவுக்குமிடையே ரஞ்ஜித் கோப்பை கிரிக்கெட் பந்தயம் நடந்தபோது காமென்டேட்டர் திரு ஆர். டி. பார்த்தசாரதி தம்மை மறந்து ''ஐயய்யோ!'' ஹி இஸ் கோயிங் டு பிரன் அவுட்'' என்று சொல்லி விட்டார்!.

''ஆன்லுக்கர்'' — பாபு

அப்போது அந்த ஜனக் கூட்டத்தில் ஏற்பட்ட ஆரவாரத்தையும் முழக்கங்களையும் வர்ணித்தல் அசாத்தியமான காரியம். ''வீரவேல்! வெற்றிவேல்!'' என்னும் கோஷங்களுடன் ''விக்கிரம சோழ மகாராஜா வாழ்க!'' ''செண்பக நாட்டு மன்னர்பிரான் வாழ்க!'' என்னும் கோஷங்களையும் கேட்டு, விக்கிரமனுடைய உள்ளம் பெருங் கிளர்ச்சி அடைந்தது. மகா ஆச்சரியம் விளைவித்த இந்தச் சம்பவங்களைப் பற்றி யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவனுக்குத் துடிப்பாயிருந்தது. ஆனால் அருகில் நின்றவர்களிடம் பேசுவதற்குக்கூட அச்சமயம் அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

ஏக ஆரவாரங்களுக்கிடையில், விக்கிரமனை அந்த யானையின் மீது அமைத்திருந்த அம்பாரியில் ஏற்றினார்கள். யானை கடற்கரையிலிருந்து உள்நாட்டை நோக்கிக் கம்பீரமாக நடந்து செல்ல, ஜனக் கூட்டமும் ஆரவாரத்துடன் அதைப் பின்தொடர்ந்து சென்றது. அம்பாரியின் மீது வீற்றிருந்த விக்கிரமனோ, ''இல்லை; இதெல்லாம் நிச்சயமாக உண்மை இல்லை; கனவுதான் காண்கிறோம்; அல்லது இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம் என்று சொல்கிறார்களே, அப்படி ஏதாவது இருக்க வேண்டும்'' என்று அடிக்கடி எண்ணிக் கொண்டான்.

சுற்றுமுற்றும் அவன் கண்ணில் பட்ட தென்னந் தோப்புகள், மாஞ்சோலைகள், கழனிகள், கால்வாய்கள் எல்லாம் அவனுக்குச் சோழ நாட்டுக் காட்சிகளாகவே புலப்பட்டன.

சிறிது தூரம் போனபிறகு ஒரு கிராமம் தென்பட்டது. அதுவும் தமிழ் நாட்டுக் கிராமமாகவே தோன்றியது. ஊருக்குப் புறத்திலிருந்த கிராம தேவதையின் கோயிலும் அப்படியே தமிழகக் கோயிலாகக் காட்சி தந்தது.

இன்னும் சிறிது தூரம் போனதும் ஒரு பட்டணம் காணப்பட்டது. அதன் வீடுகள், வீதிகள், சதுக்கங்கள் எல்லாம் உறையூரின் மாதிரியிலேயே அமைந்திருந்தன. ஆனால் அவ்வளவு பெரிய பட்டணமில்லை. அவ்வளவு ஜன

நெருக்கமும் கிடையாது. அத்தனை மாட மாளிகைகள், கூடகோபுரங்களும் இல்லை. அப்பட்டணத்தின் வீதிகளில் அவரவர் வீட்டு வாசல்களில் நின்ற ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் எல்லாரும் சிறந்த ஆடை ஆபரணங்களை அணிந்து மலர்ந்த முகத்துடன் நின்றார்கள். அவர்கள் எல்லாரும் தமிழ் நாட்டு மக்களாகவே காணப்பட்டார்கள். அளவிலாத ஆர்வம் பொங்கிய கண்களுடன் அவர்கள் விக்கிரமனைப் பார்த்துப் பலவித வாழ்த்துக்களினால் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

விக்கிரமனுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் உதித்தது. ஒரு வேளை இதெல்லாம் அந்தப் பல்லவ சக்கரவர்த்தியின் கபட நாடகமாயிருக்குமோ? தன்னை ஏற்றி வந்த கப்பல் பல நாள் கடலில் பிரயாணம் செய்வதாகப் பாசாங்கு செய்துவிட்டுக் கடைசியில் சோழ நாட்டின் கடற்கரையிலேயே தன்னை இறக்கி விட்டிருக்குமோ? இந்த ஆரவார ஊர்வலமெல்லாம் தன்னை ஏமாற்றிப் பல்லவ சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்வதற்கு ஒரு சூழ்ச்சியோ? இவ்விதமாக எண்ணியபோது விக்கிரமனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

இதற்குள் யானையானது அந்தப் பட்டணத்துக்குள்ளேயே பெரிய மாளிகையாகத் தோன்றிய ஒரு கட்டடத்துக்கு வெளியே வந்து நின்றது. விக்கிரமனை யானை மீதிருந்து கீழே இறக்கினார்கள். ஜனக் கூட்டமெல்லாம் வெளியில் நிற்க, முன்னமே நமது கவனத்துக்காளான பெரியவர் மட்டும் விக்கிரமனை அழைத்துக் கொண்டு மாளிகைக்குள் சென்றார்.

''மகாராஜா! இதுதான் இந்தச் செண்பக நாட்டின் மன்னர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த அரண்மனை. தாங்களும் இந்த அரண்மனையில் வசிக்க வேண்டும் என்பது இந்நாட்டுப் பிரஜைகளின் விண்ணப்பம்'' என்றார் அப்பெரியவர்.

— — — — — பின் கோத்து...! —

இன்லாண்ட் லெட்டரில் விலாசத்துக்குக் கீழே 'பின் கோட்' என எழுத PIN என்று அச்சடித்திருக்கிறார்கள். கல்கத்தாவில் ஒரு கடிதத்தில் அந்த இடத்தில் குண்டூசி குத்தப்பட்டுத் தபாலில் சேர்ந்தது.

'சண்டே' -பாலி



''இந்நாட்டின் பெயர் என்னவென்று நீங்கள் சொன்னீர்கள்?''

''செண்பகநாடு, மகாராஜா!''

''இந்தப் பட்டணத்தின் பெயர் என்னவோ?''

''செண்பக நாட்டின் தலைநகரம் இது. இதன் பெயர் குமாரபுரி.''

''குமாரபுரி தானே? மாயாபுரி அல்லவே?''

''இல்லை, அரசே! குமாரபுரிதான்.''

''நீர் யார் என்று கொஞ்சம் சொன்னால் நன்றாயிருக்கும்.''

''அடியேன் பெயர் சித்தார்த்தன்; காலஞ்சென்ற விஷ்ணுவர்த்தன மகாராஜாவுக்கு நான் முதல் மந்திரி. தங்களுக்கு விருப்பம் இருந்தால்...''

''என்ன சொன்னீர்? மந்திரி என்றீரா? மந்திரவாதி என்றீரா?''

''மந்திரிதான், மகாராஜா!''

''ஒரு வேளை, மந்திரவாதியோ என்று நினைத்தேன். ஆமாம்; நீர் மந்திரவாதி யில்லாவிட்டால், நான் யார் என்பதும், என்னை இன்று காலை இந்தத் தீவுக்கருகில் கொண்டு வந்து இறக்கி விடுவார்கள் என்பதும் எப்படித் தெரிந்தது?''

''அது பெரிய கதை, மகாராஜா! சாவகாசமாக எல்லாம் சொல்கிறேன். இப்போதைக்கு....''

''இப்போதைக்கு, இது உண்மையாகவே அரண்மனைதானா, அல்லது சிறைச்சாலையா என்று மட்டும் சொன்னால் போதும்.''

''என்ன வார்த்தை சொன்னீர்கள்? சிறைச்சாலையா? இந்த நாட்டில் சிறைச்சாலை என்பதே கிடையாது! சிறைச்சாலை, ராஜத் துரோகம், தண்டனை— என்பதெல்லாம் பரத கண்டத்திலேதான், மகாராஜா!''

''அப்படியா? பரத கண்டத்துக்கும் இந்த நாட்டுக்கும் எவ்வளவு தூரமோ?''

''சாதாரணமாய்ப் பன்னிரண்டு நாள் கடல் பிரயாணம். புயல், மழை முதலியவை குறுக்கிட்டால் இன்னும் அதிக நாட்களாகும்.''

''உண்மைதானே சொல்கிறீர்?''

''அடியேன் உண்மையைத் தவிர வேறு பேசவில்லை.''


''அப்படியானால், தமிழகத்திலிருந்து பன்னிரண்டு நாள் பிரயாணத்தில் உள்ள நீங்கள் தமிழ் மொழி பேசுகிறீர்களே, எப்படி?''

''மகாராஜா! இந்தச் செண்பகத் தீவிலே மட்டுமல்ல — இன்னும் கிழக்கே தூர தூரத்தில் உள்ள தீவுகளிலும்

இரட்டைச் சிறப்பு!

குமாரி ஜெயஸ்ரீ ஆங்கில இலக்கியம் நன்கு பயின்று தற்போது அத்துறையில் டாக்டர் பட்டம் பெற படித்து வருகிருர். சிறந்த பரதநாட்டியக் கலைஞரும் கூட. இந்த இரட்டைச் சிறப்புக்களை உணர்த்தவே மேலட்டையில் இரண்டு படங்கள்!

வண்ணப் படங்கள்: - உத்ரா



தமிழ் மக்கள் வசிக்கிருர்கள்; தமிழ் மொழி பேசுகிருர்கள். . தங்களுடைய மூதாதை கரிகாலச் சோழரின் காலத்தில் சோழ நாட்டுத் தமிழர்கள் வளம் மிக்க இந்தத் தீவுகளில் வந்து குடியேறினுர்கள். கரிகாலச் சோழரின் குமாரர் தான் இந்தப் பட்டணத்தை ஸ்தாபித்தார். அதனுலேயே 'குமாரபுரி' என்று இதற்குப் பெயர் ஏற்பட்டது. அந்த நாளில் சோழ சேனுதிபதி ஒருவர் சக்கரவர்த்தியின் ஆக்ஞையின் பேரில் இந்நாட்டை ஆட்சி புரியலானுர். அவருடைய சந்ததியார் பத்து வருஷங்களுக்கு முன்பு வரையில் இந்நாட்டின் அரசர்களா யிருந்து செங்கோல் செலுத்தி வந்தார்கள். அந்த வம்சத்தின் கடைசி அரசரான விஷ்ணுவர்த்தனர் சந்ததியில்லாமல் காலமானுர். பிறகு, இந்த நாடு இன்று வரையில் அரசர் இல்லாத நாடாயிருந்து வந்தது. அக்கம் பக்கத்துத் தீவுகளில் உள்ளவர்கள் அடிக்கடி வந்து இந்நாட்டின் பட்டணங்களையும் கிராமங்களையும் சூறையாட ஆரம்பித்தார்கள்....வெவ்வேறு பாஷை பேசுவோரும், அநாகரிகர்களும், தட்டை மூஞ்சிக்காரருமான பற்பல சாதியார் இந்தத் தீவைச் சுற்றியுள்ள தேசங்களில் வசிக்கிருர்கள். அவர்களை எதிர்த்து நின்று வெற்றி பெறுவதற்கு அரசர் இல்லாக் குடிகளாகிய எங்களால் முடியவில்லை. இப்படிப்பட்ட சமயத்தில் முருகக் கடவுளே அனுப்பி வைத்ததுபோல், சோழர் குலக் கொழுந்தான தாங்கள் எங்களைத் தேடி வந்திருக்கிறீர்கள்... எங்களுடைய பாக்கியந்தான்.''

கரிகாலச் சோழனைப் பற்றி அந்தப் பெரியவர் பிரஸ்தாபித்தவுடனே விக்கிரமன் மிகவும் சிரத்தையுடன் கேட்கத் தொடங்கினுன். அவனுக்கு இருந்த சந்தேகம், அவநம்பிக்கை எல்லாம் போய் விட்டது. சித்தார்த்தரின் குரல், முகத்தோற்றம் ஆகியவற்றிலிருந்து, அவர் சொல்வதெல்லாம் சத்தியம் என்னும் நம்பிக்கையும் விக்கிரமனுக்கு உண்டாயிற்று. ''நமது தந்தை பார்த்திப மகாராஜா எந்தக் கரிகால் வளவனைப் பற்றி அடிக்கடி பெருமையுடன் பேசிவந்தாரோ, அந்தச் சோழர் குல முதல்வன் காலத்திலே தமிழர்கள் வந்து குடியேறிய நாடு இது; என்ன ஆச்சரியமான விதிவசத்தினுலோ அப்படிப்பட்ட நாட்டுக்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம்!'' என்பதை நினைத்தபோது விக்கிரமனுக்கு மயிர்க்கூச்செறிந்தது; கண்ணில் நீர் துளித்தது.

''ஐயா! உம்மை நான் பரிபூரணமாக நம்புகிறேன். எல்லா விஷயங்களையும் விவரமாக அப்புறம் கேட்டுக் கொள்கிறேன். இப்போதைக்கு ஒன்று மட்டும் சொல்லி விடுகிறேன். என்னை நீங்கள் உங்களுடைய அரசனுய்க் கொள்வதாக இருந்தால், இன்னொரு ராஜாவுக்கோ சக்கரவர்த்திக்கோ கப்பம் செலுத்த முடியாது. சுதந்திர நாட்டுக்குத்தான் நான் அரசனுயிருப்பேன்; இல்லாவிட்டால் உயிரை விடுவேன். நீங்களும் இந்நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதற்காக உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருக்க வேண்டும். எதிரிகள் துஷ்டர்களா யிருந்தாலும், நல்லவர்களாக இருந்தாலும், யாரா யிருந்தாலும் பணிந்து போகிறது என்ற பேச்சே உதவாது. இதற்குச் சம்மதமாயிருந்தால் சொல்லுங்கள்'' என்றுன் விக்கிரமன்.

''மகாராஜா, தங்களுடைய தந்தை பார்த்திப மகாராஜா போர்க்களத்தில் அடைந்த வீர மரணத்தின் புகழ் எங்கள் காதுக்கும் எட்டியிருக்கிறது. எங்களுடைய உடம்பில் ஓடுவதும் சோழ நாட்டின் வீர ரத்தந்தான். இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் உடல் பொருள் ஆவியைக் கொடுத்துத் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஆயத்தமா யிருக்கிருர்கள். வீரத் தலைவன் ஒருவன்தான் எங்களுக்கு வேண்டியிருந்தது. தாங்கள் வந்துவிட்டீர்கள். இனி என்ன குறை?''

அச்சமயம் கோயில் சேமக்கலத்தின் ஓசை கேட்டது.

சித்தார்த்தர், ''மகாராஜா! தாங்கள் ஸ்நானபானங்களை முடித்துக் கொண்டு சிறிது இளைப்பாறுங்கள், சாயங்காலம் முருகவேள் ஆலயத்துக்குப் போய்த் தரிசனம் செய்ய வேண்டும். கூடிய சீக்கிரத்தில் முடிசூட்டுவிழா நடத்துவது பற்றியும் யோசனை செய்ய வேண்டும்'' என்றுர். (தொடரும்)



மரம்

லட்சுமி ரமணன்

போட்டிக் கதை-12

வாழ்நாளில் இரண்டு காரியங்கள் வெற்றியுடன் ஈடேறுவது பெரிய சாதனைகளாகக் கருதப்படுகின்றன. கல்யாணம் செய்து பார்ப்பதும் வீட்டைக் கட்டி முடிப்பதும்.

அப்பாவுக்குப் பின்னதை முதலில் செய்து விட்ட பெருமை உண்டு.

அப்பொழுது நான் சின்னவள். ஆ என்றால் ஆடு படித்துக் கொண்டிருந்தவள். கிட்டுவுக்கு (என் தம்பி) லொட லொடக்கும் கால் தண்டை நிலத்தில் இழுபட்டுத் தேயக் கட்டை விரலைச் சப்பிக் கொண்டு நிக்கர்கூட இல்லாமல் அலையும் வயது.

தாத்தா ஊரில் இருக்கிற நர்ஸரிகளுக்கெல்லாம் நடையாக நடந்து பூச்செடிகளும், தென்னங்கன்றுகளும் வாங்கித் தோட்டத்தில் வைத்ததாக அம்மா அடிக்கடி சொல்லுவாள்.

மரம் செடி கொடிகள் என்றால் அவருக்கு அத்தனை ஆசையாம். அவர் வைத்த செடிகளில் ஆடு மாடுகளுக்குப் பலியானது போக மீதி எத்தனை தூரம் வளர்ந்து பலன் தந்தன என்பது எனக்குத் தெரியாது. நர்ஸரிக்குப் போகாமலேயே, தண்ணீர் ஊற்றி உரமிட்டுப் பாடுபடாமலேயே காக்கையோ வேறு எந்தப் பறவையோ கொண்டு வந்து விட்டுப் போன வேப்பங் கொட்டை முளை விட்டுச் செடியாகச் செழித்துத் தளதளத்தது.

தோட்டக்காரனுக்கு அது வளர்வதில் விருப்பமில்லை. 'சுற்றிலும் நிழல் படர்ந்து மற்றச் செடிகளுக்குச் சூரிய ஒளி கிடைக்காமல் செய்துவிடும்' என்று சொல்லிப் பிடுங்கிப் போடப் பார்த்தானாம்.

''வேப்பங் காற்று உடம்புக்கு நல்லது, வெட்டக் கூடாது'' என்று தாத்தா தடுத்து விட்டாராம்.

எனவே தனக்கு நேரவிருந்த முதல் கண்டத்திலிருந்து அது தப்பித்துக் கொண்டது.

எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விவரம் தெரியத் தொடங்கியபோது மரம் என்னை விட வேகமாக வளர்வது தெரிந்தது. கப்பும் கிளையுமாகத் துளிர்த்து நின்ற மரத்தடிதான் நான் அரசு செலுத்தும் ராஜ்யமாயிற்று.

அதுவும் கோடை விடுமுறை வந்து விட்டால் மரத்தடியே கதியாகக் கிடப்பேன்.

மண் தரையில் கோடு கிழித்துப் பாண்டி விளையாடுவேன். கிட்டா தான் கில்லி விளையாடுவதற்காக என்னை அங்கிருந்து பலவந்தமாகத் துரத்துவான்.

அடுத்த வீட்டுக்கு அப்பொழுது பாஸ்கரின் குடும்பத்தினர் குடிவந்தார்கள்.

பாஸ்கருக்கு என்னைவிட இரண்டு மூன்று வயது அதிகம் இருக்கும். எங்கள் தெருவிலேயே எங்கள் வயதை யொத்த குழந்தைகள் அதிகம் இல்லையாதலால் நாங்கள் சிநேகமானோம். பாஸ்கர் என்னுடன் விளையாட வருவான். 'மூட்' இருந்தால் என்னோடு அம்மா அப்பா விளையாட்டு விளையாட ஒப்புக் கொள்வான். நான் மரத்தடியில் வெண்கலச் சொப்புக்களைப் பரப்பிக் கொண்டு சோறு சமைப்பேன். அவன் குடும்பத் தலைவனாகப் பொறுப்புடன் ஆபீசுக்குப் போய் வரும் வழியில் கறிகாய் வாங்கி வருவான். அவன் வந்ததும் இருவரும் சாப்பிடுவோம்.

எல்லாம் பொய்தான். வெறும் பாவனைகள் ஆயின் அப்போதிருந்த மன நிறைவுக்கு என்ன பொருள்?

சில சமயங்களில் ஊர்க் கதை எல்லாம் பேசுவோம்.

உடைந்து போன பிளேடினால் அவன் மரப் பட்டையில் 'சவிதா சவிதா' என்று செதுக்குவான். நான் அவனிடமிருந்து பிளேடைப் பிடுங்கி, 'பாஸ்கர்' என்று அதற்கு நேரே செதுக்குவேன். அவசரத்தில் பிளேடு குத்தி விரலில் பதிந்து உதிரம் கசியும். ஆனால் அப்போதெல்லாம் எனக்கு வலிக்கவே வலிக்காது. மடிமீது 'தொப்'பென்று விழும் வேப்பம் பழங்களை எடுத்துக் கொண்டு ''தின்று பார்க்கட்டுமா?'' என்பான் அவன்.

''ம்... தின்னு.''

பாஸ்கர் பழத்தை வாயில் போட்டுக் கொண்டதும் அவன் முகம் அஷ்ட கோணலாகும். அதைப் பார்த்து நான் வயிற்று வலி வருகிற அளவுக்குச் சிரிப்பேன்.

மறு கணமே 'தூ' வென்று அதைத் துப்பி விட்டு அவன் ''என் சங்கடம் உனக்குச் சந்தோஷமா?'' என்பான்.

''சங்கடம் நீயாக வரவழைத்துக் கொண்டதுதானே!''

''சவிதா நான் சொன்னால் நம்ப மாட்டாய். அந்தக் கசப்பிலும் ஒரு தனிச் சுவை இருக்காக்கும்'' என்று அவன் சொல்லும் பொழுது மீசையில் மண் ஒட்டவில்லை என்கிற பாவனை தெறிக்கும்.

''எனக்கு இந்த மரத்தோட நிழல்தான் ரொம்பப் பிடிச்சது'' என்பேன்.

நாளடைவில் மரம் பெரிதாக வளர்ந்து அதன் நிழல் காம்பவுண்டுச் சுவருக்கு வெளியிலும் படரத் தொடங்கியது. அதன் நிழலை அனுபவிக்கும் ரசிகர்களின் கூட்டமும் பெருகியது.

பால்காரன் காளிமுத்து எருமையைக் கறந்துவிட்டு அதை நிழலில் கட்டிவிட்டுப் போய்விடுவான். இரவுவரை அதற்கு அங்கிருந்து விமோசனம் கிடையாது. அங்கேயே சாப்பிடும் தண்ணீர் குடிக்கும்; சாணமிடும்.

அம்மாவுக்கு அஞ்ஞானம் அடித்துக்கொள்ளும். ''அதென்ன வீட்டு வாசலில் எப்பவும் எருமை? வேலை முடிந்தால் அவுத்துண்டு



போக வேண்டாமோ?'' என்று அங்கலாய்ப்பாள். காளிமுத்து அதையெல்லாம் கண்டு கொள்ள மாட்டான்.


''எருமைப் பால் மட்டும் ஒசத்தி. அதைத்தான் விழுந்து விழுந்து வாங்கறே. எருமையைக் கண்டால் மட்டும் ஏன் கரிச்சுக் கொட்டறே?'' என்று அப்பா கேலி செய்வார்.

''எருமை சும்மாவா நிக்கறது? வாசலிலேயே அசிங்கப் படுத்தறது. வீட்டிலே ஏற்கெனவே கொசு உபத்திரவம். பேசாமே மரத்தை வெட்டிப் போடுங்கோ. தொல்லே குறையும்'' என்று முணு முணுப்பாள்.

மரத்தை வெட்டுவதா? என் தோழியைப் போல் துணை நிற்கும் அதையா? நான் ஓடிப்போய் அதைப் பரிவுடன் அணைத்துக் கொள்வேன். மரப்பட்டையில் நாங்கள் செதுக்கிய எழுத்துக்கள், விரல்களில் நிரடும்.

அம்மா கொஞ்சம் கொஞ்சமாக மாறிப் போனாள். நான் பெரியவளாகி விட்டேனும். பாஸ்கருடன் முன்போல் அதிக அளவுக்குப் பேசவோ பழகவோ விட மறுத்தாள். எப்பொழுதாவது அவன் கண்களில் தென்பட்டால் புன்சிரிப்புக்களின் பரிமாறல்களுடன் சரி.

அவர்கள் மறுபடியும் வீடு மாற்றியதும் அதற்கும் வழியில்லாமல் போயிற்று. நான் ஏன் வளர்ந்து பெரியவளானேன் என்று எனக்கே சலிப்பாக இருந்தது. எனக்கும் மரத்துக்கும் உள்ள உறவு இன்னும் நெருக்கமாயிற்று. மாலை வேளைகளில் பாடங்கள் படிப்பதுகூட மரத்தடியில்தான். ஆயின் படிப்பில்



புலிக்குப் பிறந்தது....

சண்டிகார் நகரில் நடைபெற்ற டென்னிஸ் சாம்பியன் ஷிப் இறுதி ஆட்டத்தில் பிரபல டென்னிஸ் ஆட்டக்காரரான ஆர். கிருஷ்ணன் 7-5, 6-3 ஸ்கோர் கணக்கில் தமது 15 வயது மகன் ரமேஷ் கிருஷ்ணனிடம் தோற்றுப் போனார். மேலும் ஆட்டத்தின் முதல் பரிசுத் தொகையான ரூ. 2500 ஐயும் தம் மகனிடம் இழந்தார். ஆர். கிருஷ்ணன் இளைஞராக இருந்தபோது 17 ஆண்டுகளுக்கு முன்னர் டென்னிஸ் போட்டி இறுதி ஆட்டத்தில் தமது தந்தை பி.கே ராமநாதனைத் தோற்கடித்தார். இன்று சரித்திரம் திரும்புகிறது.

-எஸ். ஸ்ரீகுமார்

கவனம் பதிக்க முடியாத அளவுக்கு வெளியில் ஆர்ப்பாட்டங்கள் நடக்கும்.

வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய குப்பம். குப்பத்துக் குழந்தைகள் மர நிழலில் வந்து விளையாடுவார்கள். கில்லி, கோலி, சடுகுடு என்று எத்தனையோ இல்லையா? அவற்றில் ஏதாவது. அதன் முடிவில் வெற்றி தோல்வின். அவற்றைச் சம நோக்குடன் பார்க்கும் மனப்பான்மை பெரியவர்களுக்கே வருவதில்லை. சிறியவர்களுக்கு எப்படி வரும்?

சண்டையில் முடியும் விளையாட்டு சில சமயங்களில் அடிதடிகளில் கொண்டு விடுவதும் உண்டு. ஏதோ குழந்தைகள் சண்டை என்று பெரியவர்கள் விட மாட்டார்கள். அதில் அவர்கள் அம்மாமார்களும் கலந்து கொண்டு கைகலப்பில் முடியும். அந்தப் புது வித பெண்கள் குஸ்தியைப் பார்க்கப் பெரும் கூட்டம். அப்பா ஆபீஸிலிருந்து திரும்பும் வரை அதற்கு விடிவு கிடையாது. சில நாட்கள் அப்பாவே மத்தியஸ்தம் செய்து சண்டையைத் தீர்க்கும் அளவுக்கு நிலைமை மோசமாகி விடும்.

''நல்ல தலையெழுத்து. பேசாமல் மரத்தை வெட்டி எறியச் சொல்லு. வீட்டுக்கு வந்தால் நிம்மதி கிடையாது'' என்று அவர் அலுத்துக் கொள்வார்.

காலம் ஓடியது. நான் கல்லூரிப் படிப்பை முடித்தேன்.

எனக்குத் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்கிற ஆசை நிறைவேறாமலேயே தாத்தா காலமானார்.

அம்மாவுக்கு நான் மேலே படிப்பது விருப்பமில்லை. ''எத்தனை படித்தாலும் கல்யாணம் தானே செய்து கொள்ளப் போகிறாள். நாமோ வேலைக்கு அனுப்பப் போவதில்லை'' என்பது அவள் கட்சி. அப்பாவும் அதையேதான் நினைத்திருக்க வேண்டும். ஆனால் வெளிப்படையாகச் சொல்லாமல் ''படிக்கிறதானால் படியேன்'' என்று சொல்லிவிட்டு வரன் வேட்டையில் இறங்கினார்.

நானும் தொடர்ந்து படித்திருப்பேனோ என்னவோ தெரியாது. அந்தச் செய்தி கிடைத்திராவிட்டால்...

பாஸ்கர் தன் பெற்றோர்களின் விருப்பத்துக்கு எதிராக ஓர் இத்தாலியப் பெண்ணை மணந்து கொண்டுவிட்ட அந்தச் செய்தி.

அது தெரிந்த சில தினங்கள் வரை என் மனம் என் பிடியில் இல்லை. சொல்ல முடியாத அளவுக்குத் தகிக்கும் அனல் கூட்டுக்குள் நான் அடைபட்டு விட்டது போன்ற பிரமை.

பாஸ்கர் மணம் செய்து கொண்டால் நான் மனம் வெதும்புவானேன்? எனக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? என்ன பந்தம்?

அவன் என் அடுத்த வீட்டுக்காரனாக, விளையாட்டுத் தோழனாகச் சில ஆண்டுகள் இருந்தான் என்பது தவிர?

அந்த அளவுதான் உறவு என்று நான் எடுத்துக் கொள்ளவில்லையோ? கணவன் மனைவியாகக் கற்பனை செய்து கொண்டதை உண்மை என்று நம்பி விட்டேனோ?

''காஃப் லவ்'' என்று வர்ணிப்பது இதைத்தானோ?

நான் அம்மாவுக்குத் தெரியாமல் குளியலறையில் அழுது தீர்த்தேன்.

மரத்தின் மீது செதுக்கிய சவிதா—பாஸ்கர் என்கிற எழுத்துக்களை விரல்களில் மட்டுமின்றி மனத்திலும் தடவி நீவிக் கொடுத்து அதனால் எழுந்த வேதனையை மௌனமாக அனுபவித்தேன்.

ஒருமுறை தில்லிக்குப் போனபோது கன்னாட் பிளேஸில் பாஸ்கரை எதிர்பாராத விதமாகச் சந்தித்தேன்.

மண வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

''எங்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் நிறைய உண்டு. அதனால் அவ்வப்போது மனஸ்தாபங்களும் வருகின்றன. திருமணமே அப்படித்தான். முழுக்க முழுக்க இனிமையானது என்று சொல்ல முடியாது. அதன் அடியில் கசப்பும் உண்டு.''

''வேப்பம் பழம் மாதிரியா?'' என்று கேட்க நினைத்தேன். ஆனால் பேசவில்லை.

என் இளமை நினைவுகளுக்கு நான் இத்தனை முக்கியத்துவம் அளிக்கிறேன் என்பதை அவன் உணர்ந்து கொள்வதால் எனக்கு என்ன லாபம்?

என் ஏமாற்றத்தை அவன் உணர்வதை நான் விரும்பவில்லை.

என் திருமணம் நிச்சயிக்கப்பட்ட அன்று 'கல்யாணமே வேண்டாம்' என்று பிடிவாதம் பிடித்து அழுதேன்.

அம்மா சொன்னாள்: ''சவிதா பைத்தியம் மாதிரி பேசாதே. இல்லாத பொய்மை ஒன்றுக்காக இருக்கிற உண்மை ஒன்றை இழந்து விடாதே. நீ எதையோ மனசில் வைச்சுண்டு சங்கடப்படுகிறாயோன்னு தோணுகிறது. தங்க ரதத்தில் வெள்ளைத் தேவதை வந்து வரம் கொடுத்ததாகக் கதை கேட்கும்பொழுது குழந்தை அது உண்மையாகவே நடந்ததாகக் கற்பனை செய்து கொள்கிறது. அது பொய். வெறும் கற்பனை என்பதை அது வளர்ந்து பெரியவளாகும் போது புரிந்து கொள்வதுதான்



வீனஸ் பிக்சர்ஸ் அளிக்கும்
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடிக்கும்
ஊருக்கு உழைப்பவன்
ஈஸ்ட்மென் கலர்
சென்னை
பைலட் A/C
மகாராணி
அபிராமி A/C
கமலா
மற்றும் தென்னாடெங்கும்
தயாரிப்பு: எஸ்.கிருஷ்ணமூர்த்தி
டி.கோவிந்தராஜன்
டைரக்ஷன் எம்.கிருஷ்ணன்
இசை M.S.விஸ்வநாதன்
உரையாடல் : R.K.சண்முகம்
ELEGANT

புத்திசாலித் தனம். அது நிஜமாகவே நடக்கும் என்று எதிர்பார்ப்பது அறிவீனம்.''

அவள் என் மனத்தில் உள்ளதை உணர்ந்து கொண்டுதான் அப்படிச் சொன்னாளா என்பது எனக்குத் தெரியாது.

என் திருமணம் நடந்தது. என் கணவர் தினேஷ் பம்பாய் அட்டாமிக் எனர்ஜியில் ஓர் இன்ஜினீயர். தினேஷ் — எனக்கு மிகவும் பிடித்த சுஜாதாவின் . கதைகளில் வரும் பெயர். பெயரைப் பிடித்தது போல் எனக்கு நாளடைவில் அவரையும் பிடித்து விட்டது. சில சமயங்களில் அவருடைய கருத்துக்களை நான் அவ்வளவாக ஒப்புக் கொள்ளாவிட்டாலும்....

ஒருமுறை . லீவுக்கு நாங்கள் இருவருமே சென்னை வந்தோம். தனிமை கிடைக்கும் பொழுது வேப்ப மரத்து நிழலில் நான் நினைவுகளை அசை போட உட்காருவேன். அவர் மரத்தின் வேர் மண்ணில் புரையோடி வீட்டுப் பக்கம் வந்திருப்பதைப் பார்த்துவிட்டு என் தந்தையிடம் ''மாமா! மரத்தை வெட்டிவிடுங்கள். வீட்டுக்கே ஆபத்து'' என்று சொன்னபோது நான் துடித்தேன். மரத்தை வெட்டுவதா? துக்கம் பொங்க ஊருக்குக் கிளம்பு முன் ''அதை மட்டும் செய்து விடாதீர்கள். வேறு ஏதாவது வழி இருந்தால் பாருங்கள் அப்பா!'' என்று கேட்டுக்கொண்டேன்.

பம்பாய்க்குப் போன பின்னரும் நான் மீண்டும் மீண்டும் கேட்டு எழுதிய பிறகே அப்பா பதில் எழுதினார். புரையோடிய வேரை ஜாக்கிரதையாக அப்புறப்படுத்தி விட்டார்களாம்.

அதன் பின் இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன. ராகுல் பிறந்து அவனுக்கு ஆண்டு நிறைவைக் கொண்டாடப் பிறந்தகம் சென்றேன். நான் போனதிலிருந்தே வானிலை சரியில்லை. மழையும் காற்றுமாக இருந்தது. வீட்டின் முன் நீர் தேங்கி ஒரே சகதி.

என்னுடைய கண்காணிப்பையும் மீறித் தளர் நடை பயின்று ராகுல் எப்பொழுதோ வெளியே போயிருக்க வேண்டும். நான் கவனிக்காமல் இருந்து விட்டேன். ''அம்மா'' என்று திடீரென்று அவன் அலறிய குரல் வெளியிலிருந்து எழுந்தபொழுதுதான் விழித்துக்கொண்டவள் போல் ஓடிப் போய்ப் பார்த்தேன் ராகுல் கீழே விழுந்திருந்தான். அவன் காலின் மீது ஒரு சிறிய மரக் கிளை முறிந்து விழுந்திருந்தது.

நான் பதறிப் போனவள் அவனை எடுத்து அணைத்தேன். வலது கால் கட்டை விரல் நகம் கிளை விழுந்ததால் நகங்கிச் சேதமுற்று இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. பின்னாலேயே என் பெற்றோர்களும் கிட்டுவும் ஓடி வந்தார்கள்.

இரத்தத்தைப் பார்த்து என் மனத்தில் வெறி புகுந்திருக்க வேண்டும். ''மரத்தை முதலில் வெட்டி எறியுங்கள் அப்பா. குழந்தை விரல் இன்னிக்குத் தப்பிச்சது என் புண்ணியம்'' என்று கோபத்துடன் சொன்னேன். குழந்தையை டாக்டரிடம் அழைத்துச்சென்று மருந்து போட்டு பாண்டேஜ் எல்லாம் கட்டி ஆயிற்று. அன்று முழுதும் மனம் வேதனைப் பட்டது. எதற்காக என்பது தெரியவில்லை.

அன்று இரவு முழுதும் மழையும் காற்றும் அடித்துத் தீர்த்து விட்டன. ஜன்னலைத் திறக்கக்கூட முடியவில்லை.

மறுநாள் காலையில் நான் எதேச்சையாக வெளியே எட்டிப் பார்க்கும்பொழுது அந்தக் காட்சி... நான் திடுக்கிட்டுப் போனேன். என்னுடனும் எங்கள் வீட்டவர்களுடனும் இத்தனை நாள் தோழமை கொண்டு இணை பிரியாத ஒரு நபராக இருந்த வேப்ப மரம் முறிந்து கீழே சாய்ந்திருந்தது. கண்களில் குளம் கட்டும் நீர்த் திவலைகளைப் போன்று அதன் இலைகளிலும் பனித்திருந்த மழை நீர்.

மற்றவர்கள் மரத்தை வெட்டிவிடும்படி சொன்னபோது அதற்கு லட்சியமாகப் படவில்லை. ஆயின் அதை உயிருக்குயிராக நேசித்த என் வாயாலேயே வெட்டிவிடும்படி சொன்னதை அதனால் தாங்கிக்கொள்ள முடியவில்லையோ?

உணர்ச்சிகள் வெடித்து மனம் குலைந்து சாய்ந்து விட்டதோ?

என்னுடைய அன்பையும் தான் இழந்து விட்டோம் என்ற முடிவுக்கு வந்து தற்கொலை செய்து கொண்டு விட்டதோ? ஏதேதோ கற்பனைகளும் எண்ணங்களும் என் உள்ளத்தில் எழுந்து கண்ணீராய் வடிந்தன.

தான் வெறும் மரம் அல்ல என்பதை உணர்த்துவது போன்று அது தெருவை அடைத்துக் கொண்டு கீழே கிடந்தது!



அமரர் கல்கி

அத்தியாயம் 62

லட்சிய வெறி

பவானி தன் தாயாரைப் பற்றி நெகிழ்ந்து கூறிய வார்த்தைகளைக் கேட்டு உமாகாந்தன் உருகிப் போனான்:

''உண்மையிலேயே அந்த ஒரு விஷயத்தில் நீ துரதிர்ஷ்டசாலிதான் பவானி. என் தாயாருடன் நெருங்கிப் பழக உனக்குக் கொடுத்து வைக்கவில்லை அல்லவா ? இரண்டு நாட்கள்தான் இப்போது அவளுடன் இருந்தேன். அதற்கு மேல் தங்க பயம். எனக்கு, அவளுக்கு, அவள் பெற்றோருக்கு எல்லோருக்கும் ஆபத்து என்ற எண்ணத்தில் கிளம்பிவிட்டேன். ஆனல் அந்த இரண்டு நாட்களும் அவள் அள்ளிக் கையில் வைத்த பழையது சாப்பிட்ட திருப்தி என் வாழ்நாளெல்லாம் இருக்கும். அமிர்தம்தான் அது. நான் புறப்பட்ட போது அவள் பெட்டியைத் திறந்து அடியில் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்த என் கதர் பைஜாமா ஜிப்பாக்களை எடுத்துத் தந்தாள். 'அம்மா! நான் எப்படியும் உன்னைத் தேடி வருவேன் என்று எதிர்பார்த்து இவற்றைப் பின்னேடு எடுத்து வந்தாயா ?' என்று கேட்டேன். 'நீ எங்கேடா என்னை விட்டுப் பிரிந்தாய் ? அண்ணன் தம்பி இரண்டு பேரும் சரி, உன் அப்பாவும் சரி, சதா என்னேடுதான் இருக்கிறீர்கள் !' என்ருள்.

'' 'அம்மா அண்ணவும் நானும் இவ்வளவு பெரிய தவறுகளைச் செய்திருக்கிறேமே ' என்றேன்.''

'' 'தெரியுமே ! என்னை இந்தக் கோலத்தில் நிறுத்தி வைத்திருப்பதே நீங்கள் இரண்டு பேரும் பண்ணின காரியங்கள்தானே !'

'' 'அப்படி இருந்தும் இவ்வளவு அன்பு காட்டுகிறயே, அம்மா !'

'' 'அதற்குப் பெயர்தான் தாய்ப் பாசம் என்கிறதுடா. இது தெரியாதா?' '' என்ருன்.

இதைச் சொல்லி வரும் போது உமாகாந்தனுக்குத் தொண்டை கரகரத்தது. பவானிக்கோ கண்களில் நீர் திரையிட்டு எதிரே பாதையை மறைத்தது. கண்ணீரை விரல்களால் துடைத்தவள், பொருமை எட்டிப் பார்ப்பது போன்ற தொனியில், ''என்ன இருந்தாலும் அம்மா என்றல் உசத்தி தான். சிறையில் இருந்தபோது இத்தனை காலமாக எனக்கு ஒரு கடிதம்கூடப் போடாமல் இருந்துவிட்டீர்கள் அல்லவா ?'' என்ருள்.

'' எப்படி எழுதுவேன் பவானி ? என் அப்பா உன் கண்களுக்கு என்னைத் தேசபக்தராக்கியிருந்தது எனக்குத் தெரியாது. இருட்டுப் பட்டத்துடன் தம்பி என்னைச் சென்றவன் நான். அந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டு உனக்கு எப்படி எழுதுவேன் ? உண்மையை வெளியிடுவதில்லை என்றும், அண்ணனைக் காப்பாற்றுவது என்றும் தீர்மானித்த பிறகு என் நிலைமையை ஒரு கடிதத்தில் எப்படி விளக்குவேன் ?''

'' என்னைப் பற்றி எப்படி அறிந்தீர்கள் ? நான் ராமப்பட்டணத்தில் இருப்பது எப்படித் தெரிந்தது ?''

''கல்கத்தாவிலிருந்து புறப்படுவதற்குமுன் உன் வீட்டுக்கு ஃபோன் செய்தேன். நெம்பர் நினைவிருந்தது. எப்படியாவது சில நிமிஷமேனும் உன்னிடம் தனியாகப் பேச ஆவல். இடத்தைச் சொல்லிக் குறிப்பிட்ட நேரத்தில் அங்கே உன்னை வரச் சொல்லலாம் என்று எண்ணினேன். உன் பெற்ரேர் பேசியிருந்தால் ஒரு வேளை சந்தேகப்பட்டு, 'நான் யார்? என்ன விஷயம்?' என்றெல்லாம் கேட்டிருப்பார்களோ, என்னமோ ! ஆனல் என் அதிர்ஷ்டம் உங்கள் வீட்டு வேலைக்காரன் பேசினன்: 'பவானி அம்மாவா ? அவங்க ராமப்பட்டணத்தில் மாமா வீட்டுக்குப் போய் மாசக் கணக்கா ஆகிறதே' என்ருன். அவ்வளவுதானே எனக்கு வேண்டியது ? ஆனல் உன்னைத் தொடர்ந்து என் அண்ணவும் ராமப்பட்டணத்துக்கே வந்திருக்கிறன் என்பது உன்னைச் சந்தித்த பிறகுதான் எனக்குத் தெரியும். என் தாயாருடன் பேசிக் கொண்டிருந்த போது கோவர்த்தனன் பற்றி நான் எதுவுமே கேட்கவில்லை. அவளாக ஏதோ கூற வந்த போதும் நான் சுவாரசியம் காட்டவில்லை. 'அவன் கதை எனக்கு எதற்கு அம்மா ?' என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டேன். ஆனல் அவன் கதைதான் தொடர்கதையாக என்னைப் பின்தொடர்கிறது !''

''பின்தொடரவில்லை, முந்திக் கொண்டே போய்விட்டது. நம் வருகைக்காகக் காத்திருக்கிறது. அதோ பாருங்கள் ! சாலைக்குக் குறுக்கே தடுப்பு ஏற்படுத்திவிட்டுப் போலீஸ்காரர்கள் நிற்பதை '' என்ருன் பவானி, காரின் வேகத்தைத் தணித்தவாறே.

பவானியை அவள் மாமா குணசேகரன் லாக்—அப்பில் காண வந்தார். அவளிடம் மாஜிஸ்திரேட் கோவர்த்தனன் கூறிய யோசனையை விவரித்தார் : '' 'உமாகாந்தன் சிறையிலிருந்து தப்பிய குற்றவாளி என்று எனக்குத் தெரியாது ; ஏதோ மனிதாபிமானத்தால் காயம்பட்டவனுக்கு உதவ முற்பட்டேன்; பிறகு அவன் தப்பிச் செல்ல வேண்டி என்னைக் காரோட்டி வருமாறு கட்டாயப்படுத்தினான்; அதற்கு இணங்காவிட்டால் கொன்று விடுவதாக மிரட்டினான்' என்று நீ எழுதித் தர வேண்டும். நீ விடுதலை பெற அது ஒன்றுதான் வழி, பவானி!''

''அப்படிப் பொய்யாக ஒரு வாக்குமூலம் எழுதித் தந்து நான் விடுதலை பெற விரும்பவில்லை, மாமா! நீங்கள் உமாவிடம் பேசுங்கள். அவர் வழக்கை நான் நடத்தச் சம்மதிக்க வேண்டும் என்று வற்புறுத்துங்கள். கோர்ட்டில் அவர் உண்மைகளைக் கூற ஒப்புக் கொள்ளச் செய்யுங்கள். அதற்கு மட்டும் அவர் சம்மதித்தால் குறுக்கு விசாரணையில் மாஜிஸ்திரேட்டைச் சந்தி சிரிக்கப் பண்ணி விடுவேன் நான். உமாகாந்த் நிச்சயம் விடுதலை பெற்றுவிடுவார்.''

குணசேகரன் உமாகாந்திடம் போய் நடந்ததையெல்லாம் விவரித்தார். மாஜிஸ்திரேட் கோவர்த்தனனின் யோசனையையும் பவானியின் பதில் யோசனையையும் கூறினார்.

''குணசேகரன் ஸார் ! ஆபத்தான ஒரு கட்டத்தில் அண்ணனுக்கு நான் கொடுத்த வாக்குறுதியை ஒரு நாளும் மீறமாட்டேன். அப்படி நான் செய்தால் இத்தனை நாட்கள் நான் சிறையிலிருந்து பட்ட அவதிக்கெல்லாம் என்ன அர்த்தம் ? அத்தனையும் வியர்த்தமாக அல்லவா முடியும் ?''

''குற்றமற்றவன் சிறையில் வாடுவதும் குற்றவாளி வெளியே சுதந்திரமாக உலாவுவதும் என்ன நியாயம் ?''

''தண்டிப்பது கடவுள் பொறுப்பு, மன்னிப்பது மனிதன் பாக்கியம்.''

'' உன் லட்சிய வெறி எனக்கொன்றும் புரியவில்லை'' என்றார் குணசேகரன். ''இத்தனை நாட்களாய் உன்னை நீயே வருத்திக் கொண்டாய். இப்போது உன்னைக் காதலிப்பது தவிர வேறு ஒரு தவறும் செய்தறியாத என் மருமகளையும் சிறையில் தள்ளி விடப் போகிறாய். இதொன்றுதான் எனக்குத் தெளிவாகிறது.''

'' நீங்கள் கொஞ்சம்கூடக் கவலைப்பட வேண்டாம், ஸார் ! மாஜிஸ்திரேட் கேட்டது போன்ற வாக்குமூலத்தைப் பவானி எழுதாவிட்டால் என்ன? நான் எழுதித் தருகிறேன். போலீஸாருக்கு அதுவே போதும். 'பவானிக்கு நான் சிறையிலிருந்து தப்பிய கைதி என்று தெரியாது ; கருணையினால் உதவினாள்; நான் சற்றுக் குணமடைந்ததும் ஸி.ஐ.டிகளிடமிருந்து தப்ப அவள் காரைப் பயன்படுத்திக் கொண்டேன்; பவானியை மிரட்டிக் காரோட்டி வரச் செய்தேன்' இவ்வளவு தானே எழுத வேண்டும் ? எங்கே, ஒரு பேனாவும் தாளும் கொடுங்கள்!''

''ஐயய்யோ! நான் அப்படி ஒரு கடிதத்தை உன்னிடமிருந்து எழுதி வாங்கிப் போய் மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்ததாகத் தெரிந்தால் அப்புறம் பவானி என்னைச் சும்மாவிட மாட்டாள். அக்கினியாகச் சொற்களைக் கொட்டி என்னை வறுத்தெடுத்து விடுவாள். வேண்டாமப்பா, வேண்டாம் !''

'' நீங்கள் வாங்கிக் கொள்ளாவிட்டால் என்ன ? இங்கே வருகிற இன்ஸ்பெக்டரிடம் எழுதிக் கொடுத்து அனுப்புகிறேன், கோவர்த்தனனுக்கு.''

'' என்னமோ செய், என் காதில் மட்டும் போடாதே ! நான் வருகிறேன்'' என்றார் குணசேகரன்.



சில மணி நேரம் கழித்துப் பவானி இருந்த லாக்—அப் அறைக் கதவு திறந்தது. ''நீங்கள் போகலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

பவானிக்கு என்ன நடந்திருக்க வேண்டும் என்று உடனே புரிந்து விட்டது. உமாகாந்தனின் வக்கீல் என்ற முறையில் அவனைப் பார்க்க அனுமதி பெற்று உடனே போனாள்.

'' நீங்கள் இப்படிச் செய்தது கொஞ்சம் கூடச் சரியில்லை. இப்போதுகூட ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. உங்கள் வக்கீலாக இருந்து வாதாட அனுமதி கொடுங்கள். கோர்ட்டில் விசாரிக்கும்போது என் கேள்விகளுக்கு உண்மைகளைப் பதிலாகச் சொல்லுங்கள். நீங்கள் நிச்சயம் விடுதலை பெறலாம்'' என்றாள்.

'' உன் வாதத் திறமையெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் உன் வேண்டுகோளுக்கு நான் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டேன்'' என்றான் உமாகாந்தன்.

''உங்களுக்கு உங்களுடைய அர்த்தமற்ற, அபத்தமான வாக்குறுதிதான் முக்கியம். நான் எக்கேடு கெட்டுப் போனாலும் உங்களுக்குக் கவலை இல்லை'' என்று பவானி கூறி விம்மினாள்.

'' என்னை மன்னித்துவிடு, பவானி! '' என்றான் உமாகாந்தன்.

'' இப்போது மன்னிக்கமாட்டேன். இன்னும் நாலு வருஷமோ ஆறு வருஷமோ தண்டனை பெற்று மறுபடியும் சிறையிலிருந்து

விட்டு வெளியே வரும்போது, பவானி என்ற தலை நரைத்த கிழவி ஒருத்தி உங்களுக்காக இங்கேயே காத்திருப்பாள். அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள். அப்போதுதான் மன்னிப்பேன்'' என்று அழுது கொண்டே சொன்னாள் பவானி.

உமாகாந்தன் மெய்சிலிர்த்தான். ''எத்தனையோ கற்புக்கரசிகளைப் பற்றிப் புராணங்களில் படித்திருக்கிறேன். உனக்கு நிகராக யாருமில்லை'' என்றான்.

''நானும் எத்தனையோ சத்தியசந்தர்களைப் பற்றிப் புராணங்களில் படித்திருக்கிறேன். உங்களைவிட அசடான ஒருத்தர் கிடையாது'' என்று கூறிப் பவானி கண்ணீருக்கிடையில் புன்னகை பூத்தாள். மழை



ஓய்ந்ததும் கதிரவனைப் பார்த்துச் சிரிக்கும் மலராக விளங்கியது அவள் முகம். ''போகட்டும். ஒரு வாக்குறுதி கொடுங்கள்'' என்றாள்.

'' என்ன பவானி?''


''நாலு வருஷமோ ஆறு வருஷமோ தண்டனைக் காலம் எதுவானாலும். முழுக்க அனுபவித்துவிட்டு வாருங்கள். மறுபடியும் தப்பியோடி வந்து வம்பில் மாட்டிக் கொள்ளாதீர்கள்!''

உமாகாந்தன் உரக்கச் சிரித்தான். ''அப்படியே ஆகட்டும், பவானி! ஆனால் இந்த முறை தண்டனையை அனுபவிப்பது எனக்கொன்றும் அவ்வளவு சிரமமாக இராது. உன் ஆழ்ந்த, அசைக்க முடியாத காதலைப் புரிந்து கொண்டிருக்கிறேன். என்னை நீ தவறாக எண்ணவில்லை என்றும் தெரிந்து கொண்டிருக்கிறேன். இவை போதும். ஆறு வருஷமானாலும் ஆறு நாட்களாக ஓட்டிவிட்டு ஓடி வந்து விடுவேன்'' என்றான்.

அத்தியாயம் 63

உல்லாச வேளை

அன்று மாலை புதிதாக வாங்கிய ஓர் உயர் ரக விஸ்கி பாட்டிலுடன் கோவர்த்தனனைப் பார்க்கப் போனான் கல்யாணம். மல்லிகை மலர்ந்து மணம் பரப்பும் நேரம். கோவர்த்தனன் வீட்டுத் தோட்டத்தில் மல்லிகையுடன்



நைட் குவின் மலர்களின் மணமும் சேர்ந்து நறுமணம் கமமாகச் சூழ்ந்திருந்தது.

"எங்கேப்பா வந்தாய் மறுபடியும் ?" என்றார் கோவர்த்தனன்.

"உங்கள் வெற்றியைக் கொண்டாடத்தான், ஸார் !" என்று சொல்லிக் கொண்டே தான் கொண்டு வந்திருந்த பொட்டலத்தைப் பிரித்தான் கல்யாணம்.

"எதைச் சொல்கிறாய்? என்ன வெற்றி பெற்று விட்டேன் நான் ?"

"என்ன ஸார், அப்படிக் கேட்டுவிட்டீர்கள் ? மிஸ்டர் இன்ஃப்ளூயென்ஸாவைப் பிடித்து உள்ளே தள்ளவில்லையா ? இனிமேல் பவானியை நீங்கள் அடையத் தடை என்ன இருக்கிறது? முகூர்த்த நாள் பார்க்க வேண்டியதுதானே பாக்கி ?" , என்ற கல்யாணம் பிரித்த பெட்டிக்குள்ளிருந்து மதுப் பாட்டிலை எடுத்து மேஜையின் மீது வைத்தான்.

முழுசும் புதுசுமான ஜானிவாக்கர் புட்டியைப் பார்த்ததும் கோவர்த்தனன் முகம் மலர்ந்தது.

"அதைச் சொல்கிறாயா ? பவானி அந்தத் தடியனிடமிருந்து காப்பாற்றப்பட்டதற்குச் சந்தோஷப்பட வேண்டியதுதான். கம் லெட் அஸ் ஸெலிபரேட் ! யூ மஸ்ட் ஜாயின் மீ" என்றார் கோவர்த்தனன். தோட்டக்காரனை அழைத்து வராந்தாவிலிருந்த வசதியான நாற்காலிகள் இரண்டைத் தோட்டத்தில் எடுத்துப் போடச் சொன்னார். "இந்தாப்பா! அந்த காஃபி டேபிளையும் இப்படி கொண்டு வந்து போடு. அப்புறம் மணியைக் கூப்பிடு" என்றார்.

"இந்த மல்லி மலர்களின் வாசனையும் இனி வீண் போகாது ஸார். சரம் சரமாகத் தொடுக்கச் செய்து பவானிக்குக் கொண்டையைச் சுற்றி நீங்களே உங்கள் கரத்தால் சூட்டலாம்" என்றான் கல்யாணம்.

கோவர்த்தனன் அவன் தோள்களைத் தட்டிக் கொடுத்தார், உற்சாகமாக. "உன்னை என்னமோ என்று நினைத்தேன். ரொம்ப சாமர்த்தியமாகப் பேசுகிறாயே" என்றவர், சமையல் அறையிலிருந்து வந்து நின்ற மணியைப் பார்த்து, "சோடா, ஐஸ் கொண்டு வா. அப்படியே கொரிக்க ஏதாவது வைச்சிருப்பியே, அதையும் எடுத்து வா" என்றார்.

"கூடவே கொஞ்சம் சர்க்கரையும் வேண்டும்" என்றான் கல்யாணம். மணி தன்னை அப்போது பார்த்த பார்வையில் ஒரு வித எதிர்ப்பு குடிகொண்டிருப்பது கல்யாணத்துக்குப் புரிந்தது. ஆனால் ஏன், எதற்காக என்பதை அவனால் உணர முடியவில்லை.

"சர்க்கரை எதற்கு ?" என்றார் கோவர்த்தனன்.

"கமலாவுக்கும் எனக்கும் கல்யாணம். பவானிக்கும் உங்களுக்கும் கல்யாணம். நீங்கள் என் வாயில் சர்க்கரை போடுங்கள். நான் பதிலுக்கு உங்கள் நாவை இனிக்கச் செய்கிறேன்"

"பேஷ், பேஷ் !" என்று தலையசைத்தார் கோவர்த்தனன்.

சில விநாடிகளில் உருளைக்கிழங்கு வறுவல், வறுத்த முந்திரிப் பருப்பு, காராபூந்தி, ஐஸ், சோடா, சர்க்கரை எல்லாம் வந்து சேர்ந்தன.

அவற்றை வைத்துவிட்டு ஏதோ கூற விரும்பியவர் போல் ஒரு கணம் தயங்கினார் மணி. அதற்குள், "நீ போகலாம்" என்று அவரை அனுப்பி விட்டார் கோவர்த்தனன்.

"இந்தச் சமையல்காரரை எங்கே பிடித்தீர்கள் ?" என்றான் கல்யாணம்.

"ரொம்ப காலமாக எங்கள் வீட்டிலேயே இருக்கிறான். என்னைத் தூக்கி வளர்த்து எல்லாம் செய்திருக்கிறான். அதனால் அவனுக்குக் கொஞ்சம் சலுகை அதிகம். இப்போ நீ இங்கிருப்பதால் வாயை மூடிக் கொண்டு போய் விட்டான். இல்லாத போனால் நான் குடிக்கக் கூடாது, சிகரெட் பிடிக்கக் கூடாது என்று சண்டை பிடித்திருப்பான். அப்புறம் ஓர் அதட்டல் போட்டுத்தான் அவனை அடக்க வேண்டியிருக்கும். தினமும் இவனுடன் இது விஷயத்தில் ஒரு போராட்டம் நடத்துகிறேன். ஆனால் மனுஷன் ரொம்ப நல்ல மாதிரி. கமான் ஹெல்ப் யுவர் ஸெல்ஃப்" என்றார் கோவர்த்தனன்.

"எஸ், ஐ வில் ஹெல்ப் மை ஸெல்ஃப்" என்ற கல்யாணம் தனது டிரிங்கைத் தானே தயாரித்துக் கொள்ள ஆரம்பித்தான். பாண்ட் பாக்கெட்டிலிருந்து இரண்டு எலுமிச்சம் பழங்கள் வெளிப்பட்டன. சாவிக் கொத்திலிருந்த பேனாக் கத்தியால் ஒரு பழத்தை வெட்டிச் சாறு பிழிந்தான். இரண்டு ஸ்பூன் சர்க்கரை போட்டுச் சோடாவைக் கலந்தான். லெமனேடைக் கரத்தில் ஏந்தி, "சீர்ஸ்" என்றான்.

கோவர்த்தனன் அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "சீர்ஸ்" என்று கூறி விஸ்கியை விழுங்கினார்.

"பவானிக்கு விடுதலை கிடைக்கச் செய்து விட்டீர்களாமே, எப்படி ஸார் அதைச் சாதித்தீர்கள் ? நீங்கள் விரும்பியபடி அவன் வாக்கு மூலம் எழுதிக் கொடுத்து விட்டானா ?"

"அவன் தரவில்லை, அதனால் என்ன? உமா காந்தனே எழுதிக் கொடுத்துவிட்டான். அது போதாதா ?"

"பேஷாகப் போதும். இப்போது உமா காந்தன் நிலை என்ன?"

"பழைய பாக்கி இரண்டு வருஷங்கள், இப்போ தப்பி ஓடிய குற்றத்துக்காக மேலும் மூன்று வருஷங்கள்...."

"ஆகமொத்தம் ஐந்து வருஷங்கள்."

"அவசரப்படாதே, அப்பா ! அவனைப் போலீஸார் பிடித்துச் சோதித்தபோது அவனிடம் நேதாஜியின் இயக்கம் பற்றிய பிரசாரப் பிரசுரங்கள் பல இருந்தன. நேதாஜியின் படங்களையும் ஏராளமாய்

அமிர்தாஞ்சனம்

தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு அனைத்துக்கும் குணமளிக்க இல்லந்தோறும் இருக்கவேண்டிய நல்ல மருந்து.







வலி, ஜலதோஷம், சுளுக்கு ஆகியவற்றிற்கு சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவுங்கள். அதன் சிறப்பான பத்து மருந்துகளின் கலவை வியக்கத்தக்க வகையில் உங்களுக்கு நிமிஷத்தில் நிவாரணமளிப்பதை உணர்வீர்கள். சிக்கனமான ஜாடி, சிறிய பாட்டில் மற்றும் மலிவு விலையில் அடக்கமான டப்பாவிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம்
80 ஆண்டுகளுக்கு
மேலாக நம்பகமான
குடும்ப நிவாரணி



அமிர்தாஞ்சன் லிமிடெட்


AM-1255

புதிய

உடனடி-உபயோக

டிக்-20

உடனடியாக மூட்டைப்பூச்சிகளை ஒழிக்கிறது



மண்ணெண்ணை கலப்பதற்கான மேற்படி செலவு கிடையாது!



கலக்க வேண்டிய தொல்லை கிடையாது. திறந்து நேராக உபயோகிக்க வேண்டியதுதான். உடனடியாக மூட்டைப் பூச்சிகளை ஒழிக்கிறது. பிளவுகள், பொந்துகள், மெத்தைத் தையற்குழிகள், ஃபர்னிச்சர் ஜாயிண்ட்டுகள், சுவர்களிலுள்ள சட்டங்களின் அடி பாகங்கள் போன்ற பல இடங்களிலும் புதிய டிக்-20 உபயோகியுங்கள்.

புதிய டிக்-20 இப்போது அதிக பாதுகாப்பானது. வீட்டில் வைக்கலாம். காரணம் அது மீண்டும் புதுப்பிக்கப் பட்ட ஃபார்முலா கொண்டதாகும். முன் கூட்டியே மண்ணெண்ணை கலக்கப்பட்டு உடனடியாக உபயோகிக்க வசதியாக தயாரிக்கப்பட்டுள்ளது. சர்க்காரின் புதிய நிர்ணயங்கள்படி உள்ளது. உபயோகிப்போரின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

இன்றே டிக்-20 வாங்குங்கள் இன்றிரவே நன்றாக உறங்குங்கள்.

ஒரு ராலிஸ் இந்தியா தயாரிப்பு

SADEUS/RT-3

வைத்திருந்தான். அவற்றை ரகசியமாக விநியோகிக்க எண்ணியிருக்கிறான். ராஜத் துவேஷக் குற்றச்சாட்டும் சேர்ந்து கொள்கிறது.''

'' அதற்கு மேலும் இரண்டு வருஷங்கள் நீட்டிவிட வேண்டியதுதானே ! ஏழு வருஷங்களுக்குக் கவலை இல்லை'' என்று கல்யாணம் திடீரென்று நினைத்துக் கொண்டவன் போலக் கேட்டான்: '' ஏன் சார், நான் கேட்டால் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே.... உங்களுக்கும் உமாகாந்தனுக்கும் இடையில் முக ஜாடையில் நிறைய ஒற்றுமை இருக்கிறதே ?''

'' அது விஷயம் தெரியாதா, உனக்கு ?'' என்றார் கோவர்த்தனன். ''அவன் என் சொந்தத் தம்பிதான்.''

''அதானே பார்த்தேன். அவனைத் தேடிக் கொண்டு வந்த ஸி. ஐ.டிகள் அவன் போட்டோவை ஒரு சமயம் என்னிடம் ஏலமலைக் கிராமம் ஒன்றில் காண்பித்தார்கள். 'இவனை எங்கேயாவது பார்த்ததுண்டா ?' என்றார்கள். எனக்கு உடனே உங்கள் ஞாபகம் வந்தது. ஆனால் நான் ஒன்றும் சொல்லவில்லை. 'எதற்கு வம்பு' என்று பேசாமல் இருந்துவிட்டேன்.''

''அதனால் என்ன? அவர்கள் வேறு பலரிடம் விசாரித்துக் கொண்டு கடைசியில் என்னைத் தேடியே வந்துவிட்டார்கள். அப்படி வந்ததே நல்லதாயிற்று. நான் என் அதிகாரத்தைக் காட்டியதில்தான் அவர்கள் சுறுசுறுப் படைத்தார்கள். இல்லாத போனால் அந்தச் சோம்பேறிகளாவது உமாகாந்தனைப் பிடிப்பதாவது ?''

''அது சரி சார், சொந்தத் தம்பியைப் பிடிப்பதில் நீங்கள் இவ்வளவு தீவிரம் காட்ட வேண்டுமா ? அவனுக்குக் கடுமையான தண்டனை வழங்கத்தான் வேண்டுமா ? தம்பியாச்சே என்று இலேசான தண்டனையுடன் விட்டுவிடக்கூடாதா ?''

இப்படிக் கேட்ட கல்யாணம் கோவர்த்தனனுக்குப் பின்னால் அடர்ந்து உயர்ந்து வளர்ந்திருந்த குரோட்டன்ஸ் செடியின் மறைவில் ஏதோ அசைவது உணர்ந்து துணுக்குற்றான். அது சமையல்காரர் மணி என்பது தெரிந்ததும் அவனுக்குப் பரபரப்பு ஏற்பட்டது. 'எதற்கு அவன் இப்படி ஒளிந்திருந்து சம்பாஷணையை ஒட்டுக் கேட்கிறான்?' மணி மறைந்திருப்பதைத் தான் கவனியாததுபோல் நடந்து கொண்டான் கல்யாணம்.

இதற்குள் இரண்டு தடவை பாட்டிலைக் கண்ணாடி டம்ளரில் கவிழ்த்திருந்த கோவர்த்தனன் கல்யாணத்தினிடம் ஏற்பட்டிருந்த மாறுதல் எதையும் கவனிக்கவில்லை. அவனுக்குப் பதில் கூறும் முகமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

''மிஸ்டர் கல்யாணம் ! சட்டம் என்று வரும் போது அங்கே அண்ணன் தம்பி உறவுக்கு இடமேதும் இல்லை. முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் வக்கீலாகிய உனக்கு இது தெரிய வேண்டாமா ?''

''வாஸ்தவம்தான் ஸார்'' என்றான் கல்யாணம். அதே சமயம் மறைவிலிருந்த மணி தன் கைகளை வேதனையுடன் பிசைந்து கொள்வதையும் கவனித்துவிட்டான்.

(தொடரும்)





வாசுதேவ்



சென்னைக்கு அருகிலுள்ள சோழமண்டலம் கிராமம் இந்திய சைத்ரீகர்கள் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. மேற்கத்திய நாகரீகத்திலிருந்து மாறுபட்டு இந்தியத் தன்மை வாய்ந்த அற்புதமான புதுமை ஓவியங்களைப் படைத்து ஒரு கலை இயக்கத்தை இந்தியாவில் உருவாக்கிய சித்திரக்காரர்களில் ஒருவர் திரு வாசுதேவ்.

பெங்களூரில் பிறந்த இந்த 35 வயது இளைஞருக்கும் தேசிய விருதுகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துகிறது. 1967 ஆம் ஆண்டு தேசிய லலித் கலா அகாதமி விருதையும், 1965 ஆம் ஆண்டு மைசூர் மாநில லலித் கலா அகாதமி பரிசையும், 1967 ஆம் ஆண்டு சென்னை லலித் கலா அகாதமி பரிசையும் பெற்றுள்ள வாசுதேவ், பாரத ஜனாதிபதியின் தங்கக் கோப்பையைப் பெற்ற 'வம்ச விருக்ஷா' 'சம்ஸ்காரா' ஆகிய கன்னடப் படங்களுக்குக் கலை இயக்குனராகவும், 'காடு' என்ற படத்துக்கு விளம்பர இயக்குனராகவும் பணியாற்றிப் பிரசித்தி பெற்றவர்.

'விருக்ஷா' என்ற தலைப்பில் மிளிரும் இவரது வண்ணச் சித்திரங்களும், வெள்ளி உறையிட்ட செப்புத் தகட்டுச் சித்திரங்களும், இப் பிரபஞ்சத்தின் தாத்பர்யங்களான பிறப்பு, வளர்ப்பு, பந்தம், பாசம், இறப்பு ஆகியவைகளை உருவக வடிவில் அற்புதமாகச் சித்திரிக்கின்றன.

கணேசப் பெருமானைப் பலவிதங்களில் வடிப்பதும் திரு வாசுதேவ் அவர்களின் கைத்திறன்களில் ஒன்று.

டெல்லி, பம்பாய், சென்னை, பெங்களூர், தார்வார் ஆகிய நகரங்களில் இதுவரை பதினேழு தனிநபர் சித்திரக் கண்காட்சிகள் நடத்தி உள்ளார். இவரது சித்திரங்கள் ப்ருஸெல்ஸ், கோபன்ஹேகன், வியன்னா, ஆஸ்லோ, யூகோஸ்லேவியா, செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, பாரிஸ் ஆகிய மேலை நாடுகளில் நடைபெற்ற சித்திரக் கண்காட்சிகளில் பங்கு பெற்றும் பாராட்டுகள் பெற்றுள்ளன.

'இந்திய சித்திரக் கலையின் ஓர் எதிர்கால நம்பிக்கை' என்று பிரபல கலை விமர்சகர் நிஸிம் இஸக்கியேல் அவர்களால் வர்ணிக்கப்பட்டுள்ள திரு வாசுதேவிற்குக் கலை நுணுக்கமான ஒரு சினிமா எடுக்கும் ஆர்வம் உள்ளது.

- பி. ரங்கநாயகி

லக்ஷ்மி விலாஸ் பாங்க்
வளத்திற்கு வழிகாட்டி

கவலை முதலீட்டுத் திட்டம்

சிறுகச் சேர்த்து பெருக வாழ்க மாதத்தவணையாக ரூ 20-ஐ 120 மாதங்களுக்குச் செலுத்தி ரூ 4132 திரும்பப் பெறுங்கள். ரூ 5-ன் மடங்குகளாக பெருந்தொகையாக சேமிக்க எளிய திட்டம் இது.

பொன்விழா ரொக்கப்பத்திரங்கள்

இன்று நீங்கள் முதலீடு செய்யும் ரூ 60.30/ரூ 603.61 மாதங்களில் ரூ 100/ரூ 1000-ஆக திரும்பக் கிடைக்கிறது.

சுழல் முதலீட்டுத் திட்டம்

இன்று நீங்கள் செலுத்தும் ரூ 3000 241 மாதங்களில் ரூ 22165-ஆக உங்களுக்குத் திரும்பக் கிடைக்கிறது. மேற்படிப்புக்கோ, மகளின் திருமணத்திற்கோ, உங்கள் ஓய்வுகாலத் தேவைகளுக்கோ சேர்த்து வைக்க சீரிய திட்டம். உங்கள் திறனுக்கேற்ப பல,தொகைகளும், பல கால வரைகளும்.

லக்ஷ்மி தின சேமிப்பு

ஏழையும் செல்வம் சேர்க்கும் சிறப்புத் திட்டம். உங்களாலான சிறிய தொகையை தினம் சேமியுங்கள். உங்கள் வீடு தேடி வந்து தினச் சேமிப்பு ஏற்றுக் கொள்ளப்படும். LVB சிறப்பான வட்டியும் அளிக்கிறது.

LVB

லக்ஷ்மி விலாஸ் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்	நிர்வாக அலுவலகம்
693, ஜவஹர் கடைத் தெரு	1, பைகிராஃப்ட்ஸ் கார்டன் தெரு
கரூர் 639001	சென்னை 600 006

மணி ஆறு
ஜெனரல் மேனேஜர்

D. வர்த்தமானன்
சேர்மன்

Kripama-LVB-513



"மூன்று முடிச்சு" என்றதும் ஏதோ கல்யாணமாக்கும் என்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள். அது மனச்சாட்சியின் குமுறல்!

''கல்கி''யில் தொடர் கதையாக வந்த டைரக்டர் பாலசந்தரின் ''மூன்று முடிச்சுக்கள்'' அல்ல இது. ''ஓ சீதா கதா'' என்ற தெலுங்குக் கதையின் தமிழாக்கம்.

ஸ்ரீதேவியின் மூலம் தமிழ்த் திரைப் படத்துக்கு ஒரு புதுக் கதாநாயகியை அறிமுகப் படுத்திருக்கிறார், டைரக்டர். ரஜனிகாந்த் மூலம் ஒரு புது வில்லன் கிடைத்திருக்கிறார். வில்லன் என்பதற்காகக் கொஞ்சம்கூட அலட்டிக்கொள்ளாமல் அவர் அநாயாசமாக நடித்திருக்கிறார்.

ஆரம்பக் காட்சிகளில் கமலஹாசனைக் காதலித்தபோது ஸ்ரீதேவியும் சரி, படமும் சரி, படு ஜோர்! தனக்குப் பிரியமான ரிக்கார்டு கீனைப் போடச் சொல்லிக் கேட்டுக் கமலஹாசனின் உள்ளம் கவர்ந்த போதும், இருவரும் 'மௌனத் ஆர்கனை'யும் பூவரச இலை ஊதலையும் வைத்துக் கொண்டு ஊதியே தங்கள் காதலை வளர்த்துக் கொண்ட போதும் எனக்குண்டான மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது. 'முற்றிலும் புதுமையான படம் வந்திருக்கிறது' என்று நான் புளகாங்கிதம் அடைந்த போது 'இடைவேளை' வந்தது. அதன் பிறகு படம் எப்படி யெல்லாமோ திசை தப்பிப் போய்விட்டது. உல்லாசப் படகுச் சவாரியில் நீச்சல் தெரியாத கமலஹாசன நீரில் மூழ்கிப் போனதும் திரைக் கதையும் மூழ்கிப் போய் விட்டது!

'இடை வேளை'க்குப் பிறகு என். எஸ். விசுவநாதன் தம் அமைதியான நடிப்பினால் நமக்குத் திருப்தி அளிக்கிறார். வில்லனின் தந்தையான அவருக்குக் கம்பீரமான தோற்றம் இருக்கிறது.


பாலசந்தரின் நறுக்கென்று அமையும் சுருக்கமான வசனம் ரசிக்கத்தக்கது.

மனச்சாட்சி என்ற ஒரு பைத்தியம் அடிக்கடி வில்லனின் மனக்கண்முன் தோன்றி, ஆர்ப்பாட்டமாகச் சிரிப்பதும், கயிற்றில் முடிச்சுக்களாகப் போட்டுக் கொண்டிருப்பதும் என்ன உத்தியோ! வேண்டியிருக்கவில்லை!

ஒய். விஜயா, ஸ்ரீதேவியை ஆதரிக்கும் அக்கா; எக்ஸ்ட்ரா நடிகை; தீப்புண் பட்டு விகாரமடைந்து பிறகு தற்கொலையும் செய்துகொள்ளும் பாத்திரம் அது. தம் பாகத்தைத் திறமையாகச் செய்திருக்கிறார்.

பிற்பகுதியில் ஸ்ரீதேவியும், ரஜனிகாந்த்தும் சுவையான சந்திப்புக்களில் படத்துக்குச் சுவையூட்டுகின்றனர். ஆனால் முற்பகுதியுடன் இணைத்துப் பிற்பகுதியில் போடப்பட்ட முடிச்சு அழுத்தமாக விழவில்லை. கழன்று கொண்டுவிட்டது! — காந்தன்

சரித்திர 'சிப்ஸ்!'



பாபர் என்ற சொல்லுக்குப் புலி என்று பொருள். தந்தை வழியில் மாவீரன் தைமூரையும், தாய் வழியில் வெற்றி வீரன் செங்கிஸ்கானையும் முன்னோர்களாகக் கொண்டவர். பட்டத்துக்கு வரும்போது பாபருக்கு வயது பதினொன்றுதான்.



✕ பாபரின் மைந்தர் ஹுமாயூன். ஹுமாயூன் என்ற சொல்லுக்கு அதிர்ஷ்டக்காரன் என்று பொருள். ஆனால் வாழ்க்கையில் கொஞ்சம்கூட அதிர்ஷ்டத்தையே அடையாதவர் ஹுமாயூன். டெல்லி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து நிம்மதியாக ஆட்சி செய்த காலம் ஆறு மாதங்கள்தான். ஒரு சமயம் மாடிப்படியிலிருந்து இறங்கி வரும்போது கால் இடறி விழுந்து இறந்து விட்டார். ஹுமாயூன் இனிமையாகப் பாடுவதில் வல்லவர்.



✕ பாபரை 1527ல் கான்வா என்ற இடத்தில் ரஜபுத்திர வீரன் ராணா சங்கா கடுமையாக எதிர்த்துப் போரிட்டார். அவருக்கு அது சமயம் ஒரு 'கண்ணும்' ஒரு 'காலும்' ஒரு 'கையும்' கிடையாது. மேலும் 'நூறு போர்க்களம்' கண்டு, உடலில் '80 விழுப்புண்' களைப் பெற்றிருந்தார்.

— லலிதா நாராயணன்



சில சுவையான நிகழ்ச்சிகள்

காவேரிக் கலாசாலே சமஸ்கிருதப் பேராசிரியர் அனந்தகிருஷ்ண சர்மாவுக்கு ஆங்கிலத்திலும் நல்ல புலமை. 'மேகதூதம்' நடத்துகையில் 'வேர்ட்ஸ் வொர்த்' (Wordsworth)திலிருந்தும் 'ஷெல்லி'யிலிருந்தும் மேற்கோள்களாக அள்ளி விடுவார். ஆள் உயரம்; தலைப் பாகையுடன் அவர் வகுப்புக்குள் நுழைந்தால் ஒரே 'சப்தப்'. ஒரொரு சமயம் வடமொழிப் பாடம் எடுத்துக் கொள்ளாத மாணவர்கள் கூட அவர் வகுப்புக்கு வந்து 'ஆ' என்று வாயைப் பிளந்தபடி வீற்றிருப்பார்கள். இலக்கியத்தைக் கதைபடச் சொல்லித் தருவதில் அவருக்கு நிகர் அவரே. அனந்தராம தீட்சிதரைப்போல் கம்பீரமான குரலில் சுலோகங்களை அவர் படிக்கையில் யார்தான் சொக்கிப் போக மாட்டார்கள்? ஆங்கில இலாகாவைச் சேர்ந்த என் போன்ற இளைஞர்களுடன் அவர் இலக்கியச் சர்ச்சை தொடங்கி விட்டால் பொழுது போவதே தெரியாது.

கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே கயிறு இழுக்கும் போட்டி நடக்குமல்லவா? அதை வகுப்பில் அவர் தேவர்களும் அசுரர்களும் மந்தர மலையைக் கடைந்ததற்கு ஒப்பிட்டுப் பேசினார். 'யார் தேவர்கள்? யார் அசுரர்கள்?' என்று வினவினார்கள் போக்கிரி மாணவர்கள். சர்மா பதில் சொல்லாமல் மழுப்பிவிட்டார்.

அந்த வருஷக் கடைசியில் வழக்கம்போல் கயிறு இழுக்கும் போட்டி நடந்தது. மாணவ மாணவிகள் சர்மாவையும் கலந்து கொள்ளும் படி கட்டாயப்படுத்தினார்கள். தலைப்பாகை, கோட்டு முதலியவற்றைக் கழற்றி வைத்து முண்டா பனியனுடன் ஐம்பது வயது இளைஞராகக் கோதாவில் இறங்கினார் சர்மா.

போட்டிக்குப்பின் எல்லோருக்கும் 'ஐஸ் க்ரீம்' வழங்கப்பட்டது. சர்மாவிடமும் 'ஐஸ் க்ரீம்' கோப்பையை நீட்டினாள் அவர் மாணவி ஒருத்தி.

''இதெல்லாம் என்ன அம்மா?''

''அமிர்தம்! மந்தர மலையைக் கடைந்த பின் வேறு என்ன எதிர்பார்க்கிறீர்கள்? என்னைப் பார்த்தால் மோகினியாட்டம் இல்லையா?''

''சரிதான், சரிதான்! யார் தேவர்கள், யார் அசுரர்கள் என்பது இப்பொழுதாவது புரிந்ததோல்லவோ?'' என்று கேட்டுப் புன்னகை செய்தார் சர்மா. ஆசிரியர்கள் வெற்றி பெற்றதைத்தான் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்பாராத குண்டுகளைத் தூக்கிப் போடுவதில் வல்லவர் திரு சர்மா. ஆசிரியர்களுக்கான சங்கீதப் போட்டி நடந்து கொண்டிருந்தது. மாணவ மாணவிகளுக்கு ஒரே கொண்டாட்டம். யாரோ சர்மாவை மேடைக்கு வந்து பாடும்படி 'மைக்'கில் அழைப்பு விடுத்தார்கள். மற்ற வயதான வாத்தியார்களைப் போல் மறுத்து விடுவார் என்றுதான் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஏமகாதகரான சர்மா, மாணவர்கள் ஆரவாரத்துடன் கைதட்ட, மேடைக்குப் போனார்.

''சினிமாப் பாட்டுத்தான் பாடலாம், சுலோகங்கள் கூடாது'' என்றது ஒரு மாணவரது குரல்.

''சினிமாப் பாட்டுத்தானே? பாடினால் போச்சு'' என்று கூறித் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். யாரும் எதிர்பாராத வகையில் 'கல்யாண சமையல் சாதம், காய் கறிகளும் பிரமாதம்' என்று 'ஆக்ஷ'னுடன் பாட ஆரம்பித்து விட்டார். மாணவர் கர கோஷம் வானைப் பிளந்தது. சங்கீதப் போட்டியில் முதல் பரிசு சர்மாவுக்கே தரப்பட்டது!

ரிடையராவதற்குமுன் தம் உயிரைத் திருணமாக மதித்து, தண்ணீரில் குதித்துக்

கொண்டிருந்த ஒரு மாணவனை அவர் காப்பாற்றினதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இத்தனைக்கும் அவருக்கு நீந்தத் தெரியாது. இளைஞர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டு நிற்க, தண்ணீரில் பாய்ந்து குதித்த சர்மாவின் அஞ்சா நெஞ்சத்தைப் பாராட்டுவதா? தியாக புத்திக்குக் கவி பாடுவதா? இன்னும் சர்மாவின் கம்பீரமான குரல் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஏன், என்றும் ஒலிக்கும்!

சர்தார் பாட்டியா அந்த வடநாட்டுக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியர் வேலையை ஒப்புக் கொள்வதற்குமுன் நாலைந்து பேர் அப்பதவிக்கு வந்து, விட்டுப் போய்விட்டார்கள். மாணவர்கள் மேள தாளத்துடன் ஊருக்கு அனுப்பி வைத்தார்கள் என்பது இன்னும் பொருந்தும். பாட்டியாவுக்குமுன் வேலைக்கு வந்த ரங்காராவை நாற்காலியுடனேயே தூக்கிச் சென்று கல்லூரிக்கு வெளியே வீசிவிட்டார்கள் (இத்தனைக்கும் அவர் முழுசாக இருநூறு பவுண்டு!) ரங்காராவுக்குப்பின் இரண்டு மூன்று இளைஞர்கள் வந்தார்கள். எல்லோரும் இரவோடு இரவாகச் சொல்லிக் கொள்ளாமல் ஓடி விட்டார்கள்.

பாட்டியா முதல் வகுப்பிலேயே ஏதோ சொக்குப் பொடி தூவிவிட்டார். மாணவர்கள் கப்சிப்பென்று அடங்கினதுடன் பாட்டியாவின் புலமைக்குக் கவி பாடத் தொடங்கினர்கள். 'அவரிடம் பாடம் கேட்கக் கொடுத்து வைக்க வேண்டும். லெக்சரா அது? மறக்க முடியாத ஓர் அனுபவம்' என்ற தோரணையில் அவரைப் பற்றி மிக உயர்வாகப் பேசத் தொடங்கினர்கள்.


அப்பொழுதுதான் அந்த விஷயம் அம்பலத்துக்கு வந்தது! பாட்டியாவுக்கு பி. ஏ. பட்டம்கூடக் கிடையாதாம்! அவர் ஒரு 'மெட்ரிகுலேட்'. தேசப் பிரிவினையில் போது கராச்சியிலிருந்து ஓடி வந்தவர். தம் பட்டங்களை எல்லாம் ஓடி வரும் அவசரத்தில் எங்கேயோ தொலைத்து விட்டதாக அவர் கல்லூரி நிர்வாகிகளிடம் கூறி யிருந்தார். குட்டு வெளிப்பட்டதும் மெலவரைப் போனில் ஒப்படைக்கவில்லை பிரின்ஸிபாள். வேலையை விட்டு விலகும்படி கூறினர்.

ஆனல் மாணவர்கள் பாட்டியா போகக் கூடாதென்று வேலைநிறுத்தம் செய்தார்கள்! யார் யாருக்கோ தந்தி அடித்தார்கள். பட்டம் இல்லாவிட்டால் என்ன? முதல் வகுப்பில் பாஸ் பண்ணின எம்.ஏ.க்களைவிடச் சிறப்பாகப் பாடம் சொல்லித் தரும் திறமை இருந்ததே! ஓர் ஆசிரியருக்கு அது போதாதா?

எஸ். எம். ஞானஸிராமன் என்று ஒரு பேராசிரியர். எப்பொழுதும் வெள்ளைக் கோட்டும் 'பாண்டும்' அணிந்திருப்பார். போக்கிரி மாணவர்கள் 'எஸ். எம்.' என்ற அவர் இனிஷியலுக்கு ஸ்டேஷன் மாஸ்டர் என்று இரகசியமாக விளக்கம் தந்திருந்தார்கள்.

1946ம் வருஷம் என்று நினைவு. ரயில்வே 'ஸ்டிரைக்' ஒன்று நடந்தது. விசுவாசத்துடன் வேலைசெய்த ரயில்வேச் சிப்பந்திகளை வேலை செய்யவிடாது தடுத்தவர்களைப் போலீசார் கைது செய்து கொண்டிருந்தார்கள். எதேச்சையாக ரயில்வே ஸ்டேஷன் பக்கம் தலை காட்டின எஸ். எம். ஞானஸிராமனையும் 'போலீஸ் வேனி'ல் ஏற்றிவிட்டார்கள். தாம் ரயில்வே சிப்பந்தியில்லை என்று எவ்வளவோ முறையிட்டுப் பார்த்தார் பேராசிரியர். ஆனல் போலீஸார் கேட்டால்தானே? 'பெரிய பெரிய யூனியன் தலைவன் எல்லாம் இப்படித்தான் புளுகி எங்களைக் குழப்புவான். நாங்களா ஏமாந்து போவோம்? வெள்ளை யூனிபாரத்தைப் போட்டுக்கிட்டு, 'நான் ரயில்வே சிப்பந்தியில்லை'ன்னு யார் ஸார் நம்புவா? இந்தக் காலத்திலே எந்தக் காலேஜ் புரொபஸர் ஸார் வெள்ளை போடறான்?' என்று கேட்டு 'லாக்-அப்'பில் தள்ளி





ஜோக்கர் சீட்டு!


''ஏய்! உன் சைக்கிளைக் காணலே. யாரோ திருடிட்டுப் போயிட்டாங்க போல் இருக்கு.''

''நல்ல வேளே. அந்தச் சமயத் தில் நான் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருக்கவில்லை. நானும் இல்ல திருட்டுப் போயிருப்பேன்.''



''இதோ இருளைக் கிழிக்கும் கொண்டு இந்த டார்ச் வெளிச்சம் போகின்றதே. அதன் மேலே நீ நடந்து சென்றால் நான் உனக்கு நூறு ரூபாய் தர்றேன்!''

''போவேன். ஆனால் நான் வெளிச்சத்தின் மேல் நடந்து கொண்டிருக்கும்போது பாதி யில் நீ டார்ச்சை அணைத்து விட் டால் கீழே விழுந்து விடுவேனே. அதான் யோசிக்கிறேன்.''



''எனக்கு வழியில் பணம் கிடைச்சா ஒரு பங்கு கடவுளுக்குக் கொடுத்துவிட்டு மீதியை நான் எடுத்துக்குவேன்.''

''நான் அப்படிக் கிடைச்சா அந்தப் பணத்தை மேலே தூக்கிப் போடுவேன். கடவுள் வேணும் கிறதை எடுத்துகிட்டு மீதியை எனக்காகக் கீழே போடுவார். அதை மட்டும் நான் எடுத்துக்கு வேன்.'' - பிரகாஷ்

விட்டார்கள். முழுசாக நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குப்பின்தான் அவருக்கு விடுதலை கிடைத்தது.

அன்றே அப்பொழுதே வெள்ளை யூனிபாரம் என்ன, மேல் நாட்டு உடைக்கே தலை முழுகி விட்டார் எஸ். எம். ஜே. வெள்ளை வெளேர் என்று கதர் ஜிப்பாவும் வேஷ்டியுமாக அவர் கல்லூரிக்குள் நுழைந்த போது அவரை ஆர வாரத்துடன் வரவேற்றார்கள் மாணவர்கள்.

ஆனால் 'ஸ்டேஷன் மாஸ்டர்' என்ற செல்லப் பெயர் அவரை விட்டுப் போக மறுத்தது. கல்லூரி ஆண்டு விழாவின் போது மாணவர்கள் அவருக்கு ஒரு பச்சை — சிவப்பு விளக்கு தந்து கௌரவித்தார்கள்!

காவி உடையில் கல்லூரிக்கு வரும் பேராசிரியரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறீர்களா? அவர்தான் கணிதமேதை விநாயகராவ். மற்ற பேராசிரியர்களைப் போல் முழு நேரமும் கல்லூரியில் வீற்றிருக்கமாட் டார். எம். ஏ. வகுப்பு முடிந்தவுடன் வெள்ளைத் துணி போட்ட குடையுடன் வீட் டுக்குக் கிளம்பிவிடுவார். அங்கு போய்ப் பார்த்தால் திரையிட்டம் கட்டப்பட்ட சரப் புடவைக்குப்பின் (குளிர் சாதன அறைகள் எல்லாம் பிச்சை வாங்கணும்!) தரையில் வீற்றபடி 'ஸ்லேட்'டில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருப்பார், அல்லது தீவிர மாகப் பூஜை செய்து கொண்டிருப்பார்.

விநாயகராவ் உலகப் புகழ்பெற்ற கணித மேதை. 'உங்களால் எப்படி இவ்வளவு கடின மான பிரச்னைகளுக்கு விடை கண்டுபிடிக்க முடிகிறது?' என்று ஒரு தடவை அவரை வினவினேன். அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்: 'கணிதமேதை ராமானுஜத் துக்கு நாமக்கல் தேவி உதவினாள். எனக்கு இந்தச் சாலிக்கிராமம்தான் உதவுகிறது. இது எங்கள் குடும்பத்தில் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகப் பூஜிக்கப்பட்டு வருகிறது. விநாயக ராவின் சாதனைகள் அத்தனையும் இந்தச் சாலிக்கிராமத்தினுடையதுதான்.'

எவ்வளவு சிக்கலான கணக்குக்கும் சடுதி யில் விடை கண்டுபிடிக்கும் விநாயகராவுக்குச் சில எளிய விஷயங்கள் புரியாதது விந்தையி லும் விந்தையே! ஒரு தடவை அவரைச் சினிமாவுக்கு இழுத்துச் சென்றேன். அவருக் குக் கதை புரியவில்லை. என்னிடம் விடாது விளக்கம் கேட்டு நச்சரித்தார்.

மிகக் கடினமான கணக்குகளை அம்மானை ஆடும் மேதைக்குச் சிறுவர்களுக்குப் புரியும் சினிமாக் கதை புரியாதது ஆச்சரியம்தானே? ஒவ்வொருவருக்கும் ஒரு Blind Spot உண்டு போலும்!

கல்லூரி யூனியன் மீட்டிங்குக்கு ஒரொரு சமயம் கூட்டம் சேராது. நாலரை மணிக்கு மேல் 'கேரளாவில் சோப்புத் தொழில்' என்று யாராவது பேசினால் மாணவர்கள் வரு வார்களா என்ன? டென்னிஸ் கோர்ட்டுக்குப் போவார்கள் அல்லது கான்டீனில் டிபன் யுத்தம் நடத்துவார்கள்.

கூட்டம் சேருவதற்கு அந்தக் கல்லூரியில் ஒரு தந்திரம் செய்வார்கள். 'மீட்டிங்குக்குப் பின் பேராசிரியர் கிருஷ்ணமாச்சாரி மாஜிக் காட்டுவார்' என்று கொட்டை எழுத்தில் அறி விப்பார்கள். அப்பொழுதுகூட மாஜிக்குக்கு வந்துவிட்டு ஓடிவிடும் பிள்ளைகள் உண்டு!

கிருஷ்ணமாச்சாரியின் கண் கட்டு வித்தை களில் பிரபலமானது 'சாக்குப் பை' வித்தை.

யாராவது மாணவன் ஒருவனைச் சாக்கில் போட்டுக் கட்டுவார். சற்றுப் பொறுத்துச் சாக்கை உதறுவார். அது காலியாயிருக்கும். கிருஷ்ணமாச்சாரி மூன்று தடவை அந்த மாணவனின் பெயரைச் சொல்லி அழைப் பார். சொல்லி வைத்தாற்போல் கூட்டத்துக் குள்ளிருந்து ஓடி வருவான் அவன்.

ஒரு தடவை கேசவன் என்ற மாணவனைச் சாக்குக்குள் போட்டுக் கட்டினார். அவர் மூன்று முறை அழைத்தும் வரவில்லை. பிரின்ஸிபால் பயந்து போனார். ஆசிரியர்களுக்கும் அச்சம் தான். கிருஷ்ணமாச்சாரி மட்டும் கலங்க வில்லை. 'அத்தனை வகுப்புகளுக்கும் ஐந்து நிமிஷங்கள் தாமதமாகத்தானே வருவான் கேசவன்? இங்கும் 'லேட்டாக' வருகிறான் போலும்' என்று அவர் சொல்வதற்கும் கேசவன் ஓடி வருவதற்கும் சரியாக இருந்தது!

மாயூரம் தாலூகா வரகடை

ஸ்ரீ அங்காளம்மன் ஆலயத் திருப்பணி

வரகடை ஸ்ரீ அங்காளம்மன் ஆலயம் மிகவும் பழுதடைந்துள்ளது. குலதெய்வத்திற்குப் பிரார்த்தனை நிறைவேற்ற வரும் பக்தர்களுக்குத் தேவையான குறைந்த வசதிகூட தற்போது இந்தக் கோவிலில் இல்லை. இந்தக் கோவிலில் திருப்பணி செய்து முடிக்க சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இந்தப் பணிக்கு ஒரு கமிட்டியும் நிறுவப்பட்டிருக்கிறது. ஸ்ரீ அம்பாள் அனுக்கிரகத்துடன் திருப்பணி வேலைகள் 26-11-76 காலை 9-30க்கு ஆரம்பிக்கப்படுகிறது. ஸ்ரீ அங்காள பரமேஸ்வரியைக் குலதெய்வமாகக் கொண்டவர்களும், இந்தச் சக்தி மிக்க தேவியின் கைங்கரியத்துக்குத் தங்களாலான பொருளுதவி செய்ய விரும்பும் ஆஸ்திகப் பெருமக்களும், நன்கொடைகளை செக் அல்லது டிராப்டு அல்லது மணியார்டர் மூலம் ''பொருளாளர் அங்காளம்மன் கோவில் திருப்பணிக் குழு, வரகடை, கொளுக்கை போஸ்ட், நீடூர் வழி, தஞ்சை மாவட்டம்'' என்ற முகவரிக்கு அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

வி. ஆறுமுகம் I. A. S. (Retd.)

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத் திருப்பணிக் குழு

''முருகனடி.'' 19 A, கணபதி நகர், மாயூரம்



ரா. பாலகிருஷ்ணன் 'பாணன்' அவர்களின் மூத்த குமாரன் டாக்டர் **பி. சந்திரசேகரனுக்கும்**, கே. என். விசுவநாதன் (Telegraph Master, Madras) அவர்களின் குமாரத்தி சௌ. **சந்திரா** B. A.க்கும் அபிராமபுரம் விஜயா கல்யாண மண்டபத்தில் 1-11-76 அன்று திருமணம் சிறப்பாக நடந்தேறியது. திருமணத்துக்கு 'கல்கி' அதிபர் திரு சதாசிவம் தம்பதியர் மற்றும் பல பிரமுகர்கள் நேரில் வந்து சிறப்பித்தனர்.

வாழ்க மணமக்கள்



பாரதத்தின் குடி அரசுத் தலைவரின் Press Secretary திரு அப்துல் ஹமீத் அவர்கள் குமாரத்தி செள **நஜ்மா கௌஜிஜாவுக்கும் திரு ஃபருக் ஹமீத்** (Asst. Director in the Directorate general of supplies & disposals) அவர்களுக்கும் 24-10-76 அன்று புது டில்லியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தை ஒட்டி பிரஸிடெண்ட் எஸ்டேட்டில் உள்ள மணமகன் இல்லத்தில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்துக்கு பாரத ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, நாடாளுமன்ற சபாநாயகர் அமைச்சர்கள் மற்றும் பத்திரிகையாளர் மற்றும் வருகை தந்து சிறப்பித்தனர். காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் மணமக்களை வாழ்த்தி சந்தன மாலைகள் அனுப்பி [illegible]

போர்ட்லாண்ட் போஸ்ஸோலாணு சிமெண்டு

மிகச் சிறந்ததற்கு நிகர்

ஏஸிஸியின் போர்ட்லாண்ட் பொஸ்ஸோலாணு
சிமெண்டு சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்டின் எல்லா
இயல்புகளும் கொண்டிருப்பதோடு சில சிறப்புத் தகுதி-
களும் உடைய அசல் உயர் ரக சிமெண்டாகும். ஆகவே,
அதை சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்டை உபயோ
கிக்கும் எல்லா வேலைகளுக்கும் உபயோகிக்கலாம்.

இதன் காவிவண்ணச்சாயல், உற்பத்தியில் இதனோடு சேரு
கின்ற பொஸ்ஸோலாணுவினால் உண்டாகும்
அவ்வண்ணம் திண்ணமாகக் குறையாகாது. பொஸ்-
ஸோலாணு சிமெண்டு குடியிருப்புக கட்டடங்கள், தொழிற்
சாலைகள், ரீ-இன்ஃபோர்ஸ்டு காங்க்ரீட் கட்டுமானங்கள்
ஆகியவற்றிற்குப் பயன்படும் மிகச்சிறந்த பொதுநோக்க
சிமெண்டாகும். அணைகள், பாலம் தாங்கிகள், நீர்தடுப்புச்
சுவர்கள் போன்ற பெரிய கான்க்ரீட் வேலைகளுக்கு தனிப்
பொருத்தமுள்ள சிமெண்ட் இது.

போர்ட்லாண்ட் பொஸ்ஸோலாணு சிமெண்டுக்கான
இந்தியத்தர நிர்ணய விதிமுறைகளின குறைந்தபட்சத்
தேவைகளை மிஞ்சியுள்ளது ஏஸிஸி போர்ட்லாண்டு
பொஸ்ஸோலாணு சிமெண்டு; சாதாரண சிமெண்டைவிட
நீர்புகாத்தன்மை அதிகம், அதோடு பயன்படுதிறனிலே
மேம்பட்டது. எனவே பிளாஸ்டர் வேலைகள் மற்றும்
மேற்பரப்பிடுதல் ஆகியவற்றை விரைவாகவும்
எளிதாகவும் செய்ய உதவுகிறது.


**தட்டாமல் நாடுவீர் பொஸ்ஸோலாணு
சிமெண்டு. தயாரிப்போர் ஏஸிஸி என்றால்
தரத்திற்கு அதுவே உறுதி**

ஏஸிஸி

உயர்தர சிமெண்டு
தங்களுக்கு
உத்தரவாதம்

**தி அஸோஸியேடெட்
சிமெண்டு கம்பெனீஸ்
லிமிடெட்**

ACC.1297


சபாவில் உங்களுக்கு மாலைக்கச்சேரி.
அப்படியா! ரொம்ப நன்றி... வந்து...
சம்பளமாம் கேட்காதீர்! மாலை தான்!
தலை வாரிக்கணும்...
சீப்பு கொண்டா!
இந்தாங்க ஸ்பெஷல் சீப்பு!

எனக்குத் தெரியுமே நம்பகமானது க்ளைகோடின்–

பாழும் இருமல் இவரை விரைவில் விட்டகல...





இந்தியாவின் வேறெந்த இருமல் மருந்தையும் விட அதிக அளவிலே இருமலை நிறுத்தியுள்ளது க்ளைகோடின்.

எனவேதான் அது முதல்தரமானது.

இருமல் பாதித்த எல்லா உறுப்புகளிலும் அது விரைந்து செயல்பட்டுத் தவறாமல் துரிதமான ஆறுதல் அளிக்கிறது.

- தொண்டைக் கமறலுக்கு இதமளிக்கிறது.
- ஜலதோஷத்தோடு வரும் இருமலை விலக்கிச் சளியடைப்பைத் தளர்த்துகிறது.
- நிம்மதியான உறக்கத்தைத் தூண்டி, மார்புத் தசைகளை இளைப்பாற்றி மூச்சு விடுதலை எளிதாக்குகிறது.

எவ்வித இருமலையும் முழுதும் கட்டுப்படுத்த உறுதுணை க்ளைகோடின்.

Alembic

க்ளைகோடின்—இந்தியாவில், இருமலை முறியடிக்கும் சேம்பியன்—நம்பகமான மருந்துகளை நமக்குத் தரும் அலெம்பிக் நிறுவனத்திடமிருந்து.

everest/520/ACW-tm

சேரமான் காதலி

அத்தியாயம் 13

கடல் தாவு படலம்

அன்று பூஜியானை வழியனுப்பப் பட்ட செய்தியே நகர் முழுவதும் பேச்சாக இருந்தது.

அரசர் களையிழந்து போனார் என்பதால் அரண்மனையும் களையிழந்து கிடந்தது.

பத்மாவதி தன் அறையை விட்டு வெளியே வரவில்லை. தாவணி சகோதரிகள் தலையையே காட்டவில்லை.

அரண்மனை நிலா முற்றத்தில், மன்னவர் மூன்றும் சேரமான் பெருமான் சோகமே உருவாகச் சாய்ந்திருந்தார்.

அவரைச் சுற்றிலும் மூடியிட்ட அணையா விளக்குகள் ஏற்றி வந்து வைக்கப்பட்டன. யாரும் அவரை நெருங்குவதற்குத் தைரியம் உள்ளவர்களாக இல்லை.

ஒரே ஒருத்தி —

தரங்கிணி மட்டுமே சலங்கை குலுங்கப் படியேறி வந்தாள்.

ஒரு பட்டுத் துண்டினால் மன்னவனின் நெற்றி வேர்வையைத் துடைத்துவிட்டாள்.

சோகப் பெருமூச்சே உதிர்ப்பதல்லாமல், அவளுக்கும் சொல்ல ஒரு வார்த்தையில்லை.

சேரமான் பெருமான் இளைஞர் அல்ல, அனுபவமும் பக்குவமும் உள்ளவரே. ஆயினும் காதல் பிரிவிலே ஓர் இளைஞன் படும் அவஸ்தையைவிட அதிக அவதி அவர் உள்ளத்தில் எழுந்தது.

பிரியத்துக்கு உரியவர்களை யெல்லாம் பிரிப்பதே இறைவனுக்கு விளையாட்டு.

மனிதனின் கால்நடைச் சுவடுகள் அவன் படைக்கும் முத்திரைகளே.

பாதை மாறும் போதும், பயணம் தவறும் போதும், மனிதனுக்கு இறைவன் அளித்த ஒரே சலுகை கண்ணீர் மட்டுமே.

ஆனால் சேரமான் பெருமாள் அழவில்லை.

அவரது கண்களில் கண்ணீர் வற்றி விட்டது.

துயரம் குறைவாக இருக்கும்போதுதான் கண்ணீர் அதிகமாக இருக்கும்.

மிதமிஞ்சிப் போன துயரம் மனிதனை மரமாக்கி விடுகிறது.

கண்கள் திறந்திருக்கும்; பார்வை இருக்காது.

காதுகள் கேட்டுக் கொண்டிருக்கும்; ஆனால், 'என்ன கேட்டோம்' என்பதைப் பதிவு செய்ய மாட்டா.

உணர்ச்சிச் சூறாவளியில் சிறகு ஒடிந்து போன அந்த ராஜாளி, நிலா முற்றத்தில் விழுந்து கிடந்தது.

''உணவு கொள்ளுங்கள்'' என்று ஒரு வார்த்தை சொன்னாள் தரங்கிணி.

மௌனமே பதிலாக வந்தது.

அவள் கூச்சப்படவில்லை. வயது வந்த சகோதரனுக்கு மருத்துவம் செய்வது போல் தலையைத் தடவிக் கொடுத்தாள்; மயில் இறகினால் விசிறினாள்.

அந்தக் காற்றும் அவருக்கு வெப்பக் காற்றாகவே இருந்தது.

'செந்தழலின் சாற்றைப் பிழிந்து, செழுஞ் சீதச் சந்தனமென்றாரோ தடவினார்' என்றபடி குளிர்ச்சியான பொருள்கள்கூட அவருக்குக் கொடுமையாக இருந்தன.

'' மன்னவ! சென்றவை எண்ணிக் கலங்குதலில் ஏது பயன்? இல்லறம் இனிது நடக்க, அரசவை அறம் ஓங்க, அமைதி பெறுக '' என்றாள் தரங்கிணி.

ஆறுதல் சொல்வது யாருக்கும் எளிது. அவரவரும் அனுபவிக்கும் போதே துயரத்தின் வலிமை தெரியும்.

தரங்கிணிக்குச் சேரமான் பதில் சொல்லவில்லை; அவரது நினைவுகள் கடலிலும் கப்பலிலுமே இருந்தன.

மேலே நீல ஆகாயம்; கீழே நீலக் கடல். நடுவே அந்தப் பாய்மரக் கப்பல் ஒரு பெரிய கரு மீன் போல மிதந்து கொண்டிருக்கிறது.

கண்ணதாசன்



கப்பல் கிழித்துச் செல்வதால் துள்ளி எழும் வெள்ளலைகள் கப்பலுக்குள்ளே தெறித்து விழுகின்றன.

சோகப் பதுமை யூஜியானாவின் கண்ணீர்த் துளிகளுடனே அவை போட்டி போடுகின்றன.

அந்த வானத்திலும் இதே நிலவு தான் காய்ந்து கொண்டிருக்கிறது.

ஒருவரையொருவர் சந்திக்காத இருவரையும் அது பார்க்க முடியும்.

ஆனால் யாருடைய செய்தியையும், யாருக்கும் சொல்ல வலிமையற்றது அந்த வெண்ணிலா.

கப்பலின் ஒரு பகுதியில் மரத்தால் அமைந்த மேடை, அந்த மேடையில் குப்புற விழுந்து கிடக்கிறார் யோகோவா.

துடுப்பு வலிப்போர் பாடுகிறார்கள்.

சாதாரண காலத்தில் சங்கீதத்தில் நெஞ்சுருகும் யூஜியானாவை அந்தப் பாடல் தொடவில்லை.

ஒரே சீராகக் கப்பலை முன்னால் தள்ளிக் கடலைப் பின்னால் தள்ளும் அந்தத் துடுப்புக்கள், அவளை முன்னால் தள்ளி அரசனைப் பின்னால் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

கப்பல் போகும் வேகத்தில் துள்ளி விழுகின்றன சில மீன்கள்.

அவை துள்ளி வானவெளிக்கு வந்தாலும் மீண்டும் கடலிலேயேதானே விழுகின்றன ?

அவளோ இக்கரையிலிருந்து தூக்கி எறியப்பட்டு அக்கரையில் விழப் போகிறாள்.

'ஒருவனே உலகம்' என்றும், 'ஒன்றே காதல்; அதன் பெயர் தெய்வம்' என்றும் வாழ்ந்த குலமகள், சித்திரவதைக் கைதியைப் போல் அமர்ந்திருக்கிறாள்.

இஸ்ரவேல் நாட்டை அவள் அறிய மாட்டாள்.

அவள் அறிந்தது கேரள பூமி ஒன்றே.

அவள் நேசித்தது சேர மண்ணையே.

தருமத்தின் குரலோசை யார் காதில் விழப் போகிறது ?

காலையில் மலர்ந்தபோது வண்டு படுக்க, படுத்த பின்னே மயங்கிக் கிடக்க, இரவிலே மலர் மீண்டும் கூம்பி விட, உள்ளுக்குள்ளேயே போராடும் கருவண்டைப் போல், தருமத்தின் குரலும் நெஞ்சுக்குள்ளேயே குமுறும்.

கடலிலே ஒரு துன்ப கீதம்; கரையிலே ஒரு துன்ப கீதம்.

காலையில் பொழுது புலர்ந்தபோதும் சேரமான் நிலா முற்றத்திலேயே இருந்தார்.

அவரது கண்கள் துயிலவில்லை.



அந்தக் கண்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தரங்கிணியின் கண்களும் துயிலவில்லை.

அரண்மனை தூங்காத அந்த இரவில் நிம்மதியாகத் தூங்கியவர்கள் மூவர்.

ஒருவர் ராஜசேகர சுவாமி.

ஒருத்தி மலைக் குறத்தி.

இன்னொருவர் நாராயண நம்பூதிரி.

நேற்றையப் பொழுது பூஜியானு வோடு முடிந்தது.

இன்றையப் பொழுது யாருக்காக விடிந்தது ?

நேற்று நிம்மதி பெற்றவன் இன்று அதை இழக்க வேண்டும்.

நேற்று நிம்மதி இழந்தவன் இன்று அதைப் பெற வேண்டும்.

இறைவனின் நியதிக்கு யார் தப்ப முடியும் ?

பாண்டியநாட்டுப் புரவிகள் மூன்று, வாயில் நுரை வழிய, பிடரி மயிர் அசையத் திருவஞ்சைக் களத்துச் சாலை யில் ஓடி வந்தன.

மீன் கொடி சுமந்த குதிரை வீரர் களின் கரங்களைப் பார்த்ததும் ஊர் மக்கள் அதிசயமாக வேடிக்கை பார்த் தார்கள்.

'என்ன தூது ? ஏன் வந்தது ?' என்பதை அவர்கள் அறியமாட் டார்கள்.

வந்த வீரர்கள் ராஜசேகர சுவாமி யின் இருப்பிடத்தையே தேடினார்கள்.

ஒரு புரவி வீரன் அவர் தங்கியிருந்த இடத்துக்கு விரைந்து சென்றான் ; இன் னொருவன் நாராயண நம்பூதிரியைத் தேடி நம்பூதிரிகள் சபைக்குச் சென்றான்; மூன்றாமவன் அரண்மனைக்கு வந்து சேரமான் பெருமானைச் சந்தித்தான்.

மூவருக்கும் கிடைத்த ஓலைகளில் ஒரே செய்தியே அடங்கியிருந்தது.

' மதுரை மன்னர் வரகுண பாண்டி யன் இறந்து விட்டார்' என்பதே அது.

அந்தச் செய்தியில் நாராயண நம்பூதிரி அதிர்ச்சியுறவில்லை.

சேரமான் பெருமான் பெருங் கலக்கம் அடையவில்லை.

கதறித் துடித்தவர் ராஜசேகர சுவாமி மட்டுமே.

அவர் உடனே அழைத்து வரச் சொன்னது அந்த மலைக் குறத்தியை.

அவளும் செய்தி கேட்டு அழுது புலம்பினாள்.

'ரதம் ஒன்று தேவை' என்று சேரமானுக்குச் செய்தி அனுப்பினார்.

அலங்கரிக்கப்பட்ட ரதம் ஒன்று அசைந்தபடி வந்து நின்றது.

அந்த ஒரே ரதத்தில் ராஜசேகர சுவாமியும் மலைக் குறத்தியும் ஏறிக் கொண்டார்கள்.

சேர நாட்டின் எல்லையைக் கடந்து அவர்கள் ரதம் சென்ற போதுதான், வேறு சில ரதங்களில் சேரமான் பெரு மான் குடும்பத்தினரும், நாராயண

நம்பூதிரியும் வருவதை அவர்கள் காண முடிந்தது.

யாரும் யாரோடும் பேசாத மற்றும் ஒரு சூழ்நிலை.

ஆனால், 'ராஜசேகர சுவாமி பதறிப் போய் மதுரைக்கு வருவானேன்' என்ற கேள்வி மட்டும் சேரமான் பெருமாள் உள்ளத்தில் எழுந்து கொண்டிருந்தது.

சுவாமியைத் தவிர அந்தக் கேள்விக்குப் பதில் தெரிந்தவர் நாராயண நம்பூதிரி ஒருவரே.

கூடல் நகருக்குள் அந்த ரதங்கள் கூட்டமாக நுழைந்த போது, துயரத்தில் மூழ்கியிருந்த பாண்டியன் தலைநகரம், அவற்றுக்கு வழி விட்டது.

'சாயாத நெடுமேனி சாய்ந்ததோ' என்று அழாதவர்களே அங்கில்லை.

'சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்க வைத்த, பொய்யாமொழி மன்னா! போய் மறைந்தாயோ' என்று புலம்பாதவர்கள் இல்லை.

'மக்கள்தம் பணியே மகேசன் பணி' என, முக்காலும் வாழ்ந்த முத்தமிழ் அரசே, எக்காலும் இனி உன்னை, எவ்விடத்துக் காண்போம் நாம்' என்று ஏங்காதவர் இல்லை.

அங்காடிகள் அடைத்துக் கிடந்தன.

தத்தம் தந்தையை இழந்தது போன்றே தலைநகர மக்கள் எல்லோரும் தள்ளாடி நடந்தனர்.

'மீன் வானில் பறக்கின்ற நான் மாடக்கூடல்', மேகங்கள் சிதறிக் கிடக்கும் வான் போலக் காட்சி அளித்தது.

அரண்மனை அமைதியாக அழுதது.

தங்கள் துயரத்துக்கும் கட்டியங் கூறியபடி சேரநாட்டு ரதங்கள் அரண்மனைக்குள் நுழைந்தன.

பொன்னாலே செய்யப்பட்டு நவமணிகளால் இழைக்கப்பட்ட ஒரு கட்டில்; அதன்மீது மயில் இறகுகளால் செய்யப்பட்ட ஒரு மெத்தை; அதன் மீது ஒரு சிவப்பு நிறக் காசிப் பட்டு; அதன் மீது மதுரை மன்னன் வரகுண பாண்டியன் பள்ளிகொண்ட பாவம்.

அரச குல சம்பிரதாயப்படி அரசனின் அருகில் நின்று அழ முடியாமல் அந்தப் புரத்தில் நின்று அழுது கொண்டிருந்தாள் பட்டத்து ராணி.

உள்ளே நுழைந்ததும், நுழையாதது மாக ஓடோடி வந்து பாண்டியன் மார்பில் விழுந்தார் ராஜசேகர சுவாமி.

''அப்பா, அப்பா!'' என்று அலறினார்.

அவரது தாடி மீசைகள் அகன்றன.

தளிர் முகம் வெளிப்பட்டது.

திகைத்துப் போய்க் கூர்ந்து நோக்கினார் சேரமான் பெருமாள்.

மலைக் குறத்தியையும் கூர்ந்து நோக்கினார்.

அவள், ''அம்மான்! அம்மான்!'' என்று அழுதாள். யார் அவர்கள்?

வரகுண பாண்டியனின் பட்டத்து இளவரசர் **சீர்மாறன் சீர் வல்லபனே**, ராஜசேகர சுவாமி.

அவரது துணைவி **அபிராமி நாச்சியாரே**, மலைக் குறத்தி.

திகைப்பை வெளிக் காட்டிக் கொள்ள வில்லை, சேரமான் பெருமாள்.

காரணம் அதற்கு அது இடமல்ல; நேரமல்ல.

நாராயண நம்பூதிரியின் ஆள் காட்டி விரல், மறுபடியும் ஒரு தடவை ருத்திராட்சத்தைத் தட்டிற்று.

சாலைகள் தோறும் மக்கள் திரண்டு நிற்க வரகுண பாண்டியன் சடலம் ஊர்வலம் வந்தது.

அவன் கேட்ட வரம்!

ஒரு குக்கிராமத்தில் ஒரு கிழவரும் கிழவியும் வசித்து வந்தனர். கிழவர் மரக்கன்றுகளைக் கொண்டு கூடை செய்வார்; அவருடைய மனைவி கயிறு திரித்துத் தருவாள். கூடைகள், கயிற்றை விற்று வந்த பணத்தில் அவர்கள் குடும்பம் சுமுகமாக நடந்து வந்தது.

ஒரு நாள் மனைவி, கணவனிடம் கூறினாள்: ''என்னுடைய தறியோ உடைந்து விட்டது; உங்கள் கத்தியின் கைப்பிடியும் பழையதாகி விட்டது; அது கூடிய விரைவில் விண்டு விழுந்து விடும். நீங்கள் காட்டுக்குப் போய் ஒரு சிறிய மரத்தை வெட்டி வந்தால் ஒரு புதிய தறியையும் செய்து கொள்ளலாம்; கைப் பிடியும் போட்டுக் கொள்ளலாம்.''

எனவே கிழவர் காட்டிற்குச் சென்றார். அங்கு ஒரு நேர்த்தியான மரம் இருப்பதைப் பார்த்தார். அது சிறியதாகவும் அழகாகவும் இருந்ததால் அதனை வெட்டுவது என்று முடிவெடுத்தார். அதை வெட்டப் போன சமயத்தில் திடீரென்று அம்மரத்திலிருந்து ஓர் அதிசய மனிதர் தோன்றினார்; நரையைத் தொடும் மீசையும், பச்சைக் கண்களும் கொண்ட அந்த மனிதர் பார்ப்பதற்கே விநோதமாக இருந்தார்.

''என் மரத்தைக் கொன்று விடாதே. அவையும் வாழ விரும்புகின்றன; உனக்கு என்ன வேண்டுமென்று சொல். நான் தருவித்துக் கொடுக்கிறேன்'' என்று அந்த விநோத மனிதர் கூறினார்.

இதனைக் கண்டு வியப்படைந்த கிழவர் என்ன கேட்பது என்று மனைவியிடம் கேட்க வீட்டை நோக்கி ஓடினார்.

''நான் என்ன கேட்கட்டும்? நிறைய பணம் தரும்படி கேட்கட்டுமா?''



மாதங்களின் பேர் சொல்லும் வீதிகள் அனைத்தும் மாதர்களின் பேர் சொன்னபடி கண்ணீர் விட்டன.

பண்பு தவறாத பாண்டிய வம்சத்தில் வரகுண பாண்டியன் ஓர் எல்லைக் கல்.

மழையை நம்பிய வயல்களேயன்றி, நதியை நம்பிய வயல்கள் இல்லாத பாண்டிய நாட்டில், ஏரிகள் அதிகம் கண்டு வளம் பெருக்கியவன் வரகுண பாண்டியன்.

மக்களை மதித்தவனின் மரண ஊர்வலம் நடைபெறும்போது, சாலைகளே நதியாகும்; மக்கள் தலைகளே நீராகும்.

சடலம் எரியூட்டப்பட்ட போது, 'கோ'வெனக் கதறிற்று கூடிய கூட்டம்.

அதற்கு முன்னால் பட்டத்து இளவரசன் சீர்மாறன் சீர்வல்லபனை மன்னனாக அங்கீகரிக்கும் மணிமுடி விழாவும் அரண்மனையில் நடந்து முடிந்திருந்தது.

இப்போது தந்தையின் சடலத்துக்கு தீ மூட்டிய சீர்மாறன் சீர்வல்லபன் அந்தத் தீயில் தானும் விழாமல் இருந்ததே அதிசயம்.

ஒரு பெரும் ஆவி பிரிந்து விட்டது.

ஒரு புதிய மன்னனை மதுரை எதிர்கொண்டது.

ஒரு நாள் அதிகமாகச் சேரமான் குடும்பத்தினரும், நாராயண நம்பூதிரியும் அங்கே தங்கினார்கள்.

துன்ப அலை ஓய்ந்த பிற்பாடு, தாங்கள் புறப்படுவதை அறிவிக்க, அனைவரும் சீர்மாறனிடம் வந்தார்கள்.

"என்ன ராஜசேகர சுவாமி ?" என்று துயரத்தோடும் கேலியாகவும் கேட்டார், சேரமான் பெருமாள்.

"எல்லாம் நன்மைக்கே !" என்று அமைதியாகச் சொன்னான் சீர்மாறன்.

ஓர்க் கண்ணால் நாராயண நம்பூதிரியைக் கவனித்தார் சேரமான் பெருமான். அவர் என்ன செய்வார் ? ருத்திராட்சத்தைத் தட்டிக் கொண்டே இருந்தார் !

"பிற விஷயங்கள் வேண்டாம். ஒரு விஷயம் மட்டும் கேட்கலாமா ?" என்று சீர்மாறனிடம் கேட்டார் சேரமான்.

"கேளுங்கள்" என்றான் சீர்மாறன்.

"உதயகிரி மலையில் நடந்த நிகழ்ச்சிகள் உடனே தங்களுக்கு எப்படித் தெரியும் ?" என்று கேட்டார் சேரமான்.

"உன்னோடு மலையேறிய வீரர்களில் நானும் ஒருவன்" என்று காதில் இருந்த சிராய்ப்புக்களைக் காட்டினான், சீர்மாறன்.

"சேரநாடும், பாண்டிய நாடும் இணைந்து மக்கள் வாழும் நாடுகள். சேர மண்டலத்து நல்வாழ்வில் பாண்டிய மக்களுக்கு அக்கறை இல்லாமல் போகுமா ?" என்றார் நாராயண நம்பூதிரி.

"மன்னவர் மரணம் ஒரு நாள் தாமதித்து விட்டது" என்று மெதுவாகச் சொன்னார் சேரமான் பெருமாள்.

"அது இறைவன் சேர நாட்டுக்குக் காட்டிய சலுகை" என்றான் சீர்மாறன்.

"நாங்கள் புறப்படலாமா ?" என்று கேட்டார் சேரமான்.

கட்டித் தழுவி விடை கொடுத்தான், சீர்மாறன்.

ரதங்கள் பாண்டிய நாட்டை விட்டுப் புறப்பட்டன.

சேரமான் இதயம் மறுபடியும் கரையைத் தாண்டிக் கடலுக்கு ஓடிற்று.

(மூன்றாம் பாகம் முற்றிற்று)

"நமக்கு எதற்காகப் பணம் தேவை ? அவர் நமக்கு நிறையப் பணம் தருவதாகவே வைத்துக் கொள்வோம். அதை எங்கு வைத்துப் பாதுகாப்பது ? மேலும், பணம் நம்மிடம் இருப்பதால், திருடர்கள் பணத்தைத் திருடிக் கொண்டு போய் விடுவார்களோ என்ற பயத்தில் இரவில் நாம் தூங்க முடியாது. எனவே என்னைக் கேட்டால் பணம் நமக்குத் தேவையில்லை என்றே தோன்றுகிறது."

"ஒரு மந்தை ஆடுகள் அல்லது நிறையப் பசுவைக் கேட்டால் ?"

"அவை நமக்கு எதற்கு ? அவற்றைப் பராமரிப்பது யார் ? ஏற்கனவே ஒரு பசுவும் ஆடுகளும் நம்மிடம் இல்லையா ? அது போதாதா ? வேண்டாம்... வேண்டாம் - ஆடும் வேண்டாம்; பசுவும் வேண்டாம்."

"ஒரு வேளை ஆயிரம் கோழிகள் கேட்டால்..."

"அவை அனைத்துக்கும் தீனி எப்படிப் போடுவது ? அவை தீனியின்றி என்ன செய்யும் ? நம்மிடம் மூன்று கோழிகளும் ஒரு சேவலும் உள்ளன. அவை நமக்குப் போதுமானது."

இப்படியாக அவர்கள் யோசித்துக் கொண்டே போனார்கள். ஆனால் ஒரு முடிவும் எடுக்க முடியவில்லை. அவர்களுக்குத் தேவையான அனைத்தும் அவர்களிடம் இருந்தன. அப்படியே தேவையானதும் அவர்களால் வாங்கிக் கொள்ள முடியும்.

ஏதோ முடிவு எடுத்தவராக் கிழவர் காத்துக் கொண்டிருந்தார்.

"என்ன கூற வேண்டும் என்று எனக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டுக் கிழவர் அந்த அதிசய மனிதரிடம் சென்றார்.

"கிழவரே! என்ன வேண்டும் என்று முடிவு செய்தீரா ?"

"ஆம், பெரியவரே! எங்கள் தறியும், கத்தியும் எப்பொழுதும் புதியதாகவே இருக்க வேண்டும்; எங்கள் கைகளிலும் எப்போதும் வலுவிருக்க வேண்டும். அவை எங்களுக்குத் தேவையான அனைத்தையும் கொடுக்கும். இவற்றைத் தந்தால் போதும்."

"அப்படியே தந்தேன்" என்றார், அந்த அதிசய மனிதர்.

அன்றிலிருந்து கிழவரும் கிழவியும் கூடை செய்து; கயிறு திரித்து வந்த வருமானத்தைக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குப் போதுமான செல்வம் கிடைத்தது; எனவே மிக மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

ஆதாரம்: ருஷ்யக் கதை

வட்டமேஜை!

அதைவிட அநாகரிகம்!



□ பச்சை குத்துவதில் உள்ள நன்மைகளை இவ்வளவு ஆணித்தரமாக யாருமே (பச்சை குத்திக் கொள்ளச் சொன்னவர் உட்பட) எடுத்துக் கூறியதில்லை. இவ்வளவு நன்மைகள் உள்ள ஒரு நல்ல காரியத்தை எதிர்க்க எப்படித்தான் எதிர்ப்பாளர்களுக்கு மனம் வருகிறதோ ?

மேலூர்
4–11–76 நூர்

□ 'குலுங்கிக் குலுங்கி' நகைத்தேன். பாவம், எம். ஜி. ஆர். பச்சை குத்துங்கள் என்று சொன்னாலும் சொன்னார். தலைவலி ஆரம்பம் ஆகிவிட்டது. நீங்கள் எழுதியதை எம்.ஜி.ஆர் பார்க்க நேர்ந்தால் உமக்குக் கிடைக்கும் பட்டம், ''தேசத் துரோகி''தான் !

அவிநாசி
4–11–76 டி. செங்கோட சுப்பிரமணியம்

□ பச்சை குத்தும் செயல் நாகரிகமா? அநாகரிகமா என்று ஆராய்ச்சி செய்யும் அரசியல்வாதிகள் நாளுக்கொரு கட்சி மாறுதலில் உள்ள அநாகரிகச் செயலினை நினைக்காதது பெரிதும் வருந்தத்தக்கது.

சென்னை — 49
4–11–76 நபிபியாரா

□ பச்சை குத்திக் கொள்ளுங்கள் என்ற கட்டுரை மிகவும் அருமையாக அமைந்திருந்தது. வாழைப் பழத்தில் ஊசி குத்துவது போல் அ. அ. தி.மு.க.வுக்குச் சிறந்த அறிவுரைகளைத் தங்களைவிட யாரால் வழங்க முடியும் ?

திருப்பூர்
4–11–76 கே. பி. சிவகுமார்

□ கல்லூரிக் கதைகள் வரிசையில், 'பிரின்ஸிபால்கள் பலவிதம்' என்ற கட்டுரை மிகவும் சுவையாக இருந்தது.

1965ம் வருடம் நான் சிதம்பரம் அருகில் உள்ள எஸ். எஸ். தொழில் நுட்பக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். திரு பாலசுப்பிரமணியம் அப்போது முதல்வர்.

ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. எங்கள் கல்லூரியின் சார்பில் நாற்பத்தெட்டு மணி நேர உண்ணாவிரதம் அறிவித்திருந்தோம்.

ஐம்பது வயதைத் தாண்டிய முதல்வர் துடித்துப் போய்விட்டார்.

''குழந்தைகளெல்லாம் இரண்டு நாட்கள் சாப்பிடாமெ எப்படி இருப்பீங்க ; தயவு செய்து இருபத்திநாலு மணி நேரமா மாற்றிக் கொள்ளுங்கள்'' என்றார்.

அப்போது இளம் வயது பிடிவாதம். முடிவை நாங்கள் மாற்றவில்லை. ''நான் பேப்பர்காரன்கிட்டே நாற்பத்தெட்டு மணி நேரம் உண்ணாவிரதம்னு போடச் சொல்லிட்டேன். நீங்கபாட்டுக்குப் போய்ச் சாப்பிடுங்க. ஹாஸ்டல்லே உப்புமா போடச் சொல்லியிருக்கேன்'' என்றார்.

அதற்கும் நாங்கள் யாரும் மசியவில்லை.

''குழந்தைகள் பட்டினி கிடக்கும்போது நான் மட்டும் எப்படிச் சாப்பிடுவேன் ? எனக்கும் எதுவும் வேண்டாம்'' என்று அவரும் இரண்டு நாட்களும் பட்டினி கிடந்தார்! அந்தக் கருணை உள்ளத்தை என்னால் மறக்கவே இயலாது !

அறந்தாங்கி
3–11–76 வி.எஸ். அனந்தராமன்

□ கல்கி 24-10-76 இதழில் நிதி அமைச்சர் சி. எஸ். அவர்களின் கட்டுரை அபாரமாக அமைந்திருந்தது. உண்மையிலேயே ஒவ்வொரு வரியும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்க ஒன்றாகும்.

தென்னாறு
21-10-76 ந. பானுகுமார்

'கார்ட்டன்' என்றே இல்லாமல்,
 'கார்ட்டர்' பெயரை பெருமையுளார்!
'சார்ட்டர்' அமைதி நட்புறவில்
 சமைப்பார் மிகையே இல்லையடா!
போர்ட்டர் சுமையே பெரிதாமோ?
 புவியில் பெரிய சுமைதாங்கி
யார்க்கும் நேர்மை நலமோங்க
 இனிதே ஆள்க வாழியவே!

அன்னை லில்லி கார்ட்டரவர்
 அமைதிப் பணியைப் பாரதத்தில்
மன்னும் பம்பாய் மருந்தகத்தில்
 வளர்த்தே வாழ்ந்தார்; அவர்பின்னை
பொன்னும் உறவுப் பாலங்கள்
 புதுக்கிப் பாதை திருத்திடுவார்!
நன்னர் நலங்கள் பிறங்கிடவே,
 நண்பின் கார்ட்டர் வாழியவே!

சென்னை–44
8–11–76 மணசை ப. கீரன்

□ சுவையாயிருந்தாலும் பள்ளிப் புத்தகங்களிலிருந்து கதைகளை எடுத்து கல்கி முதல் பக்கங்களில் ''புதிர் விடுவிக்க''க் கோருவது நியாயமாய்ப் படவில்லை.

மரியாதை ராமன் கதை — பூனை காலில் அடிபட்டதால் மற்ற கால்களுக்கு உரியவர்களைத் தீவிபத்துக்குக் காரணம் காட்டியகதை.

கம்பரசம்பேட்டை
7–11–76 என். பானு

வருணன் வென்றான்!





ஹோட்டல் சுதர்ஸன். காரிபியன் பெண்கள் கிரிக்கெட் சங்கத் தலைவி மோனிகா டெய்லர் பத்திரிகையாளரிடம் அளவளாவும் போது சொன்னாள்:

''எங்கள் தேசத்தினைப் போலவே இங்கு வெய்யில் இருக்கும் என்று எதிர்பார்த்தோம்!''

''இம்மாதங்களில் மெட்ராஸில் அவ்வளவு குளிராது; டில்லியில் குளிர் அதிகம். ஜம்மு காஷ்மீரில் இன்னும் கடும் குளிர்!'' என்றார் பத்திரிகைப் பிரதிநிதி ஒருவர்.

''அப்படியா? கடுங்குளிர் என்றால் எங்களுக்கு அலர்ஜி!'' என்று நடுங்கினாள் டெய்லர்.

சிதம்பரம் ஸ்டேடியம். பார்வையாளர் பத்தாயிரம் பேருக்கு மேல் குழுமியிருந்தனர். தமிழகப் பெண்கள் கிரிக்கெட் சங்கத்துக்கு அதைக் கண்டு பெரும் வியப்பு.

''காப்டன் சாந்தா உணவே சாப்பிடவில்லை. வெறும் ஆப்பிளும் கூல்டிரிங்கும், சாப்பிட்டே ஆடிக் கொண்டிருக்கிறாள்! 'Cramp' வந்துவிடாமலிருக்க வேண்டுமே என்று கவலை!''— கூறியது துணைக் காரியதரிசி ஷீஜு.

இந்தியக் கோஷ்டியின் 216 ரன்களைக் கண்டு அசந்து போய் வருண தேவன் இரண்டு நாட்கள் 'தாரை தாரை'யாகக் கொட்டித் தீர்த்துவிட்டான்! ஆடமுடியாத இரு கோஷ்டிகளுக்கும் கண்களில் 'நீர்' துளித்தது!

தமிழகக் கிரிக்கெட் சங்கத்தினர் மைதானத்தை 'ஆபரேஷன்' செய்து குணப்படுத்தினர்! அதற்கு நடந்த 'நர்ஸிங்' பணிவிடைகள் கொஞ்சநஞ்சமல்ல. இதன் விளைவாக இரண்டாம் மூன்றாம் நாட்களில் ஒரு 'சிறிது' ஆட்டத்தைக் காண முடிந்தது. மூன்றாம் நாள் 41 ரன்களிலேயே இந்திய கோஷ்டி மேற்கிந்தியப் பெண்களின் நான்கு விக்கெட்களை வீழ்த்தியதும் வருண தேவனுக்குப் பொறுக்கவில்லை! கொட்டித் தீர்த்து மைதானத்தை விட்டு ஆட்டக்காரிகள் அனைவரையுமே விரட்டி விட்டான்! அவன் 'பொல்லாதவிளையாட்டை.'க் கண்டு வருந்தாதவர் இல்லை. ஆனால் மழைக் காலம் என்று தெரிந்ததுதானே. இந்தச் சமயத்தில் டெஸ்ட் வைபவத்தை வைத்துக் கொண்டது வருண பகவான் தவறு இல்லையல்லவா? ஆட்டம் 'டிரா'வில் முடிந்தது. வருணன் வென்றான்.

காப்டன் ஜானி பிரௌனிடம், ''உங்களுக்குச் சென்னை பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டேன்.


''எல்லாம் பிடித்திருந்தது — இந்த மழையைத் தவிர!'' என்றார்.

''நீங்கள் உங்கள் கோஷ்டியில் பௌலர் பேர்வெதரை, (Fair weather) அழைத்து வந்தீர்கள்! என்ன பிரயோஜனம்?... அது சரி, இந்திய கோஷ்டி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''இவ்வளவு தரமான ஆட்டம் இங்கு இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆஸ்திரேலிய, நியூஸிலந்து வெளி நாட்டுக் குழுக்களோடு அவர்கள் நன்கு ஆடித் தேர்ந்திருக்கிறார்கள். காப்டன் சாந்தா, ஷோபா பண்டிட் ஆகியோர் ஆட்டம் என்னைக் கவர்ந்தது!'' என்றார் ஜானி பிரௌன்.

''ஜானி பிரௌன் ஆட்டத் திறனோடு கிரிக்கெட் சட்ட நுணுக்கங்களும் அறிந்தவள். பன்னிரண்டாவது ஆட்டக்காரி ஸ்லிப்பில் நின்றதைக் காப்டன் சாந்தாவிடம் நாசூக்காகக் காட்டி இடம் மாற வைத்த அழகைப் பார்த்தீர்கள், அல்லவா?'' என்று அம்பயர் ராமசாமி வியந்தார்!

—குண்டுமணி





படங்கள்: 1. சாந்தா ரங்கசாமி. 2. ஜானி பிரௌன். 3 டெஸ்டில் இந்திய விக்கெட் வீழ்ச்சி!

ஏழுமலையான் அருள்!

வாரிஜகுமாரி



"அம்மா! நானும் விமலாவும் ஏழு மணிக்குக் கிளம்பறோம். மலையடிவாரத்துக்குப் போகும்போது எப்படியும் எட்டாயிடும். நடந்து போறவங்களுக்கு நாலு மணி நேரமாகுமாம். விமலா, குழந்தையையும் எடுத்துண்டு நடக்க ஒரு மணி நேரம் அதிகமானாலும், சுமார் ஒரு மணிக்கு மேலத்திருப்பதி வந்து சேர்ந்துடுவோம்.... நீ பன்னிரண்டு மணி பஸ்ஸில் புறப்பட்டுத் திருமலைக்குப் போய் பஸ் ஸ்டாப்பிலேயே காத்திரு. நாங்க வந்து சேர்ந்த பிறகு 'காட்டேஜ்' கிடைக்குமான்னு பார்ப்போம்..." என்றான் அனந்தராமன்.

"குழந்தையையும் எடுத்துண்டு பாவம் விமலாவால் நடக்க முடியுமாடா அனந்து? நானும் உங்களோடவே நடந்து வந்துடவா?" என்று கேட்டாள் அனந்தராமனுடைய தாயார். பத்துப் படிகள் கூடத் தன்னால் ஏற முடியாது என்று அந்த அம்மாளுக்குத் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும் பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் அவ்வளவு தூரம் நடந்து வரவேண்டுமே என்ற அங்கலாய்ப்பில் தானும் நடந்து வருவதாகச் சொன்னாள்.

"உங்களால் முடியாதும்மா... இந்தச் சத்திரத்து மாடி ஏறி வந்ததே அரை மணி நேரம் மூச்சு வாங்கித்து..." என்றாள் விமலா.

"நீயும் நடந்து வந்தால் சூட்கேஸை யாரும்மா தூக்கிண்டு வர்றது? வீட்டையே காலி பண்ணிண்டு வரமாதிரி விமலா சூட்கேஸிலே சாமான்களை வைச்சுத் திணிச்சிருக்கா... அதையும் தூக்கிண்டு மலை ஏற முடியுமா?..." என்றான் அனந்தராமன்.

"அதுவும் வாஸ்தவம்தான்" என்று ஒப்புக் கொண்டாள் தாயார்.

அடிவாரத்தை அவர்கள் அடையும்போது மணி ஒன்பது. விமலா முதல் படியில் குழந்தையைப் படுக்க வைத்தாள். சுமார் ஐந்து நிமிஷங்கள் ஏழாவது மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை நினைத்து "வேங்கடாசலபதி! இந்தக் குழந்தை பேசுமா பேசாதாவென்றே புரியவில்லை. இந்தக் காதுகளுக்குச் சப்தங்களைக் கேட்கும் சக்தி இருப்பதாகத் தெரியவில்லை. உன் சன்னதிக்கு எடுத்து வருகிறேன். உனக்குக் கல்யாண உற்சவம் செய்து வைக்கிறோம். இந்த ஜீவனைப் பெற்றெடுத்த நாங்கள் இருவரும் உன் சன்னதியை அங்கப் பிரதட்சிணம் செய்கிறோம். என்ன அபசாரம் செய்திருந்தாலும் அதை மன்னித்து இந்தக் குழந்தைக்குப் பேசும் சக்தியையும் கேட்கும் சக்தியையும் கொடு!" என்று வேண்டிக் கொண்டாள். அவள் விழிகளில் நீர் ததும்பி நின்றது. குனிந்து குழந்தையைப் பார்த்து "ராஜா!... கோவிந்தா கோவிந்தான்னு சொல்லும்மா கண்ணு!" என்றாள். குழந்தையின் பார்வை எங்கோ லயித்திருந்தது. விமலாவின் குரலுக்கு அதன் செவிகளில் நுழையும் சக்தி இல்லை. குழந்தையை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு 'கோவிந்தா! கோவிந்தா!' என்று மெள்ளக் கூறியவாறு மலையேறத் தொடங்கினாள். அவளுடைய ஒவ்வொரு மூச்சும் ஒரு கோவிந்தா நாமத்துடன் வெளிவந்து கொண்டிருந்தது. சுமார் ஐம்பது படிகள் ஏறியதுமே மூச்சு வாங்கத் தொடங்கியது. ஒரு கையால் வலது முழங்காலைப் பிடித்தவாறு சிறிது நின்றாள். ஐந்தாறு படிகள் முன்னதாகச் சென்று கொண்டிருந்த அனந்தராமன் திரும்பி விமலாவைப் பார்த்தான். அவள் மார்பு விம்மித் தணிந்து கொண்டிருந்தது.

"ராஜாவை எங்கிட்டக் கொடுக்கிறியா?" என்றான்.



"நீங்கதான் கூடையை எடுத்துண்டு வறேளே....." என்று கூறியவாறு நடக்கத் தொடங்கினாள் விமலா.

"ஏணியில் ஏறுவது போல் மலையேறக்கூடாது விமலா... ஒவ்வொரு படியிலும் இரண்டு அடி நடந்து அடுத்த படிக்குப் போகணும். அப்பத்தான் லகுவாயிருக்கும்" என்று மலையேறும் வித்தையைச் சொல்லிக் கொடுத்தான் அனந்தராமன்.

"இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு?"

"இன்னும் நூறு படிகள்கூட ஏறல்லியே விமலா. அதுக்குள்ளே எவ்வளவு தூரம் இருக்குன்னு கேக்கறியே?... காளி கோபுரம் வரைக்கும் கொஞ்சம் கஷ்டமாகத்



தான் இருக்கும். காளி கோபுரம் ஏறிட்டால் அப்புறம் அவ்வளவு சிரமம் தெரியாது'' என்று ஊக்கமளித்தான் அனந்தராமன்.

''காளி கோபுரம் ரொம்பத் தூரமா?''

''அதோ தெரியறதே! அதுதான் காளி கோபுரம்!'' என்று கையை உயர்த்திக் கோபுரத்தைக் காட்டினான். சுமார் இரண்டு தென்னை மரம் உயரத்தில் கோபுரம் தெரிந்தது. விடுவிடுவென்று ஏறினால் ஐந்து நிமிஷங்களில் காளி கோபுரத்தை அடைந்துவிடலாம் போல் தோன்றியது விமலாவுக்கு. பத்துப் பதினைந்து படிகள் வேகமாக ஏறினாள். அதற்குள் முழங்கால்கள் கழன்று விழுந்துவிடும்போல் வலித்தன. உட்கார்ந்து விட்டாள். அனந்தராமன் ஒன்றும் சொல்லவில்லை. அவனும் உட்கார்ந்தான். விமலா காளி கோபுரத்தை அண்ணாந்து பார்த்தாள். எப்படிப் போய்ச் சேரப் போகிறோம் என்று பிரமிப்பா யிருந்தது.

அப்பொழுது விமலாவைப் புதிய குரல் ஒன்று இருபது முப்பது படிகள் கீழே பார்க்கச் செய்தது. சுமார் பதினைந்து வயதுச் சிறுவன் ஒருவன் 'கோவிந்தா! கோவிந்தா!' என்று ஏழுமலையானை அழைத்துக் கொண்டு மலையேறிக் கொண்டிருந்தான். சில நிமிஷங்களில் அவன் வெகுவாக முன்னேறிவிட்டான். விமலாவும் எழுந்தாள். இனி எங்கும் உட்காராமல் விடுவிடுவென்று காளி கோபுரத்தை அடைந்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு ஏறத் தொடங்கினாள். நான்கு இடங்களில் சிரம பரிகாரம் செய்து கொண்டு ஒரு வழியாகப் பத்தரை மணிக்குக் காளி கோபுரத்தையடைந்தனர் விமலாவும் அனந்தராமனும்.

பதினைந்து நிமிஷங்களுக்கு மேல் ஓய்வு எடுத்துக் கொண்டு பயணத்தை மீண்டும் தொடங்கினர். ''இனிமேல் அவ்வளவு சிரமமாயிருக்காது'' என்றான் அனந்தராமன். சிறிது தூரம் சமதரையில் நடந்ததும் மீண்டும் படிகள் பயமுறுத்தின. குழந்தையையும் சுமந்து கொண்டு விமலா மேல் மூச்சு வாங்கப் படிகள் ஏறுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது அனந்தராமனுக்கு.

''குழந்தையை அம்மாவிடம் கொடுத்திருக்கலாம்...'' என்றான் அனந்தராமன்.

''இந்தப் பிரார்த்தனையே குழந்தையை உத்தேசித்துத்தானே! ராஜா நம்மோடு வருவது அவனே மலையேறி வருவதாகத்தான் அர்த்தம்'' என்றாள் விமலா. அனந்தராமன் குழந்தையின் முகத்தைப் பார்த்தான். அந்தப் பாசாங்கு வெய்யிலிலும் குழந்தையின் மலர் முகம் வாடி வதங்கியிருந்தது. அவனைத் தூக்கிக்கொண்டு நடக்க முடியாமல் நடக்கும் தாயின் கஷ்டத்தை உணர முடியாத அந்தக் குழந்தை அனந்தராமனைப் பார்த்துச் சிரித்தது! அதன் சிரிப்பில்தான் எத்தனை அழகு! சிரிக்கத் தெரிந்த அதற்கு வாயைத் திறந்து 'அம்மா' 'அப்பா' என்று அழைக்கத் தெரியவில்லையே!

வழியில் வாகனங்கள் செல்லும் தார் போட்ட ரஸ்தா குறுக்கிட்டது. பாதையின் ஓரமாக நின்றுகொண்டு கீழே தெரிந்த இடு



அயல்நாட்டு ஹாஸ்யம் - 1

இரு பள்ளத்தைப் பார்த்துக் கொண்டிருந் தனர் சிலர். அதில் அவர்களை முந்திக் கொண்டு வந்த பையனும் இருந்தான். அனந்தராமனைப் பார்த்ததும் ''இப்பத்தான் வர்றீங்களா? நான் ரொம்ப நேரத்துக்கு முந்தியே இங்கே வந்துட்டேன்...'' என்று மிகவும் பழகியவன் போல் சொன்னான்.

''நீ சின்னப் பையன்... ஓட்டமும் நடையுமா வந்துட்டே...'' என்றாள் விமலா. அவனும் அவர்களுடனேயே நடந்தான். ''அதோ தெரியறதே... அதுதான் மூழங்கா முடிச்சு... அதைத் தாண்டிட்டா அப்புறம் கஷ்டமே இல்லே...'' என்றான் பையன்.

''உனக்கு இந்த ஊர்தானா?'' என்று விசாரித்தான் அனந்தராமன்.

''இல்லீங்க... நான் மெட்றாஸ்... ஆறு மாசத்துக்கு முந்தி ஒருவாட்டி சினேகிதப் பசங்களோட வந்தேன்....''

''இப்ப நீ தனியாத்தான் வந்திருக்கியா?''

''ஆமா...''

'''படிக்கிறியா?''

''எட்டாவது வரை படிச்சேன். இப்ப கார் மெக்கானிக் வேலே கத்துக்கிறேன்... வேலே யெல்லாம் ஓரளவு புரிஞ்சுக்கிட்டேன்க. நானே பழுது பார்ப்பேனுங்க... வேறே இடத்துக்கு வேலேக்குப் போனா நூறு ரூபாய்க்கு மேலே கொடுப்பாங்க... இப்ப இருக்கிற முதலாளி அறுவது ரூவாதான் கொடுக்கிறாரு... ஆனா அவருதான் வேலே யெல்லாம் கத்துக் குடுத்தாரு... அவரை விட்டுப் போகலாங்களா?''

''உன் பேர் என்ன?'' என்று கேட்டாள் விமலா.

''இப்ப நாம போற மலேயோட பேரு தான்!...''

''திருமலேயா?''

''ஏழுமலே... ஸார்!... அந்தக் கூடையைக் கொடுங்க, நா எடுத்துட்டு வரேன்...'' என்று கூறியபடி அனந்தராமன் கையிலிருந்த பிரம்புக் கூடையை வாங்கிக் கொண்டான் ஏழுமலே.

மலே மலேயாக ஆறு மலேகளேக் கடந்து ஏழாவது மலேயில் அவர்கள் நடந்து பஸ் ஸ்டாண்டை அடையும்பொழுது மணி இரண்டேமுக்கால். அனந்தராமனின் தாயார் சூட் கேஸைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவர்கள் வரும் வழியையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

'' ரொம்பக் கஷ்டப்பட்டுட்டியோடி ?'' என்று விமலாவைப் பார்த்து வாஞ்சையுடன் கேட்டாள். விமலா வாயைத் திறந்து பதில் சொல்லவில்லே. லேசாக ஒரு புன்னகை செய்தவாறு குழந்தையை மாமியாரிடம் கொடுத்தாள். 'இவனேச் சுமந்து பெற்ற கஷ்டத்தை விடவா?' என்று கேட்பதைப் போலிருந்தது அவள் செய்கை.

''யார் இந்தப் பிள்ளே?'' என்று ஏழுமலேயைக் காட்டிக் கேட்டாள்.

''மோட்டார் மெக்கானிக் ஏழுமலே!'' என்றான் அனந்தராமன். விமலா அவனேப் பற்றிச் சொன்னாள்.

அனந்தராமன் 'காட்டேஜ்' கிடைக்குமா என்று பார்க்கப் போனான்.

அன்று இரவு பகவானேத் தரிசனம் செய்தார்கள். மறுநாள் காலே கணவனும் மனேவியும் அங்கப் பிரதட்சிணம் செய்வதற்கும் மத்தியானம் கல்யாண உத்சவத்துக்கும் பணம் கட்டி ஏற்பாடு செய்தார்கள். கோவிலே விட்டு வெளியில் வரும்பொழுது பத்து மணியாகிவிட்டது. அதுவரை ஏழுமலேயும் அவர்களுடனேயே இருந்தான். குழந்தையை அவன் தான் பார்த்துக் கொண்டான்.

மறுநாளும் அவர்களுடனேயே இருக்குமாறு ஏழுமலேயைக் கேட்டுக் கொண்டாள் அனந்தராமனின் தாயார். காலேயில் அங்கப் பிரதட்சிணம் செய்யும்பொழுது உதவிக்கு அந்த அம்மாள் பக்கத்தில் இருக்க வேண்டும். அப்பொழுது குழந்தையையும் எடுத்துப் போவது முடியாத காரியம். விடியற்காலே குளிரில் குழந்தையை எடுத்துப் போனால் அதன் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது என்பது ஒரு காரணம். அத்துடன் பிரதட்சிணம் செய்யப் போகிறவர்களுக்கு உதவிக்காகப் போகும் அந்த அம்மாளும் ஸ்நானம் செய்துவிட்டு ஈரப் புடவையுடன் இருப்பாள். குழந்தையை எப்படி வைத்துக் கொள்ள முடியும்? ஆகையால் ஏழுமலேயிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டுப் போவதாகத் தீர்மானித்தார்கள். ஏழுமலேயும் சம்மதித்தான்.

காலே மூன்று மணிக்கு எழுந்து கோவிலுக்குப் போனார்கள் மூவரும். ஏழுமலேயிடம் பால் பாட்டிலேக் கொடுத்துக் குழந்தை அழுதால் கொடுக்குமாறு சொல்லி விட்டுப் போனார்கள்.

அங்கப் பிரதட்சிணம் செய்து பகவானேத் தரிசனம் செய்துவிட்டு அவர்கள் காட்டேஜை அடையும்பொழுது ஒன்பது மணியாகிவிட்டது. ஆனால் ஏழுமலேயைக் காணவில்லே. குழந்தையை எடுத்துக் கொண்டு போயிருப்பான் என்று கலேப்பட்டுக் கொண்டிருக்கையில் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தான். குழந்தை அவனிடம் ஒட்டிக் கொண்டு விட்டது.

''எங்கேப்பா போயிருந்தே?'' என்று கேட்டாள் அனந்தராமனின் தாயார்.

''குழந்தை அழுதுச்சுங்க... எடுத்துக்கிட்டுப் போய் வேடிக்கை காட்டிட்டு வரேன்'' என்றான்.

அப்புறம் அவர்கள் கல்யாண உற்சவத்துக்காகக் கோவிலுக்குப் போகையிலும் குழந்தையை அவனிடமே விட்டுச் சென்றார்கள்.

மாலே ஆறு மணி சுமாருக்கு எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு திரும்பினர்.



இதோ ஒரு பீற்போக்காளர் !

கலிபோர்னியாவைச் சேர்ந்த ஒருவர் பின்புறமாகவே 8000 மைல்கள் நடந்தாராம். இது நடந்தது 40 ஆண்டுகளுக்கு முன்பு. இப்போது இவர் வயது 81

ஏழுமலையைக் காணவில்லை. தேடி அலைந்து கண்டு பிடித்து எட்டு மணிக்கு அனந்தராமன் குழந்தையுடன் திரும்பினான். ஏழுமலையும் கூட வந்தான். உள்ளே வந்ததும் குழந்தையை அம்மாவிடம் கொடுத்துவிட்டு, ''விமலா! அந்தக் கதவைச் சாத்து!'' என்றான். குரலிலும் முகத்திலும் கடுமை நிறைந்திருந்தது. அம்மாவும் விமலாவும் ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தார்கள்.

''இந்த ராஸ்கல் என்ன செய்திருக்கிறான் தெரியுமா?'' என்று ஏழுமலையைச் சுட்டிக் காட்டிக் கர்ஜித்தான்.


''என்ன விஷயம் அனந்து?'' என்று அமைதியாகக் கேட்டாள் அம்மா.

''இந்தப் பிச்சைக்காரக் கழுதை நம்ம குழந்தையைக் காட்டி க்யூ வரிசையில் பிச்சை வாங்கிக் கொண்டிருக்கிறான்...'' என்ற அனந்தராமனின் கோபம் உச்ச நிலையை அடைந்தது.

''நிஜமாவா?'' என்றாள் விமலா.

''என் கண்ணால் பார்த்தேன்... வேணும்னு அந்தப் பயலையே கேளேன்'' என்று சீறினான். விமலாவும் அவன் தாயாரும் ஏழுமலையைப் பார்த்தார்கள். ஏழுமலையே பேசினான்.

''பிச்சை வாங்கினேங்க...ஆனா எனக்காகப் பிச்சை வாங்கலீங்க... சாமி உண்டியலிலே போடறதுக்குத்தான் வாங்கினேன்'' என்றான். ஒரு நிமிஷம் யாரும் எதுவும்பேசவில்லை. அவனே தொடர்ந்தான். ''எங்க அப்பன் ஒரு குடிகாரனுங்க. தினமும் குடிச்சுட்டு வந்து எங்கம்மாவை உதை உதைன்னு உதைக்கும். தினமும் எங்கம்மா அடி வாங்கி உடம்பெல்லாம் புண்ணாயிடுச்சு. கடைசியிலே இனிமே அடிவாங்க முடியாதுன்னுட்டு ஆறு மாசத்துக்கு முந்தி எங்கோ போயிடுச்சு... எனக்கு அம்மா போனது வருத்தமாயிருந்தாலும் அடிவாங்காம எங்கேயாவது நல்லா இருக்கட்டும்னு தோணிச்சு... 'அவ எங்க போயிடுவா? தேடிப் பிடிச்சு ரெண்டா வெட்டிப் போட்டுடறேன்'னு சொல்லிக்கிட்டே இருந்தாரு எங்கப்பா. போன வாரம் மதுரையிலே எங்கம்மாவைப் பார்த்ததாக யாரோ அப்பா கிட்டச் சொன்னாங்களாம். அவளை விட்டேனா பார்னு கறுவிக்கிட்டு மதுரைக்குப் போயிருக்காரு எங்கப்பா...நான் சின்ன வயசிலே வாய் பேசாம இருந்தேனாம். அப்போ எங்கம்மா 'சாமி! நாலு இடத்திலே பிச்சை வாங்கி உனக்குக் காணிக்கை போடறேன். என் பிள்ளையைப் பேசவை'ன்னு வேண்டிக்கிட்டு அதன்படி செஞ்சாங்களாம். அப்புறம் எனக்குப் பேச்சு வந்ததாம். இப்ப நான் 'சாமி! எங்கப்பன் கண்ணிலே படாமல் எங்கம்மாவைக் காப்பாத்து. உனக்குப் பிச்சை வாங்கிப் பதினொரு ரூபா உண்டியிலே போடறேன்'னு வேண்டிக்கிட்டு வந்தேன். பத்து ரூவா சேர்ந்ததும் உண்டியிலே போட்டேன். இன்னும் ஒரு ரூவாதான் போடணும்...'' என்று கூறினான் ஏழுமலை. அவன் விழிகள் கலங்கிவிட்டன. ''நீ பிச்சை வாங்கிப் போட எங்க குழந்தைதான் கிடைச்சுதா?'' என்று கத்திக்கொண்டு ஏழுமலையின் கன்னத்தில் பளார் என்று அறைந்தான் அனந்தராமன்.



Laugh Magazine.

அயல்நாட்டு ஹாஸ்யம் - 2

''கோவிந்தா!...'' என்ற சொல்தான் ஏழுமலையிடமிருந்து வெளிப்பட்டது. அப்பொழுது ஓர் ஆச்சரியம் நடந்தது!

அடி விழுந்த சப்தத்தைக் கேட்டோ அல்லது 'கோவிந்தா!' என்று அவன் எழுப்பிய குரலைக் கேட்டோ எங்கோ பார்த்துக்கொண்டிருந்த குழந்தை ஏழுமலையைத் திரும்பிப் பார்த்தது!

''இருடா அனந்து!'' என்றாள் தாயார். அனந்துவும் அதைக் கவனித்தான். விமலா விரலைச் சொடுக்கினாள். குழந்தை அவள் பக்கம் திரும்பிற்று. எந்த மூலையிலிருந்து ஒலி எழுப்பினாலும் குழந்தையின் பார்வை அந்த இடத்துக்குத் தாவியது.

''குழந்தைக்குக் காது கேட்கிறது!'' என்று ஆனந்தத்துடன் கூறினாள் விமலா.

''அனந்து! பகவானுக்கு நீங்கள் செய்த அங்கப் பிரதட்சிணமோ கல்யாண உற்சவமோ போதவில்லையடா... குழந்தை மூலமாகவே காணிக்கை வாங்கிக் கொண்டிருக்கிறான்!...'' என்றாள். அனந்தராமன் கோபம் தணிந்து ஏழுமலையை அனுதாபத்துடன் பார்த்தான்.

''நா வரேனுங்க...'' என்று கிளம்பினான் ஏழுமலை.

''இந்த ராத்திரியிலே எங்கேப்பா போவே? இரு... நாளைக் காலையிலே போகலாம்...'' என்றாள் அம்மா.


''எங்களோட டில்லிக்கு வறியா? உனக்கு ஒரு நல்ல வேலை வாங்கித் தருகிறேன்...'' என்றான் அனந்தராமன்.

''வரேனுங்க. மெட்ராஸ்லேதான் எனக்கு யார் இருக்காங்க?'' என்றான்.

மறுநாள் அவர்களுடன் ஏழுமலையும் டில்லிக்குப் பயணமானான்.

இதில் இன்னொரு விஷயம் என்னவென்றால், ஏழுமலையின் தாயார் டில்லியில் அனந்தராமன் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு வீட்டில் தான் வேலை செய்து கொண்டிருந்தாள். மதுரையில் அவளைப் பார்த்ததாக யாரோ கூறியது தவறான செய்தி!

டில்லி போய்ச் சேரும்வரை மூவருடைய சிந்தையிலும் ஒரே சொல் ஒலித்துக்கொண்டிருந்தது: ''கோவிந்தா!...கோவிந்தா!''



'' அரசியல் சாஸனம் போய்விட்டது. பாக்கி இருப்பது மாறுதல்கள்தாம்.''

— கிருபளானி

பசுமைக்கும் பயிற்சிக்கும் பவானி சாகர்

இந்தச் சம்சார சாகரத்திலிருந்து தற்காலிகமாக இரண்டு மூன்று நாட்கள் எங்காவது தள்ளிப் போய் அமர்ந்து ஓய்வு பெறலாமா என்று நினைத்தபோது மனத்தில் பவானி சாகரம் என்ற சொற்றொடர் பளிச்சிட்டது!

தமிழகத்தில் நான் இது வரை பார்க்காத நீர்த் தேக்கம் அது!... அந்த ஆசையை இனி தேக்கி வைக்க வேண்டிய அவசியம் இல்லையே! மேட்டுப் பாளையம் வரை ரயிலில் போய் இருபத்தி இரண்டு மைல்கள் பஸ்ஸில் அமர்ந்திருந்தால், பவானி சாகரத்தை அடையலாம். பாரதம் சுதந்திரம் அடைந்த பிறகு நிர்மாணிக்கப்பட்ட மிகப் பெரிய மண் கவர் அணைக்கட்டு இது என்று நினைக்கும் போது பெருமையாக இருக்கிறது. இந்த அணைக்கட்டின் மொத்த நீளம் ஐந்தரை மைல்கள். இதன் மத்தியில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு அடி நீளத்துக்கான சிமெண்டு போட்ட பகுதி தவிர இரு பக்கமும் மண்தான்.





1. அணைக்கட்டு மேலிருக்கும் [illegible].

2. அணைக்கட்டு.

3. அரசு ஊழியர் பயிற்சி முகாம் ஆரம்பமாகிறது.



ரம்மியமான ஒரு நீண்ட சாலையில் திரும்பி பஸ் நிற்கிறது. 'பவானி இல்லத்'தை நாடி நடக்கிறேன்!

பொறி இயல் இலாக்காவின் மேற்பார்வையில் அரசாங்க விருந்தினர் மாளிகையாக விளங்குவதுதான், 'பவானி இல்லம்'! எப்போதுமே, இங்கே பலரக அதிகாரிகள் நடமாட்டமும் முகாமும் உண்டு. என் அதிருஷ்டம் அன்று ஓர் அறை காலியாக இருந்தது. இந்த விருந்தினர் விடுதி பராமரிக்கப்படும் விதத்துக்குப் பொறி இயல் இலாக்காவினருக்கு ஒரு 'சபாஷ்' கொடுக்கலாம்.

ஜனத்தொகை மொத்தம் மூவாயிரத்துக்குள்ளாக இருந்தாலும் இந்த ஊர், 'டவுன் ஷிப்' அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. முதல் வகுப்பு முனிசிபல் கமிஷனர். பஸ் போகும் நெடுஞ்சாலையிலேயே, மரங்களால் சூழப்பட்ட நவீன கால ஆசிரமம் போல் 'பவானி சாகர் பஞ்சாயத்து ஒன்றிய'க் கட்டடம் இருந்தாலும், இதில் இயங்கும் நிர்வாகத்தின் வீச்சு உள்ளூரில் கிடையாது. சுற்றுவட்டாரத்துக்குத்தான்!

இந்த ஊராட்சி ஒன்றியத்துக்கு எதிர்த்தாற்போல் அரசினர் உயர்நிலைப் பள்ளி. வெய்யிலின் கடுமையைக் கொஞ்சம்கூடப் பொருட்படுத்தாமல் சில வகுப்பு மாணவர்கள் தேகப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அந்தப் பிரதான பஸ் ஓடும் நெடுஞ்சாலை ஒரு ரயில் சந்திப்பின் நீண்ட பிளாட்பாரத்தை நினைவூட்டுகிறது. அந்த ரோட்டை ஒட்டியே பலசரக்குக் கடைகள், சைக்கிள் ரிப்பேர் கடைகள், சலூன், டீக்கடை எல்லாமே இருப்பதால் ஜன நடமாட்டமும் சத்தமும் அங்கேதான் நிலவுகின்றன. ஊரின் மற்ற எல்லாப் பகுதிகளிலுமே ஒரே அமைதி! சாந்தம்! சுகம்!

'சிவில் சர்வீஸ் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட்' என்ற பெயர்ப் பலகை, ரஸ்தாவை ஒட்டியுள்ள பெரிய மைதானத்துக்கு அப்பால் தெரிகிறது. 'இங்கே என்ன நடக்கிறது?' என்று தெரிந்து கொள்ளும் ஆவலில், அந்தப் பயிற்சி முகாமின் முதல்வர் திரு பொன்னுசாமி அவர்களைச் சந்திக்கிறேன்.

"சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதி வெற்றி பெற்று மாநில அரசு ஊழியர்களாக வருபவர்களுக்கான பயிற்சி முகாம் இது. இரண்டு மாத கால பயிற்சி. அரசு காரியாலயங்களில் பணி செய்ய வேண்டிய முறைகளைப் பற்றி இங்கே வருபவர்கள் நன்கு கற்றுக் கொள்ள ஒரு வாய்ப்பு. இந்த மாதிரி பயிற்சி அளிக்க



இங்கிலாந்து நாட்டின் பிரதம தளபதியாக விளங்கிய வெல்லஸ்லி பிரபு ஆரம்பப் பள்ளியில் படித்தபோது ஆசிரியரின் கோட்டில் ஒரு நாள் மையைச் சிதறி விட்டார். மையைக் கொட்டியது யார்? என்று ஆசிரியர் கேட்டபோது வகுப்பில் எல்லா மாணவர்களுமே பேசாமலிருந்ததால் வகுப்பு முழுமைக்கும் அபராதம் போட்டார் ஆசிரியர் ஜேம்ஸ்!

பின்னர் நாட்டின் பிரதமராக வெல்லெஸ்லி பிரபு பதவி ஏற்றதும் ஆசிரியரைச் சந்தித்து இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னர் அவர் கோட்டில் மையைக் கொட்டியது தாம்தான் என்பதை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்கச் சென்றார்! வெல்லெஸ்லி பிரபு ஆசிரியர் ஜேம்ஸ் வீட்டில் நுழைந்ததுமே, "நீதானே என் கோட்டில் மையைக் கொட்டியது?" என்று ஆவேசமாகக் கேட்டார் ஆசிரியர்!

அவ்வளவுதான்! நாட்டின் பிரதமராகப் பணி ஏற்றிருந்த நிலையிலும் வகுப்பறையில் ஏற்பட்ட அதே பயம் மனத்தில் தோன்றி வெல்லெஸ்லி பிரபு, "இல்லே சார்!!" என்று கூறித் திரும்பினார்.

ஆசிரியர்கள் என்றால் எவ்வளவு பெரிய பதவியில் இருப்பவர்களிடத்தும் ஒருவித பயமும் மரியாதையும் தாமே தோன்றி விடுகின்றன!

தமிழகக் கல்வித் துறைத் தேர்வு இயக்குநர் கூறியது. தகவல்: நெல்லை ஆ. கணபதி

வேண்டும் என்று பல ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திட்டம் இருந்தாலும், கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் இதைக் கட்டாயமாக அமுல் செய்திருக்கிறார்கள். இப்போது பதினோராவது குழுவினர் (Batch) பயிற்சி பெற வந்திருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு தடவையில் இருநூற்றைம்பதி லிருந்து முந்நூறு ஊழியர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். இதில் சுமார் ஐம்பது பெண்மணிகளும் இருப்பார்கள். அவர்களுக்குத் தனியாகத் தங்கும் விடுதி இருக்கிறது'' என்றார்.

மறு நாள் அந்தப் பக்கம் போன போது, இந்தப் பயிற்சியாளர்கள் நடத்திய கூட்டுப் பிரார்த்தனையையும், சிரம தானத்தையும், மாலையில் அவர்களுடைய விளையாட்டு ஆர்வத்தையும் கவனிக்க நேர்ந்தது. இங்கே வந்து பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்புபவர்கள், நிச்சயம் உடல் ஆரோக்கியத்தையும் விருத்தி செய்து கொண்டே திரும்புவார்கள் என்று தோன்றியது.

மாநில சமுதாய ஊராட்சி வளர்ச்சி நிலையத்தின் (*State Institute for Community dovelopment and Panchayat Raj*) முதல்வர் டாக்டர் பி. வி. கே. ராவ் தம் மேல் பார்வையிலிருக்கும் இந்த நிலையத்தில் பல ரக ஊழியர்களுக்கு அளிக்கப்படும் விதம் விதமான பயிற்சிகளைப் பற்றி விவரிக்கிறார். ஒரு நாள் பயிற்சியிலிருந்து தொண்ணூறு நாள் பயிற்சி வரை இருபத்தி இரண்டு ரகப் பயிற்சிகள் இங்கே அளிக்கப்படுகின்றன. பஞ்சாயத்துப் போர்டு சேர்மன், உதவி சேர்மன் முதலியவர்களுக்குக் கூடப் பதினைந்து நாள் பயிற்சி உண்டு. விவசாயத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன் வளத் துறை முதலியவற்றில் தேர்ந்த ஆசிரியர்கள் இங்கே இருக்கிறார்கள்.

டாக்டர் ராவிடம் என் சந்தேகத்தைப் போக்கிக் கொள்கிறேன். "ஏன் சார் இந்தப் பவானி சாகரத்தில் பயிற்சிக்காக எங்கிருந்தெல்லாமோ அரசு ஊழியர்களை இழுத்தடிக்கிறார்கள்? சென்னையிலோ, மதுரையிலோ, கோவையிலோ இல்லாத வசதிகள் இங்கே என்ன இருக்கின்றன?'' என்று கேட்டு வைத்தேன்.

அவர் அமைதியாகவே விளக்கினார்.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குமுன் கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பவானிசாகர் அணைக்கட்டு வேலைக்காக, ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இங்கே சில ஆண்டுகள் தங்கி உழைக்க வேண்டியிருந்தது. அவர்கள் வசதிக்காகப் பல கட்டடங்களை இங்கே எழுப்பினார்கள். அணைக்கட்டு வேலை முடிந்தவுடன் அவர்களெல்லாம் வேறு இடங்களுக்குப் போய்விட்டார்கள். கட்டடங்கள் எல்லாம் காலி. இவைகளைத் தொடர்ந்து பயன் படுத்தாவிட்டால் பாழடைந்து போகும்.

இரண்டாவது எப்போதும் வற்றாத நல்ல குடிதண்ணீர் விநியோகம். மூன்றாவது சுத்தமான இயற்கையான மலைச் சாரல் காற்று! நான்காவதாகவும் முக்கியமாகவும், இங்கு பொழுதுபோக்க என்ற எந்த வசதியும் கிடையாது! ஒரு திரைப்படம் பார்க்க வேண்டுமானால் சத்தியமங்கலம் போயாக வேண்டும். எப்போதாவது டூரிங் டாக்கீஸ் இங்கே நடக்கும். இதனால் பயிற்சிகளிலும் அது சம்பந்தப்பட்ட பாடங்களிலும் நல்ல கவனம் செலுத்த வாய்ப்பு உண்டு.

பலன் அளிக்கும் பயிற்சிக்குப் பவானிசாகர் சரியான இடம்தான் என்று எனக்கு விளக்கம் கிடைத்துவிட்டது!

"என்ன சார்! அணைக்கட்டுக்கு மேலே போய்ப் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்கிறார் உதவி இஞ்சினீயர் திரு ரமணி. இளம் இஞ்சினீயர் திரு சேதுராமனுடன் ஒரு லாரியில் அணை மேலே ஏறி அந்த ஐந்து மைல் தூரத்தையும் சுற்றி வருகிறோம்.


அணைக்கட்டு நடுப் பாகத்தில் மேலே அழகான பிள்ளையார் கோவில். அதற்குப் பக்கத்தில் உயரமான ஒரு மாடிக் கட்டடம். அந்தக் கட்டடத்தின் பால்கனியில் நின்று இடது பக்கம் பார்த்தால் சமுத்திரம் போன்ற நீர்த் தேக்கம். மோயாறும் பவானியும் சங்கமமாகும் இந்த இடத்தில் கீழ் பவானி அணைத் திட்டம் உருவாகியிருக்கிறது.

வலது பக்கத்தில் பசுமையான மலைச்சாரலில் காராச்சிக் கோரை, கொத்தமங்கலம், பிடுகு நுரை போன்ற கிராமங்கள் தெரிகின்றன. அணைக்கட்டுக்கு மறுபக்கம், பவானி வாய்க்கால், தன் நூற்றி இருபத்து நான்கு மைல் பிரயாணத்தைத் தொடங்குகிறது.

நாள் முழுதும் அந்த இடத்திலிருந்து இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டிருக்கலாம் போல் தோன்றும் நேரத்தில், அணைக்கட்டு சிப்பந்தி ஒருவர் வேகமாக வந்து நான் நின்று கொண்டிருந்த இடத்தில்தான் இப்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் ஒரு தமிழ்த் திரைப்பட ஷூட்டிங் நடந்ததாகவும், கதாநாயகியாக நடித்தவர் பாடிக் கொண்டே நடந்து வந்ததாகவும் வருணிக்க, இல்லை, நடிக்கவே ஆரம்பித்து விட்டார்.

1948ல் ஆரம்பித்து 1953ல் முடிந்த இந்த அணைக்கட்டு நிர்மாணத்துக்கு அந்த நாட்களில் பத்தரைக் கோடி ரூபாய் செலவானதாம். அந்த முயற்சி இப்போது லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பசுமையாக்க உதவுகிறது.

– கோமதி சுவாமிநாதன்



இதுவரை திரைவானில் கண்டிராத
மயிர்கூச்செறியும் ரேக்ளா பந்தயமும்
தமிழ்நாட்டின் வீர விளையாட்டான
ஜல்லிக்கட்டு மாடுபிடி சண்டையும் கொண்ட...
தண்டாயுதபாணி பிலிம்ஸ் அளிக்கும்
தேவரின்
தாயில்லாக் குழந்தை
கலர் - ஜெமினி
கதை-தயாரிப்பு:
சாண்டோ M.M.A.சின்னப்பா தேவர்
டைரக்ஷன்
R.தியாகராஜன் B.Sc.
சென்னை வெலிங்டன் பிராட்வே மேகலா
மற்றும் தென்னாடெங்கும்

சிலம்புச் செல்வர்

ம.பொ.சி.



பிரம்மத்தை அறிந்த பிராமணனானதால் அவன் திருவரங்கத்துக்கும் திருவேங்கடத்துக்கும் சென்று விக்கிரகங்களை வழிபட்டுத்தான் பக்தி செலுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. எங்கும் எதிலும் இறைவருளைக் காணும் மனப் பக்குவம் பெற்றவன்தானே பிராமணனாக இருக்க முடியும்! இந்த உண்மையை மாங்காட்டு மறையவன் உணர்ந்தவன் என்பதைக் காட்டத்தான்,

'' 'என் கண் காட்டு' என்று
என் உளம் கவற்ற வந்தேன்''

என்று கூறுகிறான். மறையவன் தன் ஐம்புலன்களையும் இறை வழிபாட்டில் ஈடுபடுத்து மளவுக்குப் பக்குவப்பட்டவன். அதனால், அவனுடைய கண்கள் கடவுள் வடிவத்தையே காண விரும்பின. உள்ளமும் அவற்றோடு ஒத்துழைத்தது. ஞானியர்கள் தங்கள் கட்புலனையும் செவிப்புலனையும் இறை வழிபாட்டில் ஈடுபடுத்துவதற்காகத்தான் திருத்தலங்களுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். நாவுக்கரசரும், ''கண்காள் கேண்மின்களோ'', ''செவிகாள் கேண்மின்களோ'', ''கைகாள் கூப்பித் தொழீர்'', ''நெஞ்சே நீ நினையாய்'' என்று தம் புலன்களை இறை வழிபாட்டில் ஈடுபடுத்தும் வகையில் பாடியுள்ளார். ஆன்மா வேறு; ஐம்புலன்கள் வேறு. பிரம்மத்தோடு ஒன்றிய ஆன்மாவானாலும் புலன்களையும் இறை வழிபாட்டில் ஈடுபடுத்தவே திருத்தலங்களுக்கு ஞானியர் செல்வர்.

திருப்பதி மலையின் பூர்வம் முருகப் பெருமான் கோயில் இருந்திருக்க வேண்டும் என்றும், தமிழகத்தில் வைணவம் வலுப்பெற்ற காலத்திலே அம்முருகன் கோயில் திருமால் கோயிலாக மாற்றப்பட்டிருக்கலாம் என்றும் சிலர் கூறுகின்றனர். இதனை உண்மையெனக் கொள்வதற்கில்லை. சைவ–வைணவ சமயங்களிடையே தமிழகத்தில் போட்டியும் பூசலும் நிகழ்ந்ததும், திருக்கோயில்களிலே விக்கிரகங்களை மாற்றும் வித்தைகள் நடந்ததும் சிலப்பதிகாரக் காலத்துக்குப் பிற்பட்டதான இடைக்காலத்தில் ஆகும். கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலேயே தமிழகத்தின் வடக்கெல்லையிலுள்ள திருப்பதி மலையில் திருவேங்கடப் பெருமான் கோயில் கொண்டுள்ள செய்தி கூறப்படுவதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் மதுரையை நோக்கிப் புறப்பட்டு விட்டனர் என்றாலும், போகும் வழியை அவர்கள் அறிந்து வைத்திருக்கவில்லை. அதனால்,

'' மாமறை முதல்வ!
மதுரைச் செந்நெறி கூறு நீ''

என்று மறையவனைக் கேட்டனர். ''கோடை காலத்திலா பாலை நிலத்திலே பயணம் செய்து மதுரைக்குச் செல்லப் புறப்படுவது?'' என்று மிகுந்த அனுதாபத்தோடு கேட்கிறான் மறையவன். பின்னர், மதுரை செல்வதற்கு மூன்று வழிகள் உண்டு என்று கூறி, அந்த வழிகளின் தன்மையை விளக்குகின்றான்.

'' நெடும் பேர் அத்தம்
நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக்
கோட்டகம் புக்கால்
பிறை முடிக் கண்ணிப்
பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து
அருநெறி கவர்க்கும் ''

'' இந்நீண்ட பாலை வழியில் சென்று கொடும்பாளூருக்கும் நெடுங் குளத்துக்கும் இடைப்பட்ட கரையினைச் சேர்ந்தால், இளம் பிறையினை முடியில் கொண்ட சிவபெருமான் ஏந்திய முத்தலைச் சூலம்போல வழிகள் மூன்று பிளவுபட்டுப் பிரியும்'' என்று கூறினான் மாங்காட்டு மறையவன். அந்த வழிகளில் சென்றால் காணக்கூடிய அதிசயங்களையும் அந்தணன் வருணித்தான். அம்மூன்று வழிகளிலே நடுவில் உள்ள வழியிலே நடந்து சென்றனர்.

பகல் நேரத்தில் வெயில் கடுமையாக இருந்ததாலும், கடக்க வேண்டிய நெடு வழி பாலை நிலமாதலாலும், பகல் முழுவதும் ஓர் இடத்தில் தங்கி, இரவில் நிலா வெளிச்சத்திலே நடக்கலாமெனக் கோவலன் யோசனை கூறினான். கவுந்தியும் கண்ணகியும் அதற்கு இணங்கினர்.

நிலவின் ஒளியில் பயணஞ் செய்யும் கண்ணகியின் தோற்றம் எப்படி இருந்தது? அதனை இளங்கோ வருணிக்கக் கேட்போம் :


'' தாரகைக் கோவையும்
சந்தின் குழம்பும்
சீரின வளையொடு
சேரா தொழியவும்,
தாதுசேர் கழுநீர்த்
தண்பூம் பிணையல்
போதுசேர் பூங்குழல்
பொருந்தாது ஒழியவும்
பைந்தளிர் ஆரமொடு
பல்பூங் குறுமுறி
செந்தளிர் மேனி
சேராது ஒழியவும் ''

வறுமையின் வடிவமாகக் காட்சியளித்தாள் கண்ணகி. எப்படி? பாடலின் பொருளைப் பார்ப்போம். (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து.)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

This festive season gives the only gift that memories are made of.



The Agfa Isoly-I remembers.

10 professional features. 16 sharp, brilliant black and white or colour pictures on a single roll of 120 film.



Agfa®

ISOLY-I

Distributors:

AGFA-GEVAERT INDIA LIMITED

®Registered Trademark of Agfa-Gevaert, Antwerp/Leverkusen.
Manufacturers of Photographic Products.

Made by: **THE NEW INDIA INDUSTRIES LTD., Baroda • Bombay**

SIMOES/AG/76A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு

